வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.

மில்க்வைற் நீலசோப்




பிரகாசமாய் சலவை செய்கிறது

மில்க்வைற் சோப் தொழிற்சாலை யாழ்ப்பாணம்

புத்தகம் 17 | திருவள்ளுவர் ஆண்டு 1994 ஆடி திங்கள் 26-ம் நாள் (11—8—1963) ஞாயிற்றுக்கிழமை ரபி. அவ் 20 | இதழ் 11

# நிதிமந்திரி பிரதமராகும் வாய்ப்பு?

## வரவுசெலவுத்திட்டம் உருவாக்கிய சூழ்நிலை

### பீலிக்ஸ் கூற்று பொய்யாயிற்று

புரட்சிகரமான சில செயல்களைக் கொண்டு திரு. இலங்கரத்தின அரசியல் அதிகார பீடத்தில் ஏறி விடக் கூடுமெனவும் ஸ்ரீமதி பண்டாரநாயக்காவின் தலைமைப் பீடத்தை இச் செயல்களின் மூலம் அவர் கைப்பற்றி விடக் கூடுமெனவும் அரசியல் வட்டாரங்கள் சில அபிப்பிராயம் தெரிவித்துள்ளன.

அரிசி வெட்டினால் நெருக்கடியைத் தீர்க்கப் போவதாகக் கூறியும், நாட்டில் பண நெருக்கடி உருவாகி இருப்பதாகப் பயங்காட்டியும் வந்த திரு. பீலிக்சுக்கும், அவருக்கு ஒத்தாசை புரிந்த பிரதமருக்கும், புதிய வரவு செலவுத் திட்டம் தலை வேதனையை உருவாக்கியிருக்கிறது என்று கூறப்படுகிறது.

பட்ஜட் பிரசங்கத்தைத் தொடர்ந்துதான் இந்த அபிப்பிராயம் பலமடைந்திருக்கிறது ஏற்கனவே திரு. இலங்கரத்தினவின் ஆதரவாளர்கள், இவர் பிரதமர் பதவிக்குக் கட்டாயம் வந்துவிடுவார் என அவரது சாதகத்தில் காணப்படுவதாக ஒரு வதந்தியைக் கிளப்பி விட்டிருந்தார்கள்.

இந்த வதந்திகள் யாவும் பிரதமர் ஸ்ரீ மாவோவின் காது வரை சென்றுள்ளனவாம். இவ் வதந்திகள் பிரதமருக்குப் பெருங் கலக்கத்தை உண்டாக்கியிருக்கிறதாகவும் சிலர் கூறுகிறார்கள்.

இதற்கிடையில் திரு. இலங்கரத்தினவின் வரவு—

(9-ம் பக்கம் பார்க்க)

## சிங்கள அடையாளச் சீட்டுக்களை திருப்பி அனுப்புக

அடையாளச் சீட்டுகள் பெறுவதற்காக எம்மொழியில் விண்ணப்பிக்கின்றார்களோ, அதே மொழியில் சீட்டு வழங்குவதே முறை. தமிழிலோ ஆங்கிலத்திலோ விண்ணப்பிப்பவர்களுக்குத் தொடர்ந்து சிங்கள மொழியிலேயே தபால் இலாகா அடையாளச் சீட்டுகளை அனுப்பி வருகிறது. அநேகமாக இப்படியான சிங்கள அடையாளச் சீட்டுகள் பிழையாகவே நிரப்பப்படுகின்றன என்று பல முறை புகார் செய்யப்பட்டிருக்கிறது.

பரீட்சைக்குச் செல்ல வேண்டிய நெருக்கடி இருந்தும், பலர் சிங்களத்தில் அனுப்பப்படும் அடையாளச் சீட்டுகளைத் திருப்பி அனுப்பி விண்ணப்பித்த மொழியிலேயே சீட்டுகளைப் பெற்றுள்ளனர்.

இதே போன்று சிங்களத்தில் அடையாளச் சீட்டைப் பெறுபவர்கள் தங்கள் சீட்டுகளை உடனடியாகத் திருப்பி அனுப்பி விண்ணப்பித்த மொழியிலே அடையாளச் சீட்டுகளைப் பெறுவது அவசியம்.

ஊர்காவற்றுறை இடைத் தேர்தலில்

## தமிழரசு வேட்பாளரின் வெற்றி உறுதி

### உதிரிக் கட்சியினருக்கு பாடம் கற்பிக்க மக்கள் ஆவல்

ஊர்காவற்றுறை இடைத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி வேட்பாளர் திரு. நவரத்தினத்தின் வெற்றி நிச்சயம் என்றாகி விட்டது. தமிழ் பேசும் மக்களின் உரிமைப் போராட்டத்திற்குக் குந்தகம் விளைவிக்கும் உதிரிக் கட்சிப் பிரமுகர்களின் வேட்பாளராக முன் வந்திருக்கும் சுயேச்சை வேட்பாளரைக் கட்டுப் பணமுமின்றி மண் கவ்வ வைப்பதன் மூலம் மாற்றுக் கட்சிப் பிரமுகர்களுக்கு தகுந்த பாடம் கற்பிக்க வேண்டுமென்பதே தமிழரசுத் தொண்டர்கள் முயற்சியாகும்.



ஊர்காவற்றுறை இடைத் தேர்தலில் போட்டியிடும் இலங்கைத் தமிழரசுக் கட்சி வேட்பாளரான திரு. வி. நவரத்தினத்திற்கு கிராமங்களில் பெருமளவில் ஆதரவு பெருகி வருவதாக நமது நிருபர் தெரிவித்துள்ளார்.

திரு. நவரத்தினம் வெற்றி பெறுவது நிச்சயம் என்றும் ஆனால் எதிர்த்துப் போட்டியிடும் அபேட்சகரின் கட்டுப் பணத்தைக் காலியாக்கும் முயற்சியிலேயே தமிழரசுத்

(9-ம் பக்கம் பார்க்க)

# தமிழ் மொழிச் சட்டம் கிழித்தெறியப்படும்?

## செ-ப. ஒப்பந்தத்தின் கதி இதற்கும் ஏற்படுகிறது

பண்டாரநாயக்கா-செல்வநாயகம் ஒப்பந்தத்தின் கதி தமிழ் மொழி உபயோக விஷேட சட்டத்துக்கும் ஏற்படவிருப்பதாக நம்பிக்கையான ஒரு வட்டாரத்திலிருந்து தகவல் இடைத்திருக்கிறது.

மேற்படி தமிழ் மொழிச் சட்டம் நூற்றுக்கு நூறு விகிதம் சிங்களம் மட்டும் சட்டம் அமுலுக்கு தடையாக இருக்கிறதென்று அரசாங்க இலாகாக்களிலுள்ள 'பௌத்த பல வெகய' என்ற பௌத்த மத ஸ்தாபனத்தின் ஆதரவாளர்கள் புகார் செய்திருக்கிறார்களாம். இந்தப் புகார் பற்றி மேற்படி பௌத்த ஸ்தாபனத்தைச் சேர்ந்த திருவாளர்கள் எல். எச். மெத்தானந்தா, என். கியூ. டயஸ், நிசங்கா விஜயரத்தின ஆகியவர்களும் சில முக்கிய பௌத்த பிக்குகளும் ஆராய்ந்து வருவதாகவும் கூறப்படுகிறது.

எந்தத் துறையில் தமிழ் மொழி உபயோகச் சட்டம் சிங்களத்துக்கு 'இடையூறு' விளைவிக்கிற தென்பதைப் பற்றிய தகவல்களை பல இலாகாக்களிலுமுள்ள தமது

(9-ம் பக்கம் பார்க்க)

## சீனவுக்குத் தமிழர் ஏற்றுமதி?

### தூதராலயத்தினரின் துரித நடவடிக்கை

இலங்கையிலிருந்து சில தமிழர்களை சீனவுக்கு 'ஏற்றுமதி' செய்வதற்கான ஏற்பாடுகளை இலங்கையிலுள்ள சீனத் தூதுவராலயத்தைச் சேர்ந்த சிலர் சுறுசுறுப்பாகச் செய்து வருவதாகத் தகவல் கிடைத்துள்ளது.

சீனவின் யுத்த வெறிக் கொள்கைகளை ஆதரிப்பவர்களும் இங்குள்ள சீனத் தூதுவராலயத்திற்கு உள்நாட்டில் நடைபெறும் விஷயங்கள் பற்றி வேவு பார்த்துத் திரியும் சில சுய நலமிகளும்

(9-ம் பக்கம் பார்க்க)




சுகாதாரமான நவீன முறைப்படி கைபடாமல் தயாரிக்கப்பட்ட

ரோஸ் பிராண்ட் சுவீட்ஸ் டொபீஸ்

இலங்கையில் முதல் இடத்தை வகிப்பவை

ஒரு முறை சுவைத்தால் போதும்

மறுமுறை டொபி சுவீற்ஸ் வாங்கும்பொழுது

'ரோஸ்' பிராண்ட்

என்றே கேட்பீர்கள்.

# நடுநிலைமைக் கொள்கைக்கு குந்தகம் விளைவிக்கும் முயற்சியே "மரிடைம்" ஒப்பந்தம்

## பாரத நாட்டின் பாதுகாப்பிற்கு பாதகமான செயல்

## அரியணை உரை விவாதத்தில் உடுவில் பிரதிநிதி

இந்தியா மீது மீண்டும் சீனா தாக்குதல் நடாத்துவதற்குத் தன்னைத் தயார் படுத்திக் கொள்ளும் இச் சந்தர்ப்பத்தில், இலங்கை அரசாங்கம் இந்தியாவின் பாதுகாப்பிற்குப் பாதகம் விளைவிக்கக்கூடிய முறையில் சீனாவுடன் "மரிடைம்" ஒப்பந்தத்தைச் செய்து கொண்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தின் பலாபலன் இந்தியாவின் பாதுகாப்பிற்கு மட்டுமல்ல நமது நாட்டின் பாதுகாப்பிற்கும் மிகவும் ஆபத்தானதாகும். சீனாவுடன் இத்தகைய ஒரு ஆபத்தான ஒப்பந்தத்தைச் செய்து கொண்டு நடுநிலைமை வகிப்பதாக இலங்கை அரசு கூறுவது வேடிக்கையாக உள்ளது.

அரியணை உரை மீது மக்கள் சபையில் நடைபெற்ற விவாதத்தில் உரைநிகழ்த்துகையில் உடுவில் பிரதிநிதி திரு. வி. தர்மலிங்கம் இலங்கை அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கையில் உள்ள குழப்ப நிலைமையை எடுத்துக் காட்டி மேற்கண்டவாறு கூறினர்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் கூறியதாவது:—

கௌரவ சபாநாயகர் அவர்களே, இவ்வாண்டு சிம்மாசனப் பிரசங்கம் பாராளுமன்ற சம்பிரதாய அடிப்படையிலே அமைந்த சிம்மாசனப் பிரசங்கமாகத் தோன்றவில்லை; அது ஒரு கூட்டுத் தாபனத்தின் நிர்வாகிகள் மோசடி செய்து, அந்தக் கூட்டுத்தாபனத்தை வங்குரோத்தாக்கி, அந்த ஸ்தாபனத்தின் பங்காளிகளை ஏமாற்றுவதற்காகச் சமர்ப்பித்த ஒரு வர்த்தக திருகுதாள அறிக்கையாகும் என்று கூறினேன்.

இந்த அரசாங்கம் அயல்நாட்டு விவகாரங்களிலே நடுநிலைமை வகிக்கின்றது என்று கூறப்படுகின்றது. அந்தக் கூற்றையும் நான் நம்ப முடியாது என்று கூறினேன். ஏனென்றால், சமீபத்தில் சீனாவுக்கும் இந்த அரசாங்கத்துக்கும் இடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்தமொன்று அப்படியான ஒரு நம்பிக்கையை எங்களுக்கு அளிக்கவில்லை. அந்த ஒப்பந்தத்தைப் பற்றிச் சில தினங்களுக்கு முன் கௌரவ கைத்தொழில் அமைச்சர் அவர்கள் இலங்கை "ஒப்ஸேவர்" பத்திரிகையிலே பின்வருமாறு ஒரு அறிக்கையை வெளியிட்டார். "அந்த ஒப்பந்தத்தைப் பற்றி எவராவது தவறாக நினைக்க வேண்டாம். அது ஒரு சாதாரண ஒப்பந்தம். பல நாடுகளுடன் இவ்வித ஒப்பந்தத்தை இந்த அரசாங்கம் செய்திருக்கின்றது." நான் கௌரவ அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகின்றேன், இதுவரையிலே இந்த அரசாங்கம் வேறெந்த நாட்டுடனாவது இப்படியான ஓர் ஒப்பந்தத்தை, "மரிடைம்" ஒப்பந்தத்தைச் செய்திருக்கின்றதா என்று. அவ்விதம் நீங்கள் செய்திருக்கின்றீர்களென்றால் அதுபற்றி இந்தச் சபைக்குக் கூற முடியுமா? எங்களுக்கு நன்றாகத் தெரியும், இதுவரைக்கும் இந்த அரசாங்கம் எந்த நாட்டுடனாவது இப்படியான ஒரு "மரிடைம்" ஒப்பந்தத்தைச் செய்யவில்லையென்று. அது ஒரு சாதாரண ஒப்பந்தமாக இருக்கலாம். ஆனால், இன்று உலக அரசியல் இருக்கின்ற நிலையிலே இவ்விதமான ஓர் ஒப்பந்தம் எமது நாட்டை மிகவும் பாரதூரமான ஒரு நிலைக்குக் கொண்டு வந்துவிடும் என்பதை எவரும் மறுக்க முடியாது.

திரும்பவும் எல்லைத் தகராறு சம்பந்தமாக இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையே யுத்தம் மூளும் என்று இந்தியா பயப்படுகிறது. சமீபத்திலே பத்திரிகைகளிலே வெளிவந்த ஒரு புதினத்திலே நாம் கண்ணோட்டம் செலுத்துவது நன்று. அமெரிக்காவிலே இருக்கின்ற

**எமது போராட்டத்தை முறியடிக்க மிருகத்தனமான இராணுவ நடவடிக்கை எடுத்த உங்களுக்கு தென்வியட்நாம் பௌத்தர்களுக்காகப் பரிந்து பேச என்ன யோக்கியதை உண்டு?**

திரு. சௌத்திரி அவர்களை இந்தியப் பிரதமர் மீண்டும் இந்தியாவுக்குத் திரும்பும்படி. கூறியிருக்கின்றார். ஏனெனில், இந்தியாவின் எல்லைப் புறத்திலே சீனா மீண்டும் படைகளைக் குவித்து வருகின்றது என்று அறியக் கிடப்பதினாலாம். இப்படிப்பட்ட நிலையிலே எங்கள் அரசாங்கம் சீனாவுடன் இப்படிப்பட்ட ஓர் ஒப்பந்தத்தைச் செய்வது எங்கள் நாட்டுக்கு மிகவும் இடைஞ்சலை விளைவிக்கக் கூடுமென்பதை எவரும் மறுக்க முடியாது.

இது ஒரு சாதாரண ஒப்பந்தமாக இருக்கலாம். ஆனால் இந்த ஒப்பந்தத்திலே ஒரு நிபந்தனை இருக்கின்றது. அதனைக் கௌரவ சபையின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகின்றேன். இந்த ஒப்பந்தத்தை இரத்துச் செய்ய வேண்டுமென்றால், இலங்கை அல்லது சீனா ஆறு மாத கால அறிவித்தல் கொடுக்க வேண்டும். இப்படிப்பட்ட ஒரு நிலையை நீங்கள் சற்று ஆலோசித்துப் பார்க்க வேண்டும். அதாவது, திடீரென்று இந்தியாவுக்கும் சீனாவுக்கும் யுத்தம் ஆரம்பித்து விட்டது என வைத்துக்கொள்வோம். "சீனாவின் கப்பல்களை நீங்கள் உங்கள் துறைமுகத்துக்கு வரவிட வேண்டாம்; ஏனெனில், அது இந்தியாவின் பாதுகாப்புக்கு இடைஞ்சலாக இருக்கும்" என்று இந்தியா நம்மைக் கேட்குமென்றால் நீங்கள் என்ன கூறுவீர்கள்? "எங்களுக்கும் சீனாவுக்குமிடையே ஓர் ஒப்பந்தம் இருக்கின்றது; அந்த ஒப்பந்தத்தை உடனே இரத்துச் செய்ய முடியாது, அதை இரத்து செய்வதென்றால் ஆறு மாத காலத் தவணை வேண்டும்" என்று கூறுவீர்கள். ஆறு மாதத் தவணைக்குப் பின் தான் தங்களால் அதை ரத்து செய்ய முடியும் என்று எங்களுடைய அரசாங்கம் கூறும். அந்த ஆறு மாத காலத்தில் என்னென்ன நடக்குமோ தெரியாது. இந்த ஆறு மாதங்களுக்கிடையில் இந்தியாவோ அல்லது சீனாவோ எங்கள் நாட்டைக் கூடத் தாக்கலாம். சீனக் கப்பல்கள் எங்களுடைய துறைமுகத்தில் நிற்கும் காரணத்தால் இந்தியா எங்களையும் தாக்கலாம். ஆதலால் அந்த ஒப்பந்தத்தினால் பாரதூரமான பல் விளைவும் எங்கள் நாட்டுக்கு ஏற்படக் கூடும் என்று சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அடுத்ததாக, சிம்மாசனப் பிரசங்கத்திலே, தென்வியட்

(10-ம் பக்கம் பார்க்க)

ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கைகளுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, தேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூலவியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.

## கவிதைப் பூங்கா

### 'இன்னும் உறக்கம் எதற்கு?'

—"முருகு"—

போராட்ட மென்ன
புதுப்பாடமா உனக்கு
சேரன் பரம் பரையே
செப்புவாய்—பாராண்ட
கன்னித் தமிழ்ப் பெண்ணின்
கண்ணிறைய நீர் கண்டும்
இன்னும் உறக்கம் எதற்கு?

வீரம் பழித்த
விஜயன் கனகர்தனைப்
போரில் புறங்காட்டிப்
போந்தானே—சேரன்
மறந்தாயா உந்தன்
மறக்குலத்தை? இல்லை
இறந்தாயா? தூக்கம் எதற்கு?

தமிழைப் பழித்தவனைத்
தாய் தடுத்தும் கேளேன்
பழி துடைப்பே னென்ற
பரம் பரையே—இழிவு
செந்தமிழுக் கென்றால்,
சிறி யெழா திருத்தல்
எந்த வகை யென் றியம்பு?

ஒற்றையரசு
உள்ள வரை யுனது
நற்றமிழும் நாடும்
நலிவுறுமே—வெற்றியுடன்
எல்லை பிரித்து
இணையாட்சி காணுமட்டும்
தொல்லை சுமக்கத் துணி!

## கவிதை நெஞ்சம்

—யூ. எல். தாவூத்—

ஆண்டுகள் பற்பல அடுத்து வந்து
தோன்றி மறைந்தன; தோன்றல் மஹ்மூத்.
ஈண்டிடும் கலையின் ஏற்ற மோர்ந்து
மாண்புயர் கவிக்கு மாபெரும் பரிசில்

அளித்திடாச் செயலை ஆய்ந்து நொந்தார்
இழிய மதியினர் இயம்பிய கூற்றால்
எளிய வினையினை ஏற்றேன்; என்றும்
பழித்திட உலகம் பாதகம் புரிந்தேன்.

என்றன் நாட்டுக் கேற்றங் கொணர
எண்ணிய கவிஞர் எழிலார் கலையைச்
சிந்தித் தாயா(து) சிழ்மதி பூண்டு
புன்கண் வினையைப் புரிந்தே னென்று

மன்னர் நொந்தார்; வளமார் கவிக்கு
அன்று இழைத்த அவலம் மாய்க்க
உன்னிய மஹ்மூ த்உரிய பரிசில்
இன்றே ஈவேன் என்று எழுந்தார்.

அரசர் மாற்ற மறிந்த மக்கள்
தெருக்கள் நாப்பண் சேர்ந்து நின்று
குரல்க ளெழுப்பிக் கோனை வாழ்த்தி
பெருமகிழ் வடைந்து பேணின ராசை.

"புவியாள் மன்னர் பொன்னைப் பொலிய
கவியா ளன்னல் களிப்பா"ரென்று
நவில வுரவோர்; நகரைத் தாண்டி
கவியி னில்லங் காவலன் சேர்ந்தார்.

(தொடரும்)




வடலூரான், அனலைதீவு.

கே: நான் தென்னம்பிள்ளை பெறுவதற்காக தென்னை ஆராய்ச்சித் தோட்டத்துக்கு அனுப்பிய விண்ணப்பப் பத்திரத்துக்குப் பதில் சிங்களத்தில் வந்திருக்கிறது. இதை நான் என்ன செய்ய? நீர் இதற்கு ஓர் உபாயம் கூறும்?

ப: சிங்களக் கடிதத்தைத் திருப்பி அனுப்புங்கள், அதன் மொழி பெயர்ப்பைக் கேட்டு.

கே: அடங்காத் தமிழர் ஊர்காவற்றுறைத் தேர்தலில் ஏகமனதாக எல்லோரும் ஒன்றுபட்டு போட்டியில்லாமல் தன்னை அனுப்பும்படி தமிழரசுத் தந்தைக்குக் கடிதம் எழுதினாரே, இதிலிருந்து என்ன தெளிவாகிறது?

ப: குடுமியைப் பிடிக்க மூதூரில் முயன்றார். எட்டவில்லை. தலைகுப்புறத் தரையில் வீழ்ந்து மண்ணைக் கவ்வினார். எனவே ஊர்காவற்றுறையில் காலைப் பிடித்தார். பலிக்கவில்லை. இப்பொழுது சுய-இச்சைக்கு ஆலவட்டம் வீசுகிறார்.

ஃ

சி. சிவசுப்பிரமணியம், பண்ணாகம்.

கே: சிறீப் போராட்ட காலத்தில் அமரர் வன்னியசிங்கத்துடன் தோளோடு தோள் நின்று உழைத்த ஒரு பிரமுகர், இன்று சிங்களத்தில் 8-ம் வகுப்பு சித்தியாகி விட்டுள்ளார். இவரை என்ன சொல்வது குயுக்தியாரே?

ப: "விபீஷணர்" என்று சொல்லுங்கள். உடன் பிறந்தே கொல்லும் வியாதி.

ஃ

க. பூபதிப்பிள்ளை, கொழும்பு-2.

கே: திரு. சு. நடேசன் அவர்கள் தமிழ் மக்கள் சிங்களம் கற்பதற்குக் காலம் தேவை என்று சொல்லுகிறாரே, இதற்குத்தானா இவர் சிறிமாவுடன் பேச்சு வார்த்தை நடத்தினார்?

ப: அவர்தான் தனிச் சிங்களத்தை ஏற்றுக்கொண்டவராயிற்றே. ஆதலால் தான், காலம் தாழ்த்தியேனும் அதனைத் தமிழர் தொண்டையுள் திணித்து விடலாமென்று பார்க்கிறார். தமிழ் மொழியை ஆதரித்து அவர் அன்று சனப்பிரதிநிதிகள் சபையில் நிகழ்த்திய பிரசங்கத்தைச் செனட்டர் நல்லையா செனட் சபையில் வாசித்துக் காட்டி கொஞ்சமும் கருணையின்றி அவர் மானத்தை வாங்கிவிட்டாரே. பாவம்!

ஃ

க. குணசிங்கம், புங்குடுதீவு.

கே: ஊர்காவற்றுறை இடைக்காலத் தேர்தலில் தமிழ்க் காங்கிரஸ் சுயேச்சையை ஆதரிக்கக் காரணமென்ன?

ப: காங்கிரஸ் "வைக்கோற் போர் நாயை"ப் போன்றது. சொந்தமாகப் போட்டி போடவும் முடியவில்லை; தமிழரசுக் கட்சியைப் போட்டியின்றித் தெரிவு செய்ய இடமளிக்கவும் மனமில்லை. அதுதான் இந்த பல்டிக்குக் காரணம்.

கே: சிறிமா அரசாங்கம் 4 சத முத்திரையை 2 சதத்திற்கு விற்கிறதே, இது அரசாங்கத்திற்கு நட்டம் இல்லையா-அல்லது நாட்டுக்காக 2 சதத்தை தியாகம் செய்கிறதா?

ப: போதிய முத்திரைகள் கையிருப்பில் இல்லையாம். பொருட்களுக்கு ஏற்பட்ட பஞ்சம் முத்திரையிலும் கைவைத்துவிட்டது.

ஃ

செ. தனஞ்சயன், புங்குடுதீவு.

கே: ஊர்காவற்றுறை இடைத் தேர்தலில் போட்டியிடப் போவதாகத் தம்பட்டமடித்துத் திரிந்த தமிழ்க் காங்கிரஸ் ஏன் பதுங்கிக் கொண்டது?

ப: இதற்கு மூன்று காரணங்கள் உண்டு: (1) தலைவருக்கு நேரமில்லை. (2) காங்கிரஸ், கோஷ்டிகளாகப் பிரிந்து, கயிறு இழுப்பிலீடுபட்டுள்ளது. (3) போட்டியிட முன்வந்த ஞானமும், கட்டுப்பணம் கஜனாவுக்குச் சென்று விடுமோ என்ற பீதியில் பின் வாங்கினார்.

ஃ

அ. சிவப்பிரகாசம், ஏழாலை மேற்கு.

கே: சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேராத எவருக்கும் மந்திரிப் பதவி வழங்க முடியாது என்று கூறிய அம்மாவின் அரசாங்கம் தற்பொழுது எவ்விதம் கட்சி உறுப்பினர் இல்லாத திரு. ஏ. பி. பெரேராவை நீதி மந்திரியாக நியமித்தது?

ப: மந்திரி பதவி வகிக்கத் தகுந்த ஓர் ஆசாமி அக் கட்சியில் இல்லாததால்...

ஃ

நா. கதிர்வேல், கொழும்பு-9.

கே:—இந்து கலாசார பல்கலைக் கழகம் எப்பொழுது அமைக்கப் படும்?

ப: எல்லாம் கப்சிப்! பாவம் திரு. நடேசபிள்ளை! சிம்மாசனப் பிரசங்கத்திலோ, பட்ஜெட் பிரசங்கத்திலோ அதைப் பற்றி ஒரு சொல்கூடக்கிடையாது! பட்ஜெட்டில் அதற்காக ஒரு சதம் கூட ஒதுக்கப் படவில்லை. பிள்ளைவாளின் கனவு புஷ்வாணமாகி விட்டது.

ஃ

தமிழ்ச்செல்வன், கொழும்பு-14.

கே: நான் இலங்கையில் பிறந்தவன், எனது பிறந்த தினக் குறிப்பில் இந்தியத் தமிழன் என்று எழுதி இருக்கிறார்கள். இதனால் எதுவும் தகராறு உண்டா?

ப: உங்களின் தந்தையும் இலங்கையில் பிறந்திருந்தால்—பிறந்தால் மட்டும் போதாது, பிறந்ததாகப் பதிவு செய்யப்பட்டிருக்கவும் வேண்டும்—சட்டப்படி நீங்கள் வம்சாவளிப் பிரஜையாம். இல்லையேல் "நாடற்ற" பட்டாளத்துடன் நீங்களும் அணிவகுத்துச் செல்ல வேண்டியதுதான்.

ஃ

என். என் ஏ. அஸீஸ், கொழும்பு-10.

கே: தான் எவ்வளவோ முயற்சி செய்தும் முஸ்லிம்களின் பிரச்சினையைத் தீர்க்க முடியவில்லையென்று சேர் ராசிக் பரீத் ஒரு கூட்டத்தில் பேசியதாகப் பத்திரிகையில் பார்த்தேன். அப்படியானால் சோனகர் சங்கம் எதற்கு? கலைந்துவிட வேண்டியதுதானே!

ப: கைவசமுள்ளதைக் கலைத்து விட்டால், ஆயுட்காலத் தலைவராவதற்கு மற்றொரு சங்கத்தையல்லவா தேடியலைய வேண்டும்?

ஃ

சதா—அற்புதம், வெள்ளவத்தை.

கே: பொது எழுதுவினைஞர் சேவைப் பரீட்சையில் தமிழர்களுக்குப் பாரபட்சம் காட்டப்படவில்லையென்று திரு. ஏ. பி. ஜெயசூரியா 31-7-63ல் மூதவையில் கூறியதை நாம் நம்பத்தான் வேண்டுமா?

ப: கூறியதைச் செய்யும் வகையறாவைச் சேர்ந்தவர்களல்ல சுதந்திரக் கட்சி மந்திரிகள். பாரபட்சம் காட்டப்பட்டதாக கெஸட் அறிவிப்புகளைச் சுட்டி காட்டி புள்ளி விவரத்துடன் ருசுப்படுத்தியிருக்கிறது சுதந்திரன்.

கே: இவ்வருட 'பட்ஜெட்' பற்றி ஒரு வார்த்தை...!

ப: துணிக்கடை "ஷோ கேஸி"னுள் நிறுத்தப்பட்டுள்ள கவர்ச்சியான பொம்மையைப் போன்றது.

எம். எம். மர்ஜினா, கிண்ணியா-9.

கே: தமிழ் மொழி ஆட்சி மொழியாக வருமென மூதூர் இரண்டாவது பிரதிநிதி, ஜனுப் மஜீது ஒரு கூட்டத்தில் கூறினாரே, அவர் எதனைக் கொண்டு இப்படிக் கூறுகிறார்?

ப: தமிழ் பேசும் மக்களின் உரிமை போராட்டத்தின் முடிவு பற்றி அவரது சந்தேகமும் தீர்ந்துவிட்டதோ!

ஃ

க. சுப்பிரமணியம், காரைநகர்.

கே: முதல் இரவும், அடுத்த இரவும், ஒரு பெண்ணுக்கு எப்படி இருக்கும்?

ப: முதல் இரவில் ஆர்வம் எல்லை மீறிநிற்கும், அடுத்த இரவில் "பூ இவ்வளவுதானா?" என்றிருக்கும்.

கே: கந்தையா வைத்தியநாதனின் சமீபகாலப் பேச்சுக்களைக் கேட்டீர்களா?

ப: கேட்டேன்— மனுஷன் தும்பை விட்டு வாலைப் பிடிக்கிறார்.

ஃ

ஏ. சாமிநாதன், மடுல்கெல.

கே: இலங்கைத் தோட்டப்பகுதியில் வாழும் 10 லட்சம் உரிமையில்லா மக்களும் நமது தொழிலாளர் கழகத்தில் சேர்ந்தால் அரசாங்கம் என்ன நினைக்கும்?

ப: பிரஜாவுரிமை உட்பட எல்லாவுரிமைகளையும் கொடுத்துவிட வேண்டியதுதான் என்று முடிவு செய்துவிடும்.

ஃ

வீ. சிவலிங்கம், லுணுகலை.

கே: குடியுரிமை, மொழியுரிமை பறிக்கப்பட்டிருக்கும் மலைநாட்டு மக்களின் இன்னல்களை நீக்காத இ. தொ. கா. மலை நாட்டில் "அழகுராணி போட்டி" ஏற்படுத்த ஆவன செய்கிறதாம். இதனால் மலையக மக்களின் இழந்த உரிமைகளைப் பெற முடியுமா?

ப: உரிமைக்காக போராடத்தான் முடியவில்லை அழகுக்காகப் போட்டியாவது நடத்தட்டுமே!

ஃ

கே. எஸ். சிவம், சாவகச்சேரி.

கே: குமரிக்கும் குமாரிக்கும் உள்ள வேற்றுமை என்ன?

ப: கால் தான் வேற்றுமை.

ஃ


க. ச. க. பிள்ளை, கொழும்பு—6.

கே: தமிழ் பேசும் மக்கள் கோர்டுகளுக்கு செல்லாது தங்களுக்கிடையில் ஏற்படும் பிணக்குகளை இளைப்பாறிய நீதிபதிகளைத் தலைவர்களாகக் கொண்ட சபைகள் மூலம் தீர்வு கண்டால், அரசாங்கத்தின் வருமானத்தைக் குறைக்கலாம். தங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: சிறந்த யோசனை. "பஞ்சாயத்து" மூலம் சொந்தப் பிணக்குகளைத் தீர்த்துக் கொள்ளுதல் பல வகையிலும் நன்மை பயக்கும்.

திருவாளர்
**குயுக்தியார்**
மே/பா சுதந்திரன்
தபால் பெட்டி இல. 1183
கொழும்பு-12.

இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப் படும் வினாக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

**திறமாக நீர்ப்பாய்ச்சுவதற்குகந்த நம்பிக்கை வாய்ந்த பம்ப்.**

**விங்கெட்**

நிர்மாண இயந்திரங்கள் உற்பத்தி செய்யும் உலகப் பிரசித்தி பெற்ற மெஸ்ஸெர்ஸ் விங்கெட் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் தயாரிக்கப்பட்ட இந்த அடக்கமான உறுதி வாய்ந்த தண்ணீர் பம்ப்கள் அதிக காலம் மிகத் திறமான சேவையைத் தருகின்றன.

இவற்றின் பராமரிப்புச் செலவு மிக மிகக் குறைவு. மிகப் போட்டா போட்டி விலைகளில் கிடைக்கும். வில்லியர்ஸ் 4 ஸ்ரோக் பெற்ரோல்/மண்ணெண்ணெய் என்ஜின்கள் பாவனைக்குச் சிக்கனமானவை. எம்மிடம் அவற்றில் பலரக உப உறுப்புகள் உள்ளன. ஹோஸ் குழாய்களும், லைகஉருளைகளும் கிடைக்கும்.

1½" மொடல்- மணித்தியாலம் 1500-6000 கலன் இறைக்கிறது.

2" மொடல்- மணித்தியாலம் 1680-11000 கலன் இறைக்கிறது.

3" மொடல்- மணித்தியாலம் 4800-16809 கலன் இறைக்கிறது.

டிலிவரிக்கேற்ப ஹெட்டும், சக்ஷன் லிவ்ட்டும் தேவை.

ஆகக் கூடிய ஏற்றும் உயரம் 70 அடி

ஆகக் கூடிய உறிஞ்சும் ஆழம் 25 அடி

விற்பனையாளர்கள்

சண்முகம் ஸ்டோர்ஸ்,
222, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

ஏ. எஸ். அரசரத்தினம் அன் கோ,
11, ஸ்டான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

எம். எவ். நாகலிங்கம்,
பிரதான வீதி, பருத்தித்துறை.

ஜி. எச். ஏ. டி. சில்வா அன் கோ,
வவுனியா.

முழு விபரங்களுக்கு எங்களை விசாரிக்கவும்:

**கொழும்பு கொமர்ஷியல் கம்பெனி லிமிட்டெட்,**

[பெரிய பிரித்தானியாவில் இணைக்கப் பெற்றது. அங்கத்தவர் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.]

தபால் பெட்டி இல: 33, கொழும்பு-2.

காட்சி அறை: சேர் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, போன்: 79351.

சிங்களத் திணிப்பை

# எதிர்க்கும் ஊழியருக்கு தண்டனை?

## மானபங்கப்படுத்துவதே சிறந்த மார்க்கமாம்

"சிங்களத்தை எதிர்க்கும் அரசாங்க அதிகாரிகளின் பெயர்களையும், ஊழியர்களையும் விளம்பரப் பலகைகளில் எழுதி ஒவ்வொரு சந்தியிலும் தொங்க விடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன" என்று முக்கிய அரசியற் பிக்குகளில் ஒருவராகக் கருதப்படும் வண. தெவமெட்டாவே அமரசிங்க தேரோ சுதந்திரக் கட்சித் தொழிலாளர் கூட்டமொன்றில் கூறியதாக ஒரு செய்தியைச் சிங்களப் பத்திரிகைகள் இவ்வாரம் பிரகாசமாகப் பிரசுரித்துள்ளன.

## சிங்கள இதழ்களில்...

டாக்டர் என். எம். பெரேராவுக்கு சமசமாஜக் கட்சியின் மத்தியக் கமிட்டியிலும் திரு. பீட்டர் கெனமனுக்கு, டாக்டர் விக்கிரமசிங்காவுக்கும் கொம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியிலும் செல்வாக்குக் கிடையாதென்று சுதந்திரக் கட்சியின் பத்திரிகையான 'சிங்களே' இவ்வார இதழில் கூறுகிறது. என். எம். பெரேராவின் கருத்து சமசமாஜக்கட்சியின் கருத்து அல்லவென்றும், அவரது தலைமையைக் கட்சிமத்தியக் கமிட்டியில் பெரும்பாலோர் ஏற்றுக் கொள்வதில்லையென்றும் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வாவுக்கும் கட்சியினுள் அதே நிலைதான் என்றும் இப்பத்திரிகை எழுதுகிறது.

சம சமாஜக் கட்சியைச் சேர்ந்த திரு. எட்மண்ட் சமரக்கொடியின் கோஷ்டியும், கொம்யுனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. சண்முகதாஸன் கோஷ்டியும் சேர்ந்து தனியொரு கோஷ்டியாக ஏதோ செய்யப் போவதாகவும், திரு. சமரக்கொடி கோஷ்டி பற்றி மாஸ்கோ வெளியிட்ட பகிரங்க அறிக்கையால் இடதுசாரி ஐக்கிய முன்னணி முயற்சிக்குப் பலத்த அடி விழுந்திருப்பதாகவும் 'சிங்களே' கூறுகிறது.

### வலதுசாரி ஐக்கிய முன்னணி

ஐக்கிய தேசியக் கட்சி சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் வலதுசாரிக் கோஷ்டியுடன் ஓர் ஐக்கிய உடன்படிக்கை செய்து கொள்ளப் போவதாகத் தங்களுக்குத் தகவல் கிடைத்திருக்கிறதென 4-8-63ம் திகதி 'மகஜன எக்ஸத் பெரமுன' என்னும் எம். ஈ. பி. பத்திரிகை கூறுகிறது.

இதற்கு ஆதாரமாகப் பாராளுமன்றத்தில் சிம்மாசனப் பிரசங்கத்தின் மீது திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன பேசுகையில், யூ. என். பிக்கும் சுதந்திரக் கட்சிக்கும் உள்ள 'இரத்த உறவு' பற்றிக் குறிப்பிட்டதையும் இப்பத்திரிகை சுட்டிக் காட்டுகிறது.

சிங்களத் தினசரி 'தவஸ' 5 8-63ம் திகதி எழுதியுள்ள தலையங்கத்தில் தென்னிந்தியாவிலிருந்து 250 கள்ளிறக்கும் தொழிலாளர்களை இறக்குமதி செய்ய அரசாங்கம் செய்துள்ள முடிவைக் கண்டிக்கிறது.

'இங்குள்ள இந்தியர்களை இந்தியாவுக்குத் திருப்பி அனுப்புவதே கஷ்டமாயிருக்கிறது. இந்நிலையில் மென்மேலும் இந்தியர்களை இங்கு கொண்டு வருவது கேலிக் கூத்தாகும். இந்தியாவிலிருந்து வரும் ஒவ்வொரு இந்தியனுக்குப் பதிலாக இங்கிருந்து 12 இந்தியர்களைத் திருப்பி அனுப்ப வேண்டும். கள்ளிறக்கும் தொழிலாளர்களுக்குச் சிங்களவர் மத்தியில் பஞ்சமேற்பட்டால், வடக்கிலுள்ள தமிழர்களுக்காவது இந்த 250 வேலைகளையும் கொடுக்க வேண்டும்' என்று 'தவஸ'த் தலையங்கம் கூறுகிறது.

### நிழல்கள்

நிழல்கள் தொடர்கதை இடமின்மையால் இவ்வாரம் வெளி வரவில்லை. அடுத்த வாரம் முதல் தொடர்ந்து வெளிவரும்.

ஆ—ர்.

## அ. எ. வி. சங்க பிரசாரக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 8

அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் பிரசாரக் கூட்டம் ஒன்று எதிர்வரும் பத்தாம் திகதி சனிக்கிழமை மாலை ஐந்து மணிக்கு பருத்தித்துறைக் கடற்கரை மைதானத்தில் நடைபெறவிருக்கிறது. கூட்டத்திற்கு முன்னர் பருத்தித்துறைக் கிராமக் கோர்ட்டுக்கு அண்மையிலிருந்து ஒரு பெரிய ஊர்வலம் ஆரம்பமாகி கூட்ட மைதானத்தை வந்தடையும்.

கூட்டத்தில் உடுப்பிட்டித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. மு. சிவசிதம்பரம், பஸ் தொழிலாளர் சங்கப் பிரதிநிதி திரு. பீதாம்பரம், அரசாங்க எழுதுவினைஞர் சங்க முன்னாள் தலைவர் திரு. மு. தம்பிமுத்து இன்னும் பலர் உரை நிகழ்த்துவார்கள்.

## விவேகாநந்த சபையின் தமிழிசை விழா

கொழும்பு, ஆகஸ்ட், 8

கொழும்பு விவேகாநந்த சபையின் முதலாவது தமிழிசை விழா, சபை மண்டபத்தில் 31-8-63, 1-9-63 சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் நடாத்துவதற்கு ஒழுங்குகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இவ்விழாவில் வாய்ப்பாட்டு, வீணை, புல்லாங்குழல், கோட்டுவாத்தியம், ஜலதரங்கம், வில்லுப்பாட்டு, பரதநாட்டியம் ஆகிய நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

விழாவைத் திறந்து வைப்பதற்கு வெளிநாட்டுத் தூதுவர்கள் இருவர் அழைக்கப்பட்டுள்ளனர்.

## சந்தியில்...

இலங்கை மந்திரியாகவிருந்த ஒருவர் திடீரெனப் பதவி நீக்கம் செய்யப்பட்டார். மந்திரிப் பதவி போனாலும் வேறோர் பதவி அவருக்குக் கொடுக்கப்பட்டது.

மந்திரியாக விருக்கும் பொழுது அவர் இந்தியா சென்றிருந்தாராம். முன்னாள் இலங்கை மகா தேசாதிபதியாக விருந்து மனமுடைந்து சென்ற ஒருவரை இந்தியாவில் வைத்துக் கண்டு அளவளாவினாராம். இலங்கை திரும்பியதும் தமது சகாக்களுக்கோ, தமது கட்சி மேலிடத்தாருக்கோ இதையிட்டு எதுவுமே கூறவில்லையாம்.

மந்திரி—முன்னாள் மகா தேசாதிபதி சந்திப்பு சம்பந்தப் பட்ட விவகாரம் கட்சிக்குள் சலசலப்பை உண்டுபண்ணியதன் முடிவுதான் மந்திரிபதவி பறிமுதலில் முடிந்ததாம்.

கொழும்புப் பாடசாலை ஒன்றின் தலைமை ஆசிரியர், ஆசிரிய குலத்துக்கே அவமதிப்புத் தேடும் வகையில் நடந்து கொள்வதைக் கண்டு ஆசிரிய உலகமே அளவு கடந்த துக்கத்திலாழ்ந்துள்ளது.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டி ஒன்றினை ஏற்பாடு செய்யும் வகையில் அவர் அனுட்டித்த கீழ்த்தரமான செயல்களையிட்டு அம்மானுக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.

விளையாட்டுப் போட்டி உத்தியோகத்தர் தெரிவிலும், விளையாட்டுக்குரிய நாட்கள் குறிப்பிலும் மட்டுமல்லாமல், தமது ஆணைக்கு அடங்கி நடக்கக்கூடிய சில பள்ளிக்கூடங்கள் வெற்றியீட்ட வேண்டுமென்பதற்காகத் தாம் கடமை பார்க்கும் பள்ளிக்கூட விளையாட்டு வீரர்களைப் போட்டிக்கு விடாது 'பெரிய மனது' பண்ணியதாகவும் அறிகிறோம்.

ஆசிரியர்களுக்கு இத்துறையில் உழைக்க ஒரு செயற்குழு இருக்கிறது. பலதுறையில் பணமும் சேர்க்கப்பட்டது. ஆனால் நிதிப் பொறுப்பை ஏற்ற பொருளாளரிடம் எதுவித கணக்கும் கிடையாதாம். அவரிடம் ஒரே ஒரு பாடசாலை அனுப்பிய பணம் மட்டும் போய்ச் சேர்ந்து, ஒரே ஒரு பற்றுச் சீட்டு (புத்தகத்தின் முதல் இலக்கச் சீட்டு) மட்டுமே கிழிக்கப் பட்டுள்ளது.

பெரும்பான்மைச் சமூகம் சிறுபான்மை இனங்களை அடிமைப்படுத்தும் இவ்வேளையில் சலுகைகளை யாசிக்கும் ஒரு சிலர் பெரும்பான்மையினரின் தயவை நாடி தன்மானமிழந்து தரங்கெடுவது கண் கூடு.

இப்பொழுதெல்லாம் தமிழ் பகுதிகளுக்கு சிங்களக் கலைகளும் நடனங்களும் தருவிக்கப்படுகின்றன. ஒரு இனத்தை மறு இனம் மதிக்கும் நிலையில் இவை வரவேற்கத் தக்கதே. ஆனால் இன்றுள்ள நிலையில்...?

பெரிய கல்லாறு சிவசுப்பிரமணியர் ஆலய விழாவிலும் கண்டிய நடனம் இடம் பெறும் என்ற விளம்பரம் கண்டோம்: இது அவசியந்தானா?

## மாவிட்டபுரத்தில் அருணகிரிநாதர் இசை விழா

### முத்தமிழ்க் கலை மன்றம் நடாத்துகிறது

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 8

மாவிட்டபுரம் முத்தமிழ்க் கலை மன்றம், மாவிட்டபுரம் கந்தசுவாமிகோவிற் தெற்கு வீதியில், அருணகிரிநாதர் அரங்கில், 15-8-63 வியாழக்கிழமையன்றும், 16-8-63 வெள்ளிக்கிழமையன்றும் அருணகிரிநாதர் இசை விழாவினை நடாத்த ஒழுங்கு செய்துள்ளது. இவ்விரு தினங்களிலும் மாலை 5-30 மணி தொடக்கம் 12 மணி வரை இசை, நாடக நிகழ்ச்சிகள் விழாவில் இடம் பெறும்.

சிவ ஸ்ரீ அப்பலவாணரின் வாள் வித்தையும், திரு. ஏ. ரி. பொன்னுத்துரை பி. ஏ. அவர்கள் தயாரித்த 'பாசக்குரல்' நாடகமும், முத்தமிழ் மன்றச் சங்கீத மாணவ, மாணவிகளினதும் இன்னிசை விருந்தும், மற்றும் பிரபல சங்கீத வித்துவான்களினதும் இன்னிசை விருந்தும் இசை விழாவில் விசேஷ நிகழ்ச்சிகளாக அமையும்.

இவ்விசை விழாவை நடாத்தும் முத்தமிழ்க் கலை மன்றம் கடந்த ஏழு வருடங்களுக்கும் மேலாகக் கலைத் துறையில் அரிய சேவைகளாற்றி வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

## பரதகுல மக்கள் கொண்டாடும் பனிமய மாதா திருநாள்

கொழும்பு, ஆகஸ்ட், 8

கொழும்பு நொரிஸ்ரோட்டிலுள்ள செசன்ற் பிலிப் நேரியார் தேவாலயத்தில் பரதகுல மக்களால் பனிமய மாதா திருநாள் ரத பவனி ஞாயிறு தினம் (11-8-63) அன்று ஊர்வலத்துடன் கொண்டாடப்படும்.

விழா உற்சவம், நவநாள் பிரார்த்தனை, பிரசங்கம், யாவும் நடைபெற்றாகி, ஞாயிறு தினம் திவ்ய பலி பூசைகள் பல நடந்து பெரிய பாடற் பூசையும், அதன் பின் ஜெப பூசையும் நடக்க, மாலை 5-00 மணியளவில் பனிமய மாதா சுரூபத்தை ரத பவனி மூலம் முக்கிய பல வீதிகள் தோறும் ஊர்வலமாகக் கொண்டு செல்வர். ஜெபமாலை, ஆவே மாரிஸ் ஸ்டெல்லா கீதங்கள் பாசமாய் மிளிர, பரதகுல மக்கள் திருநாளை மிக மேன்மையாகக் கொண்டாடுகிறார்கள்.





ராஜபீடி ஸ்பெஷல்

இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும் எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்

ராஜ பீடி ஸ்பெஷல் ஒன்றேதான்

புகைத்து பலனடையுங்கள்

ராஜாபீடி கம்பனி

கொழும்பு-14.

# பதுளையில் இ. தொ. கழக விஸ்தரிப்பு

# மொழியுரிமையும் குடியுரிமையும் மலையக மக்களின் விழிகள்

## கண்ணிழந்த குருடராய் நாம் வாழ முடியுமா?

## முடியாதாகையால் செல்வோம் தமிழரசுப் பாதையில்

**ஞா. பெ. அல்பிறெட்**

மலைநாட்டு மக்கள் தமிழ் மொழியுரிமைக்காகப் போராடுதல் அர்த்தமற்ற செய்கையென்றும், மலையக மாணவர்கள் சிங்களம் படிக்க வேண்டுமென மறைமுகமாக வற்புறுத்தியும் எழுதப்பட்ட கட்டுரையொன்று ஒரு தமிழ்த் தினசரியில் பிரசுரமாகியிருந்ததையொட்டி திரு. அல்பிறெட் இக் கட்டுரையை எழுதியுள்ளார்.

மலைநாட்டு மக்களை உயிரற்ற சடலங்களாக, உணர்வற்ற பிண்டங்களாக, அரசியற் பகடையிற் சொக்கட்டான் காய்களாக எண்ணியிருக்கின்றனர் போலும் சில கண்ணியமற்ற சுயநலக் காரர்கள். நாலா வழியாலும் இடர் பட்டு வாழும் இவர்களை, ஏதாவது ஒரு வழியில் அமுக்கிவிட இவர்கள் ஆலோசிக்கின்றனர் போலும். ஆலையில் கரும்பு போலும், ஆழியிற் துரும்பு போலும் வாழ்க்கையில துன்பப்படும் இவர்களுக்கு ஆறுதலளிக்க வல்லமையில்லாதவர்கள், மாறுதலான கருத்துக்களைச் சொல்லாமலும் இருந்தால் அது ரொம்ப நல்லாயிருக்கும். உதவி செய்ய முடியாதவர்கள் உபத்திரமாவது கொடாமல் இருந்தால் மேலல்லவா?

மலையக மக்கள் இன்று இருக்கும் நிலையில் அவர்கள் இரு கண்களையும் இழந்து வாழும் குருடர்களாகவே வாழுகின்றனர். ஒரு கண்ணாகிய குடியுரிமை, மறு கண்ணாகிய மொழியுரிமை இவ்விரு கண்களையும் இழந்துதான் இன்று வரை இடர்ப்படுகின்றார்கள் மலைநாட்டுத் தமிழ் மக்கள். இவர்கள் பிறவியிற் குருடர்களாக இருக்கவில்லை. பிற்பாடுதான் குத்திக் கெடுக்கப்பட்டார்கள். இன்று வரைக்கும் இவர்களை வழி நடாத்துவதற்கு, இவர்களது வாழ்வில் இருள் நீங்கி ஒளி பெறச் செய்வதற்கு உதவியவர்கள் யாருமே இல்லையெனலாம். இருந்திருந்தால் கடந்த இருபது வருடங்களாக இந்த நிலையிலா வாழ்ந்து கொண்டிருப்பார்கள் மலைநாட்டு மக்கள்?

### உரிமைகள் பறித்தனர்

யூ. என். பி. அரசாங்கம் இவர்களுக்கெதிராகச் சட்டங்களை இயற்றி இவர்களது குடியுரிமை, வாக்குரிமைகளைப் பறித்தெடுத்தது. அடுத்து வந்த சிங்கள அரசாங்கங்களும் குறிப்பாகச் சிங்கள மோகங்கொண்ட சிறிமாவோ அரசாங்கமும் தங்கியிருந்த இதர உரிமைகளையும் பறித்தெடுத்துப் பாதாளத்தே தள்ளிக் கொண்டிருக்கின்றது.

இவ்வாறாக எல்லா உரிமைகளையும் இழந்து தவிக்கும் இவர்களுக்கு "சிங்களம் படியுங்கள் மங்களமான வாழ்வு பெறுவீர்கள்" என்று போதனை வேறு பண்ணி வருகின்றார்கள் சில பாதகர்கள். உயிர் போவதாயிருந்தாலுங்கூடத் தங்கள் உரிமைகளை நிலைநாட்டத் தயங்க மாட்டார்கள் எங்கள் உயர்குடித் தமிழ் மக்கள் என்பதை இந்த உணர்ச்சியற்ற "தெமள மினியாக்கள்" உணர்வார்களா?

### பாரதி சொன்னது இவர்களையோ?

படித்தவர்களாகப் பட்டம்பெற்றவர்களாக, பணக்காரர்களாக இருக்கலாம். பண்பென்பதே இவர்களிடம் கிடையாதா? இவர்களும் தமிழர்கள்தாமா? தாய் மொழிப் பற்று, தன்மான உணர்வு என்பதெல்லாம் இவர்களிடம் இம்மியளவென்கிலும் இல்லைப் போல் தெரிகின்றதே. இவர்களை எண்ணித்தானோ என்னவோ,

> "மானம் சிறிதென்றெண்ணி
> வாழ்வு பெரிதென்றெண்
> ணும் இவர்கள்
> சொந்தச் சகோதரர்கள்
> துன்பத்தில் சாதல் கண்டும்
> சிந்தை இரங்காரடீ"

என்று பாரதியார் கூடப் பாடி வைத்துச் சென்றார் போலும். இது மட்டுமா, இன்னமும் பாடியிருக்கின்றார் பாரதியார். வீட்டு மொழி, பண்பு, இவை பற்றிப் புரியாதவர்கள், அதில் பற்றுக்கொள்ளாதவர்கள், வேறு மொழி, பண்பு பற்றிப் போற்றுபவர்கள் இருக்கிறார்களே அவர்களை எண்ணித்தான்,

> வேறு வேறு பாஷைகள் —
> கற்பாய் நீ
> வீட்டு வார்த்தைகள் கற்கிலாய்
> போ, போ, போ,

என்று பழித்துக் கூறிப் பாட்டிலே கூட அமைத்துக் காட்டியிருக்கின்றார் பாரதியார்.

### நாம் ஏன் சிங்களம் படிக்கக் கூடாது?

சிங்களம் படிப்பதில்லை என்பது எங்களது வீண் பிடிவாதமுமில்லை, வகுப்புவாதக் கூச்சலுமில்லை. சிங்களம் படித்தால் எங்களது தாய் மொழிக்கு—அன்னை மொழியாம் தமிழ் மொழிக்கு அரியாசனத்திலே சரியாசனம் கிடைக்காமல் போய்விடுமே இது நாமாகத் தமிழ்த் தாய்க்கு வலிந்து செய்யும் துரோகமாகுமே என்று அஞ்சித்தான். தமிழுக்குச் சம உரிமை கிட்டும் வரை, சிங்களத்தைப் படிப்பதில்லையெனச் சபதம் பூண்டுள்ளனர் சிங்கத் தமிழ் மக்கள்.

மலைநாட்டு மக்களும் தமிழ் நாட்டுப் பரம்பரைதான். அவர்களும் தமிழர்கள்தான். தமிழ்ப் பற்று அவர்களிடமும் உண்டு. ஆகவேதான் தங்கள் மொழிக்கு உரிமை கிடைக்கும் வரை சிங்களத்தைப் படிப்பதற்கு அவர்களும் உடன்படப் போவதில்லை. பெரும்பான்மையோருக்குப் பயந்தோ, அல்லது அவர்களிடம் சில சலுகைகளுக்காக இரந்தோ சிங்களம் படிக்கமாட்டார்கள் மலைநாட்டு மாணவர்கள்.

> வீர சுதந்திரம் வேண்டி
> நிற்பார்—இங்கு
> வேறென்ன வேண்டி நிற்பார்?

### உயிரின்றி உடல் வாழுமா?

உரிமைகள் எதுவுமின்றி வாழும் மலைநாட்டு மக்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போராடவே வேண்டும். குடியுரிமை அவர்களது முக்கிய பிரச்சினையாக இருப்பதால் அதற்காக முன்னின்று போராட வேண்டியதும் உண்மைதான்.

அதற்காக அவர்கள் மொழியுரிமைப் போராட்டத்தை விட்டு, குடியுரிமைக்கென்று மட்டும் போராட்டத்தைத் தொடங்கினால், "நரியின் காலை விட்டு மர வேரைக் கௌவிய முதலையை"ப் போல ஏமாற்றந்தான் அடைவார்கள்.

அவர்களுக்கு இரு உரிமைகளும் இரு கண்களுக்குச் சமம். ஆகவே இரு உரிமைகளுக்காகவுந்தான் போராட வேண்டியிருக்கின்றது. உடலும் உயிரும் ஒன்றிருந்தால்தான் உலகில் வாழலாம். உயிர் இன்றி உடல் மட்டும் இருந்தால் எப்படி வாழ்வது? அதே போல்தான் மொழி உரிமை என்னும் உயிர் இல்லாமல், குடியுரிமை என்னும் உடல் மட்டும் பெற்று உலகில் வாழ முடியாது. மொழியுரிமையின்றி இதர உரிமைகள் மட்டும் பெற்று உயிர் வாழ்வதற்கு ஒரு தமிழனும் ஒருப்பட மாட்டான். தன் தாயைக் கொன்று பிறர் தாயைப் போற்றும் தனையன் ஒருவன் இருந்தாலுங்கூட, தன் மொழியை அழித்துப் பிறர் மொழியைப் போற்றும் தமிழன் ஒருவனும் இருக்க மாட்டான் என்பதை எடுத்துக் கூறித்தானாக வேண்டும்.

### சிங்களம் படித்தும் பயனில்லை

சிங்களம் படிப்பதா, இல்லையா என்ற பிரச்சினையோடு மலைநாட்டு மாணவர்கள் தலையை உடைக்கத் தேவையில்லை. சிங்களம் படித்த பிற்பாடு உத்தியோகம் கிடைக்கும் என்பது பகற்கனவு. அண்மையில் நடந்தேறிவரும் மத்திய எழுது வினைஞர் தெரிவே அதற்குச் சான்று பகருகின்றது.

மேலும், சிங்களம் படித்தால் பிரஜாவுரிமை கிடைக்கும் என்று எண்ணுவோமேயானால், அதுவும் நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதாகும்.

எனவே, "சிங்களம் படியுங்கள்" என்று சில சந்தர்ப்பவாதிகள் சொன்னால், "எங்களுக்கு முடியாது, தமிழுரிமை கிட்டும் வரை சிங்களம் படிக்க மாட்டோம்" என்று திடமாகக் கூறுங்கள்.

(13-ம் பக்கம் பார்க்க)

## கட்டுரைப் போட்டி

மலைநாட்டைச் சேர்ந்த மாணவ, மாணவிகளுக்கும், இளைஞர்களுக்கும், இளம் பெண்களுக்கும் வாய்ப்பளிக்கும் முனைப்பாக மலையகமெங்கும் மலைநாட்டு வாலிபர் சங்கம் ஒரு கட்டுரைப் போட்டி நடத்த ஏற்பாடுகள் செய்து வருகின்றது.

இப்போட்டியில் பங்கு கொள்ளும் 19 வயதிற்கு மேற்பட்ட இளைஞர்களும் பெண்களும், ஆகஸ்ட் மாதம் இறுதிக்குள் (1) மலைநாட்டு மக்களின் எதிர்காலம் (2) மலையக முன்னேற்றத்தில் இளைஞர் பங்கு (3) அரசியல் சமத்துவம் என்னும் தலைப்புகளில் ஒன்றைப் பற்றி 5000 சொற்களுக்குள் கட்டுரை எழுதி அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மாணவ, மாணவிகள் போட்டி சம்பந்தமான விபரங்களை அறிய செயலாளர் மலைநாட்டு வாலிபர் சங்கம், 12, லேடி கோர்ட்டன்ஸ் வீதி, கண்டி, என்னும் முகவரியோடு கல்லூரி வாயிலாகவோ, தனிப்பட்டோ தொடர்பு கொள்ளலாம்.

# ஊவா மாகாணம் கழகத்தின் கோட்டையாகலாம்

இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் நடவடிக்கைகள் ஊவா மாகாணத்துக்கும் விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றன. கழகத்தின் அலுவலகம் பதுளை நகரில் லோவர் வீதியிலுள்ள 132ம் இலக்க இல்லத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தோட்டத் தொழிலாளர் யூனியனின் முன்னை நாள் பொதுச் செயலாளர் திரு. எஸ். செல்லையா அவர்களின் தலைமையின் கீழ் இயங்கி வந்த அகில இலங்கை ஐக்கிய தோட்டத் தொழிலாளர் யூனியனில் பதுளை மாவட்டப் பிரதிநிதிகளாக இருந்து வந்த திருவாளர்கள் என். ஆர். பழனியாண்டியும், எம். ஐ. எம். ஹம்தூன் அவர்களும் தொழிலாளர் கழகத்தில் சேர்ந்து விட்டனர்.

திரு. என். ஆர். பழனியாண்டி அவர்களை பதுளை மாவட்டப் பிரதிநிதியாகவும், திரு. ஹம்தூன் அவர்களை பதுளை மாவட்ட மேலதிக பிரதிநிதியாகவும் கழகம் நியமித்துள்ளது. திருவாளர்கள் பழனியாண்டியும், ஹம்தூனும் சிறந்த தொழிற் சங்க ஊழியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கழக நடவடிக்கைகளை ஊவா மாகாணத்திற்கு விஸ்தரிப்பது சம்பந்தமாக கடந்த வாரம் ஊவா மாகாணத்தில் லுணுகலை, பசறை, ஹேப்டன், எட்டாம்பிட்டிய, நமுனுகலை, அப்புத்தளை ஆகிய பகுதிகளில் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டுத் திரும்பியுள்ள கழக துணைத் தலைவர் திரு. ரெ. ம. ராமையா "கழகத்திற்கு ஊவா மாகாணம் முழுதும் செல்வாக்கு இருந்து வருவதாகவும், கூடிய விரைவில் ஊவா மாகாணம் கழகத்தின் கோட்டையாகத் திகழும்" என்றும் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

சோதனையில் சித்தி பெறவும், படித்த பாடங்கள் மனதில் இருக்கவும் லேசான வழி உண்டு.

உடன் எழுதுங்கள்


பி எம். திசாநாயக கம்பனி.

வீட்டிற்கு ஒரு ஆஸ்தி!

"மினேர்வா"

தையல் மெஷின்

தரத்திலும் உழைப்பிலும் எவற்றிற்கும் சளைத்ததல்ல!



MINERVA 126

அழகிய வேலைப்பாடு! நுணுக்கமான தயாரிப்பு!
3 லாச்சிகள் கொண்ட கெபினட்
விலையில் புதிய வரி இடம்பெறவில்லை

ஏக விநியோகஸ்தர்கள்:-

சென்ற் அந்தனீஸ்,

ஹாட்வெயர் ஸ்டோர்ஸ் லிமிட்.,

516, ஸ்கின்னேர்ஸ் ரேட் தெற்கு, கொழும்பு-10.

டெலிபோன்: 4261—2, 3

# இளைஞர் எழுச்சிக்கு நகரசபை பணிந்தது

## மக்கள் குரல்

### திரு. சுப்பையா நடேசன் அவர்களுக்கு..

நம்மைச் செனேட்டர் பதவியில் அமர்த்தியதற்காக, திரு. சுப்பையா நடேசபிள்ளை அவர்கள், அரசாங்கத்தை மகிழ்விக்கும் முறையில் தமது நன்றியைத் தெரிவிப்பதற்காக ஈடுபடும் பல செயல்களும் வேடிக்கைக்குரியனவாயிருக்கின்றன.

திரு. நடேசனது கடந்த கால சரித்திரத்தைத் தமிழ் பேசும் மக்கள் மறந்துவிட்டார்களென்று அவர் நினைத்தால், அது தவருகும்.

1956ம் ஆண்டு, ஜனவரி மாதம் 20ம் திகதியன்று, மொழிப்பிரச்சினையையிட்டு யூ. என். பி. அரசாங்கத்தினின்றும் விலகி எதிர்க்கட்சிப் பக்கம் மாறிய பொழுது திரு. நடேசன் ஜனப்பிரதிகள் சபையில் சொற்பொழிவாற்றினர் பின்வருமாறு:

"கலாச்சாரப் பெருமை வாய்ந்த, தொன்மைக் கலாச்சார மொழியான இந்த மொழி, இந்த நாட்டில் இரண்டாந்தர இடத்துக்குத் தள்ளப்படுவதைச் சுய கௌரவமுள்ள எந்தவொரு தமிழனும் விடமாட்டான்."

பின்னர், அதே பேச்சில் இன்னொரு இடத்தில், "......எங்களுடைய விருப்பத்திற்கெதிராக எங்கள் மீது ஒரு மொழி திணிக்கப்படுமேயானல், நாங்கள் எதிர்க்கவே வேண்டும்; எதிர்க்கவே செய்வோம்" என்றும் திரு. சுப்பையா நடேசபிள்ளை கூறியிருந்தார்.

1955ம் ஆண்டில், ஜனப்பிரதிகள் சபையில், சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்து கோரும் பிரேரணையொன்றைச் சமர்ப்பித்து, அதன் மீது பேசிக்கொண்டிருந்தடாக்டர் என். எம். பெரேரா, "......எனது அருமை நண்பர், கௌரவ தபால், ஒலிபரப்பு மந்திரி அவர்களிடம் "நீங்கள் சிங்களம் படிக்க வேண்டும்" என்று நான் சொல்லத் தயாரில்லை; ஆனல், அவர் "நான் தயார்" என்று என்னிடம் சொன்னல், நான் அவரை அணைத்துக் கொள்வேன்" என்று குறிப்பிட்டார். அதற்குத் திரு. சு. நடேசபிள்ளை "நான் ஒருபோதும் அப்படிச் சொல்லமாட்டேன்" என்று பதிலளித்தார்.

திரு. நடேசபிள்ளை அவர்களே! உங்கள் சுய மரியாதை இப்போது எங்கே? விருப்பமில்லாத தமிழ் பேசும் மக்கள் மீது சிங்களம் திணிக்கப்படுவதற்கெதிராக நீங்கள் இப்போது என்ன போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறீர்கள்? சிங்கள மொழி அரசகரும மொழியாக்கப்படும் பட்சத்தில், ஏற்கனவே உத்தியோகம் பார்க்கும் தமிழ் பேசும் உத்தியோகத்தர்களுக்கு, எவ்வித இடையூறும் விளைவிக்காத விதத்தில் அது அமுலாக்கப்படவேண்டுமெனப் பல முறையும் பாராளுமன்றத்திலும், அதற்கு வெளியேயும் கூறிவந்துள்ள, காலஞ்சென்ற திரு. பண்டாரநாயக்காவின் கொள்கைகளையே குழி தோண்டிப் புதைத்து, எமது இனத்துக்கெதிரான சதி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் இந்த இனவெறி பிடித்த அரசாங்கத்துக்குச் சேவகம் செய்கிறீர்களே! இப்பொழுது என்ன சொல்கிறீர்கள், திரு. நடேசபிள்ளை அவர்களே?

திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அன்று ஐம்பதுக்கைம்பது கேட்டபொழுது, உமது துரோகத் தன்மையைக் காட்டினீர். இப்பொழுது, அதே துரோகச் சரித்திரத்தைத் தொடர்கிறீர். உமக்குக் காலம்தான் பதில் சொல்லும்.

எஸ். தியாகராசா
கொழும்பு

## நீர் கொழும்பில் சிங்கள நிர்வாகத்துக்கு எதிர்ப்பு

நீர்கொழும்பு மா நகரசபை தனது அலுவல்களைத் தனிச் சிங்களத்தில் நடாத்த முயற்சிப்பது பற்றியும், மா நகரசபை நூல் நிலையத்தில் நடைபெறும் தமிழ் ஒழிப்புப் பற்றியும் 28-7-63 'சுதந்திரனி'ல் வெளியிட்டிருந்தோம். அப்பகுதி இளைஞர்களின் எழுச்சியால் இப்போது மா நகரசபை நூல் நிலையத்தில் தமிழ் தெரிந்த ஒருவர் மேற்பார்வையாளராக நியமிக்கப்படுவதற்குச் சில முயற்சிகளை மா நகரசபை மேற்கொண்டுள்ளது என அறிகிறோம்.

எழுபது சத விதம் தமிழ் பேசும் மக்களைக் கொண்ட நீர்கொழும்பு மா நகரசபை தனது அலுவல்கள் அனைத்தையும் தனிச் சிங்களத்தில் நடாத்துவதற்கு எடுக்கும் முயற்சிகளுக்கு நீர்கொழும்பு பெரியதெரு வாலிப முற்போக்குச் சங்கம் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. மேலும் மா நகரசபையின் நூல் நிலையத்திலும் தமிழ் ஒதுக்கப்படுகிறது. 800க்கு மேற்பட்ட ஆங்கில நூல்களையும் 400க்கு மேற்பட்ட சிங்கள நூல்களையும் கொண்ட மா நகரசபை நூல் நிலையத்தில் முப்பதுக்கும் உட்பட்ட தமிழ் நூல்களே உள்ளன.

### எதிர்ப்பு

இந் நூல் நிலையத்திற்கு மேற்பார்வையாளர்களாக மூவர் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் எவரும் தமிழ் மொழி தெரிந்தவர் அல்லர். இதனல் அப்பகுதி இளைஞர்கள் நூல் நிலையத்தைப் பயன்படுத்த முடியாத கஷ்டத்திற்கு ஆளாகியுள்ளனர். இது பற்றியும் பெருந் தெரு வாலிப முற்போக்குச் சங்கத்தினர் மா நகரசபை ஆணையாளருக்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தார்கள்.

### பதில்

இதற்கு மா நகர சபை ஆணையாளர் அனுப்பியுள்ள பதில் பின்வருமாறு:- 'நூல் நிலைய அலுவலர் நியமன விஷயத்தில், இம் மா நகர சபைக்கு ஒரு விதத் தொடர்பும் கிடையாது. இந் நியமனம் ஸ்தல ஸ்தாபன சேவைக் குழுவினல் செய்யப்பட்டது. இப்போது நூல் நிலைய அலுவலராகக் கடமையாற்றுபவர் இச் சபையினல் நியமிக்கப்பட்டவரல்லர். மேலும் இந் நூல் நிலையத்திற்குத் தமிழ் தெரிந்த ஒருவரை மேற்பார்வையாளராக நியமிப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கிறேம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேம்.'

### எடுத்துக்காட்டு

நீர்கொழும்பு வாழ் தமிழ் பேசும் வாலிபர்களின் இம் முயற்சி பாராட்டிற்குரியது. ஏனைய பகுதிகளில் உள்ள தமிழ் பேசும் இளைஞர்களுக்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும்.

### இவர்களா?

மாவட்ட சபை அமைத்து தமிழ் மொழி காப்பாற்றப்படும் என்று கூறும் பெரியார்களுக்கு, ஆளவந்தார் செய்யும் இத்தகைய இழி செயல்கள் எங்கே தெரியப் போகிறது. உள்ளூராட்சி மன்றங்களில் தமிழ் ஒழிப்பு நடாத்தும் ஆட்சியாளர்களா மாவட்ட சபை அமைத்து தமிழைக் காப்பாற்றுவார்கள்?

## தமிழில் முகவரி

21-7-63 சுதந்திரனில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்வி. பாப்பா சரவணமுத்து என்ற ஓர் நேயர், தமிழில் முகவரி எழுதுவதால்தான் கடிதங்கள் உரியவரிடம் போய் சேருவதில்லையென குயுக்தியாரிடம் தெரிவித்திருந்தார். அது தவறு. தபால் பகுதியினரின் கவலையீனமே கடிதம் உரியவரிடம் சேராததற்கான உண்மைக் காரணமாக இருக்கலாம்.

நான் தமிழில் முகவரியிட்டுத் தமிழ் நாட்டிற்கோ தில்லிக்கோ; லண்டன் பி. பி. ஸி. நிலையத்திற்கோ போடும் கடிதங்கள் ஒன்ருவது சேராது போனது கிடையாது. லண்டன் பி. பி. ஸி. நிலையத்தில் 'தமிழோசை" தயாரிப்பாளர் திருமதி லீலா சாஸ்திரி அவர்கள் தமிழிலேயே முகவரியிட்டு எனக்கு கடிதங்கள் எழுதி வருகிருர். அவை தவருது கிடைத்து வருகின்றனவே.

நான் எந்த ஒரு அரசியல் கட்சியிலும் அங்கம் வகிக்கவில்லை என்ருலும் எனது இலட்சியத்திற்கும் தமிழரசுக் கட்சியின் இலட்சியத்திற்குமே சகல விதங்களிலும் ஒத்திருக்கின்றது. நான் "எல்லாம் தமிழ் இயக்கத்தில்" எப்போதுமே பேரார்வம் காட்டி வருகிறேன். என் கருமங்கள் எல்லாமே தனித் தமிழில் தான் ஆற்றி வருகின்றேன். என்ருலும் நான் எல்லாம் தமிழ் இயக்கத்தில் அங்கத்தவனல்ல.

இப்படி நான் தமிழ் ஆர்வங்கொண்டு பணியாற்றி வரும் நேரத்தில் தான் 'தமிழோசை'யில் தொடர்பு ஏற்பட்டது. நான் சகோதரி லீலா சாஸ்திரி அவர்களுக்கு தமிழில் முகவரியிட்டு ஓர் கடிதம் தமிழில் எழுதியும் முகவரி ஆங்கிலத்தில் எழுதி இருந்தார். உடனே நான் ஈழத் தமிழரின் இன்றைய நிலையையும், எல்லாம் தமிழில் நடைபெற வேண்

(13-ம் பக்கம் பார்க்க)

## மந்திரிகள் தேர்தலுக்கு நிற்க முடியாதா?

### 16வருடங்களுக்கு முன்......

பாராளுமன்றப் பொதுத் தேர்தல் ஆரம்பத்திற்கு இன்னும் பதின்மூன்று நாட்கள் தான்இருக்கின்றன. இதற்கிடையில் இலங்கை மந்திரிகள் தேர்தலில் அபேட்சகர்களாக நிற்பதற்கு யோக்கியதை உடையவர்களா என்ற பிரச்சினை இங்கு கிளம்பியுள்ளதால் 'வைட்ஹோ"லுக்கு அதிகாரிகள் நிலைமையைத் தெளிவுபடுத்த அவர்களைக் கேள்வியின்றித் தேர்தலில் நிற்கக் கூடியதாகச் சட்டத்தைத் திருத்தி அமைக்குமாறு ஒரு செய்தியை அனுப்பியுள்ளனர்.

சோல்பரி அரசியல் திட்டப்படியுள்ள 'ஓடர்-இன் கவுன்சில்' சட்டத்தின் பிரகாரம், மந்திரிகள் அரசாங்க உத்தியோகத்தர்கள் என்ற ஹோதாவில் தேர்தலில் அபேட்சகர்களாக நிற்க யோக்கியதை இல்லை என்று கூற முடியும் என்று அதிகாரிகள் அபிப்பிராயப்படுகின்றனர்.

திருவாளர்கள்: டி. எஸ். சேனநாயக்கா, ஜோர்ஜ் ஈ. டி. சில்வா, எஸ். டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா, ஏ. மகாதேவா போன்ருர் இப்பிரச்சினையால் பாதிக்கப்படும் மந்திரிகளாவர்.

*

### ஏகாதிபத்திய சகாப்தத்தின் முடிவு

ஆகஸ்டு மாதம் 15ம் தேதியானது இந்தியாவின் அல்லது ஆசியாவின் சரித்திரத்தில் மட்டுமல்ல, இம் முழு உலகச் சரித்திரத்திலேயே ஓர் மகத்தான தினமாகும். 150 ஆண்டுகளுக்கு முன்னே பிரிட்டிஷார் ஆரம்பித்து வைத்த ஏகாதிபத்திய சகாப்தத்தை ஒழித்துக் கட்டும் தினமாகும். இந்தியாவை பிரிட்டன் சுரண்டி வந்ததைச் சாக்கிட்டு ஏனைய வல்லரசுகள் ஆசியாவிலுள்ள பலமில்லாத இதர நாடுகளைச் சூறையாடிவந்தன. இனி ஏகாதிபத்தியங்களின் பிடியினின்றும் மெதுவாக அந் நாடுகள் தங்களைக் கழற்றிக்கொள்ளும்.' இவ்வாறு பண்டித ஜவஹர்லால் நேரு, ஆகஸ்ட் 9ம் தேதி மாலை 7 மணிக்குப் புதுடில்லியில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

—சுதந்திரன் 11-8-1947

### அடிமைப் புத்தி

............அமெரிக்காவில் சட்டபூர்வமாக அடிமைகளை விடுவித்தபோது அவர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு கூட்டம் கூடினர்கள். 'நாங்கள் அடிமைகளாகவே இருக்க வேண்டும். சுதந்திர மக்களாகவிருந்தால் தங்கள் எஜமானர்கள் சோறு, துணி கொடுக்க மாட்டார்கள். நாங்கள் பட்டினியாலும் பிணியாலும் வாடி அழியும்படி ஏற்படும்' என்று தீர்மானங்கள் செய்து கவர்ன்மெண்டுக்கு அனுப்பியுள்ளதாகச் சரித்திரங்கள் கூறுகின்றன.

இந்த நிலைமை யாழ்ப்பாணத்திலும் ஏற்பட்டிருக்கிறது பரிதவிக்கத் தக்கது. யாழ்ப்பாணத் தலைவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் படிப்பாளிகளும் இந்த அடிமைப் புத்திப் பிரசாரத்திற்குக் கிளம்பியிருப்பது வருந்தத்தக்க விஷயம்......

[சுதந்திரன் 10-8-1947
—தலையங்கம்]

சுதந்திரன்

ப்ரம்மீ கேசரஞ்சன தைலம்



கண்ருேு, கண் எரிச்சல், தூக்கமின்மை, பீனிசம், தலைவலி, பல்வலி, தும்மல், முடி விழுதல், நரையுண்டாகுதல், முதலிய வியாதிகளை நீக்கி தலைமயிர் அழகான கருநிறத்தில் இடநெருக்கமாக வளரச்செய்கிறது. அகாலத்திலுண்டாகும் நரை மயிரை முன் போல் கறுப்பு நிறமாக மாற்றுகிறது. இந்தத் தைலம் தொடர்ந்து பாவித்து வந்தால் 100வயதானலும் "நரையும்" "வழுக்கையும்" உண்டாகாது. நாரிமணிகள் செயற்கை முடிகளை வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படாது.

A 6 அவுன்ஸ் போ 3-50

அதிக நரை மாற்றும் ஸ்பெஷல்

இந்த விசேஷத் தயாரிப்பிலும், மேலே சொன்ன எல்லாக் குணங்களும் அதேபடி அமைந்திருக்கிறது. கூடுதலான நரைமயிரை விரைவில் கருநிறமாக்கி வளரச்செய்யும்படி, சக்திவாய்ந்த திவ்விய மூலிகைகளை பிரத்தியேகம் சேர்த்திருப்பதே இதன் முக்கியத்துவம்.

B 6 அவுன்ஸ் போ: விலை 4-50

பின்வரும் இடங்களிலும் கிடைக்கும்

1. ஸி. எஸ். கைலாசபிள்ளை அன்ட் சன்ஸ், 76, பெரியகடை, யாழ்ப்பாணம்.
2. மட்டக்களப்பு ஸ்டோர்ஸ், மட்டக்களப்பு.
3. கே. எம். ஹஸன், 251, திருமலை வீதி, கண்டி.
4. எஸ். சுப்பிரமணியம் அன்ட் கம்பெனி, 53, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
5. லீலா ஸ்டோர்ஸ், 249, நோரிஸ் ரோட், கொழும்பு-11.
6. எஸ். ஞானம் அன்ட் சன்ஸ், 47, செட்டியார் தெரு, கொழும்பு-11.
7. சென்ட்ரல் மெடிக்கல் ஸ்டோர்ஸ் லிமிட்டெட், மெயின் வீதி, கொழும்பு-11.
8. சென்ட்ரல் மெடிக்கல் ஸ்டோர்ஸ், இல. 126, மெயின் வீதி, மஸ்கெலியா.
9. சி. எஸ். கணபதிப்பிள்ளை அன் சன்ஸ், 51, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
10. ஜி. டி. பின்டோ அன் சன்ஸ், 80, காலி ரோட், வெள்ளவத்தை.
11. பரஞ்சோதி மருந்துசாலை, திருகோணமலை.
12. நாகலிங்கம் குரோசரி ஸ்டோர்ஸ், 208, வார்ட் பிளேஸ், பொரளை.

எஸ். என். குரு மெடிக்கல் ஹால்
80 புதுச் செட்டித் தெரு
கொழும்பு 13.

# பழிக்குப் பழிவாங்கும் படலம் ஆரம்பம்

### அரங்கம் 27

உலக மகாயுத்தம் முடிவடைந்த நாளான நவம்பர் 11ம் திகதி பிரித்தானியப் பாராளுமன்றத்தில் பிரிவினை மசோதா நிறைவேற்றப்பட்டது. பிரித்தானிய பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட சின் பீன் உறுப்பினர்களோ அங்கு செல்வதில்லை. அங்கு செல்லும் இணையாளர்களும் அயர் கட்சி

## செங்கோல் கோணிய அரசு சுடுகோல் தூக்கியது

யினரும் தமது வாக்குகளை அளிக்கவில்லை. கத்தோலிக்கர் கையில் ஆட்சி ஒன்றைக் கொடுப்பதை விரும்பாததால்தான் இணையாளர்கள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. இவ்வாறாக, அயர் நாட்டவர் எவருமே ஏற்றுக் கொள்ளாத மசோதா ஒன்றை ஆங்கில ஏகாதிபத்தியத்தினர் அயர் மக்கள் மீது திணிக்கக் கங்கணங் கட்டினர்! இது உலகின் எல்லாப் பாகங்களிலுமுள்ள ஏகாதிபத்தியவாதிகளுடன் உடன் பிறந்த நோய்தானே!! மசோதாவுக்கு 23-11-1920 மன்னரின் அங்கீகாரமும் கிடைத்தது.

அயர் நாட்டில் நடைபெறும் கொடுமைகளையெல்லாம் ஆராய்வதற்காகப் பிரித்தானிய தொழிற் கட்சி ஓர் ஆணைக் குழுவை நியமித்தது. அந்தக் குழுவும் அயர் நாட்டிற்கு வந்து சேர்ந்தது. அதேபோல், அமெரிக்காவில் அயர் குடியரசுக்கு ஆதரவு தேடும்வகையில் குடியதிபதி டி வேலரா 16-11-1920ல் அயர் குடியரசை அங்கீகரிப்பதற்கான அமெரிக்கச் சங்கத்தை ஆரம்பித்தார். 5 லட்சம் மக்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்தச் சங்கத்தில் சில நாட்களில் 8 லட்சம் உறுப்பினர்கள் இருந்தனர்.

அயர் நாட்டிலே, உயிருக்கு உயிர் என்ற சித்தாந்தத்தில் ஊறியிருந்த கொளின்ஸால், ஆங்கிலேயரின் அட்டூழியங்களைப் பார்த்துக் கொண்டு வாளாவிருக்க முடியவில்லை. தொண்டர்களை அழைத்தார். 21-11-1920 ஞாயிற்றுக்கிழமை காலை ஆங்கில ஆட்சியினரின் அதிகாரிகளான 14 பேரைச் சுட்டுக் கொல்லும்படி கட்டளையிட்டார். தொண்டர்களும் கொளின்ஸின் கட்டளையை குறிப்பிட்ட தினத்தில் நிறைவேற்றினர்.

## நகர மண்டபம் தீக்கிரையாகியது

டப்ளின் மாளிகையில் வாசஞ் செய்த ஆங்கில ஆட்சியின் பிரதிநிதிகள் கொதித்தெழுந்தனர். பழிக்குப் பழிவாங்கத் திட்டமிட்டனர்!

பிரித்தானிய இராணுவத்தினரும் பொலிஸ்காரரும் கறுப்பர் — துவரரும் உதைபந்தாட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த திடல் ஒன்றுக்குச் சென்றனர். அங்கு நின்ற 800 மக்களை நோக்கி எந்திரத் துப்பாக்கிகளால் சுட ஆரம்பித்தனர். எதிர்பாராவிதமாகத் துப்பாக்கிச் சூடுவருவதைக் கண்ட மக்கள் அங்கு மிங்கும் ஓடலாயினர். ஒருவர் மேல் ஒருவர் விழுந்தனர்; சுவர்களில் போய் மோதினர். இந்த நிகழ்ச்சி காரணமாய் பன்னிருவர் மரணமாயினர்; 60 பேர் காயமடைந்தனர். ஆங்கில உளவு அதிகாரிகள் 14 பேர் அன்று காலை சுட்டுக் கொல்லப்பட்டதற்காகப் பழிக்குப் பழிவாங்கும் முதல் படலமாக இது இருந்தது.

அன்றிரவு கறுப்பர் — துவரரும் இராணுவத்தினரும் டப்ளின் பிரிகேட் தளபதியையும் துணைத் தளபதியையும் இன்னுமொருவரையும் சுட்டுக் கொன்றனர். இவ்வளவோடு அவர்கள் நிறுத்தவில்லை. கடப்பாரை, கைக் கோடரி, படைத் துப்பாக்கி, சுழல் துப்பாக்கி, பெற்றோல் ஆகியவற்றுடன் இரவு நேரங்களில் சென்று மக்களையும் வீடுகளையும் கடைகளையும் தாக்கினர்.

இந்த நாச வேலைகளைக் கட்டுப்படுத்துவதானால் இனிமேல்

## ஆளவந்தார் தலைநகரில் விடுதலை வீரர்கள் நாசவேலை

இங்கிலாந்திலுள்ள நகரங்களில் அயர் தொண்டர்கள் நாச வேலைகளில் ஈடுபடுவதினாலேயே முடியும் என்ற முடிவுக்கு மைக்கேல் கொளின்ஸ் வந்தார். அதன்படி இங்கிலாந்திலிருந்த அயர் தொண்டர்கள், லண்டன், லிவப்பூள், மஞ்செஸ்ரர், கிளாஸ்கோ முதலிய நகரங்களிலுள்ள கப்




பற் கூடங்கள், புகைவண்டிப் பாலங்கள், வெறும் பண்டசாலைகள், மின்சார நிலையங்கள், நீர் விநியோக நிலையங்கள் ஆகியவற்றைச் சேதப்படுத்த வேண்டும் எனக் கொளின்ஸ் ஆணை பிறப்பித்தார். தற்பாதுகாப்புக்காகவன்றி வேறெந்த காரணத்துக்காகவும் கொலை செய்யக் கூடாதெனவும் அவர் பணித்தார்.

அயர் தொண்டர் படையினர் 28-11-1920ல் இங்கிலாந்தில் நாச வேலைகளை ஆரம்பித்தனர். லிவப்பூளிலுள்ள 15 பண்டசாலைகளை அன்று அவர்கள் நிர்மூலமாக்கினார்கள். இவற்றுக்கான திட்டங்கள் அனைத்தையும் அயர் குடியரசு இராணுவத்தின் பொறியியல் அதிபரான ரோறி ஓகொணர் தயாரித்தார்.

ஒரு சில ஆவணங்கள் டப்ளினில் கைப்பற்றப்பட்டதி னால் ஏறத்தாழ 100 தொண்டர்கள் இங்கிலாந்தில் கைது செய்யப்பட்டனர். எனினும் எஞ்சியிருந்த தொண்டர்களின் நடவடிக்கைகள் ஆட்சியினரையும் ஆங்கில மக்களையும் அதிர்ச்சியடையச் செய்தன.

'கோமகன்'
'மாமல்லன்'

அயர்நாட்டில் ஏமன் டி வேலராவின் இடத்தில் பதில் குடியதிபதியாக இருந்த ஆதர் கிரிபித் 26-11-1920ல் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். உடனேயே மைக்கேல் கொளின்ஸ் பதில் குடியதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். அதனால் கொளின்ஸுக்குத் தலை நிறைய வேலை வந்துவிட்டது. எனினும் அவர் சளையாது தனது கடமைகள் அனைத்தையும் கிரமமாகச் செய்து மற்றவர்களுக்கும் முன்மாதிரியாகத் திகழ்ந்தார்.

### அரங்கம் 28

ஆங்கில ஆட்சியினர் கைது செய்த தொண்டர்களைச் சித்திரவதை செய்வதில் எல்லையே இருக்கவில்லை.

9-12-1920ல் உதவிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட தொண்டர் ஒருவர் கயிற்றால் கட்டப்பட்டார். அவரது சப்பாத்துக்கள் கழற்றப்பட்டன. அவரது வெறுங்கால் மேல் பொலிஸார் ஏறி உழக்கினர். அதனால் அவரது கால் விரல்கள் முறிந்தன. அவரது இடையில் துப்பாக்கிச் சனியன்களால் குத்தினர். இத்தனை கொடுமைகளுக்கும் அந்தத் தொண்டர் பயப்படவில்லை; எவ்வித தகவல்களையும் கொடுக்க மறுத்துவிட்டார். ஈற்றில் உதவிப் பொலிஸார் அவரை டப்ளின் மாளிகைக்கு இழுத்துச் சென்றனர். அங்கு ஆங்கில அதிகாரி ஒருவர் அவரைத் தாறுமாறாக அடித்தார். இன்னுமொருவர் அவரது கழுத்தை நெரித்தார். ஓர் அதிகாரி சூடாக்கப்பட்ட இரும்புக் கோல் ஒன்றைத் தொண்டரின் கண்ணிமை மயிர் எரிந்து போகும் வரை அவரது கண்களுக்கு முன்னால் பிடித்துக் கொண்டு நின்றார். இன்னுமொரு தடவை அவர் தாறுமாறாக அடிக்கப்பட்டு அவரது தொண்டை நெரிக்கப்பட்டது. தொண்டரோ எவ்வித தகவலும் கொடுக்க மறுத்துவிட்டார். அதனால் அவரைச் சுட்டுத் தள்ளப் போவதாகப் பயமுறுத்தி அதிகாரிகள் அவரைச் சுவரோடு நிறுத்தினார். அந்தப் பயமுறுத்தலுக்கும் தொண்டர் அஞ்சவில்லை. அதிகாரி ஒருவர் சுழல் துப்பாக்கியால் சுட்டார். ஆனால் அதில் ரவை இருக்கவில்லை. தோல்வியடைந்த ஆங்கில அதிகாரிகள் அந்தத் தொண்

## அடக்கு முறையில் ஆட்சியாளர் நம்பிக்கை

டரைச் சிறைச்சாலையொன்றுக்கு அனுப்பினர். அங்கு அவர் நண்பர்களால் கூட அடையாளம் கண்டு கொள்ள முடியாத நிலையிலிருந்தார்!

மிருகங்களின் மறு பிறப்புகளான கறுப்பர்—துவரரும் பிரித்தனிய இராணுவத்தினரும் மக்களுக்கும் மாநகரங்களுக்கும் கொள்ளி வைக்கும் பழக்கத்தைக் கைவிடவேயில்லை; இன்னும் மும்முரமாக அந்தத் தொழிலைச் செய்யலாயினர். 11-12-1920 இரவு கோக் நகர மண்டபத்தையும் அப்பட்டணத்திலிருந்த கடைகளையும் வீடுகளையும் தீக்கிரையாக்கினர். நகர மண்டபம் எரிந்ததினால் மாநகர சபை ஆவணங்களும் பொது நூல்நிலையப் புத்தகங்களும் சாம்பராயின. ஏறத்தாழ 25 லட்சம் பவுன் நட்டம் ஏற்பட்டது. இந்த நட்டத்தில் ஒரு பெனியைக் கூடக் கொடுக்க ஆங்கிலக் காப்புறுதிக் கம்பெனிகள் மறுத்தன!

## பொய்யுரை, புனிதன் உயிரை வாங்கியது

இவற்றையெல்லாம் பிரித்தானியத் தொழிற் கட்சி நியமித்த ஆணைக்குழு கவனத்திற்கு எடுத்துக் கொண்டது. எனினும் ஆங்கிலேயரான அவர்களால் அன்னியரான அயர் இனத்தவர்களுக்கு சுதந்திரம் எப்படி எடுத்துக் கொடுக்க முடியும்?

இந்த வேளையில், ஆங்கில ஆட்சியினருக்கும் அயர் தலைவர்களுக்கும் இடையில் சமாதானம் ஏற்படுத்துவதற்காக மூன்றாவது கட்சியினர் சிலர் முயற்சிகள் சில ஆரம்பித்தனர். சமத்துவ அடிப்படையில் நிபந்தனைகளின்றிப் பேச்சுவார்த்தைகள் நடைபெறுமானால் அவற்றில் தாம் கலந்து கொள்வதில் ஆட்சேபனை இல்லை என்று அயர் தலைவர்கள் இந்தத் தூதுவர்களிடம் எடுத்துக் கூறினர். எனினும் பிரித்தானியப் பிரதமர், பேச்சுவார்த்தைகளிலும் பார்க்க அடக்குமுறைகளே பிரச்சினைக்குச் சிறந்த நிவாரணி என்று மனதார நம்பினார்.

அயர்நாட்டிலே அடக்குமுறையாட்சி நாளுக்கு நாள் பலமடைவதையும் பேச்சுவார்த்தைகள் பற்றிய செய்திகள் காற்றில் அடிபடுவதையும் பதில் குடியதிபதி ஆதர் கிரிபித் கைது செய்யப்பட்டதையும் எண்ணிப் பார்த்த குடியதிபதி டி வேலரா தான் உடனடியாக அமெரிக்காவிலிருந்து அயர் நாட்டுக்குத் திரும்ப வேண்டும் என முடிவுசெய்தார். அமெரிக்க அரசாங்கத்திற்கோ ஆங்கில அரசாங்கத்திற்கோ தெரியாமல் மிகவும் இரகசியமாக அவர் கப்பலொன்றில் அயர்நாட்டுக்குப் புறப்பட்டார்.

அயர்நாட்டை 24—12—1920ல் அடைந்த டி வேலரா டப்ளின் நகருக்கு அண்மையிலுள்ள ஒரு சிற்றூரில் குடிசை ஒன்றில் தங்கலானார். இதற்கான எல்லா ஒழுங்குகளையும் மைக்கேல் கொளின்ஸ் செய்திருந்தார். அக்குடிசையில் இருந்தே டி வேலரா தனது கடமைகளைக் கவனித்து வந்தார். அவருடைய இருப்பிடம் பற்றிக் கொளின்ஸும் இன்னும் சிலருமே அறிந்திருந்தார். அவர் டப்ளினுக்கு வந்து மாயமாய் மறைந்துவிட்டார் என்ற செய்தி எங்கும் பரவியிருந்தது.

புது வருடம் பிறக்கையில், ஏறத்தாழ, அயர்நாட்டின் தெற்குப் பகுதி முழுவதுமே இராணுவச் சட்டத்தின் கீழ் இருந்தது. கோக் மாவட்ட இராணுவ ஆளுநர், புரட்சியாளர்களுக்கு உணவு அளிப்பவர்கள், முதலுதவி செய்பவர்கள், தங்க வசதிகள் ஏற்படுத்துபவர்கள் மற்றும் உதவிகள் அளிப்பவர்கள் யாவரும் கைது செய்யப்படுவதுடன் கடுந் தண்டனைக்கும் உள்ளாவார்கள் என்று பிரகடனம் செய்தார்.

இந்தப் பிரகடனத்தின் பிரகாரம் சுழல் துப்பாக்கியும் ரவைகளும் வைத்திருந்ததற்காக ஒருவர் கைது செய்யப்பட்டுச் சுடப்பட்டார்; அந்தத் தொண்டர் பற்றிய தகவலை ஆட்சியாளருக்கு அறிவிக்காததற்காக அவரது சகோதரர் கைது செய்யப்பட்டார். மற்றும், பாணட், வேலன் என்னும் இரு தொண்டர்கள் ஆட்சியாளரால் கைது செய்யப்பட்டனர். வேலனுக்கு எதிராகப் பொய் வாக்குமூலம் அளிக்குமாறு பாணட் சித்திரவதை செய்யப்பட்டார். சித்திரவதையைச் சகிக்க முடியாத பாணட், வேலனுக்கு எதிராகப் பொய் வாக்குமூலம் அளித்தார் அதன் காரணமாக வேலன் தூக்கிலிடப்பட்டார். இதைக் கேள்வியுற்ற பாணட்டுக்குப் பைத்தியம் பிடித்தது.

## மனிதாபிமானமற்ற முறையில் தொண்டர்கள் சித்திரவதை

(வளரும்)

சுதந்திரன்
SUTANTIRAN

1963 ஒகஸ்ட் மாதம் 11-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு - 12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183

# கண்கட்டு வித்தை

அரசாங்கத்தின் வீழ்ச்சியைத் தற்காலிகமாகத் தடுத்து நிறுத்தும் நோக்கத்துடன் தயாரிக்கப் கப்பட்டதே திரு. இலங்கரத்தினவின் வரவு—செலவுத் திட்டம். அவரது "பட்ஜெட் பிரசங்கம்" சுதந்திரக் கட்சியின் தேர்தல் அறிக்கையைப் போன்றிருப்பதே அதற்குச் சான்று. அப்பிரசங்கத்தைச் சிங்களத்தில் நிகழ்த்தியதும் அரசியற் காரணங்களுக்காகவே.

வரவு—செலவுத் திட்டத்தில் மண்ணெண்ணை, மாவு விலையைக் குறைத்துள்ளனர். அதனை அன்று கூட்டியவர்களும் அவர்களே. நடுத்தர வகுப்பு மக்கள் ஒரு சாராருக்கு வருமான வரி சலுகை அளித்துள்ளனர். அந்த வரியை அன்று விதித்தவர்களும் அவர்களே. துணிமணி இறக்குமதிச் சுங்க வரியைக் குறைத்துள்ளனர். இறக்குமதி வரியை 200, 300 சத விகிதம் உயர்த்தி, பொருட்களின் விலைவாசிகளை ஏற்றியவர்களும் அவர்களே. அவர்கள் செய்ததெல்லாம் ஏற்றியதை இறக்கியதேயன்றி பழைய விலைகளைக் குறைத்ததன்று.

வரவு—செலவுத் திட்டத்தில் இந்த மாயாஜால வித்தை காட்டியதும், நிதி மந்திரி சிங்களத்தில் பேசியதும், கட்சி மாறவிருந்த சில அரசாங்க எம். பி. களைத் தற்காலிகமாகத் தடுத்து நிறுத்தும் உபாயங்களே.

மண்ணெண்ணை, மாவு விலை குறைந்ததால் தாங்க முடியாத கஷ்டங்களை அனுபவிக்கும் மக்களுக்கு தொடக்கத்தில் இந்த வரவு—செலவுத் திட்டத்தின் மீது ஒரு மயக்கம் ஏற்படலாம். பின்னர் இதனால் வாழ்க்கைச் செலவு குறையவில்லை என்று தெரிந்ததும் மயக்கம் தெளிந்து உண்மையை உணர்வர். இத் திட்டத்தால் வாழ்க்கைச் செலவு கூடுமேயன்றி நிச்சயம் குறையாது. வாழ்க்கைத் தரமும் உயராது. அதற்கான காரணங்களிற் சில:

(1) நெருப்புப் பெட்டி, முத்திரை போன்ற அத்தியாவசியப் பொருட்கள் இன்னும் நெருப்பு விலைதான். (2) பாவனைப் பொருட்களின் தட்டுப்பாடு கள்ளச் சந்தையைத்தான் வளர்க்கும். விலைவாசிகள் கூடுவது அதன் நேரடி விளைவு. (3) பணவீக்கத்தால் விலைகள் "ரொக்கட்" வேகத்தில் பறக்கும். (4) "உற்பத்திப் பொருள் வரி" என்ற மறைமுக விற்பனை வரியால் உள்நாட்டு உற்பத்திப் பொருட்கள் யானை விலை குதிரை விலையாகி விடும்.

இந்த வரவு—செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகை ரூ. 60 கோடி. இலங்கை வரலாற்றிலே இதற்கு முன்பு இவ்வளவு பெருந் தொகை பட்ஜெட்டில் துண்டு விழுந்ததே கிடையாது. இந்தப் பற்றாக்குறையைச் சேகரிக்க நிதி மந்திரி கையாளும் முறைகள் விபரீதமானவை.

பொது மக்கள் நம்பிக்கையுடன் அரசாங்கத்திடம் கொடுத்துள்ள பணம் இதற்காகச் சூறையாடப்படவிருக்கிறது. தொழிலாளர் சேமலாப நிதி, சேமிப்பு வங்கி நிதி, இன்ஷூரன்ஸ் பணம் முதலிய "நம்பிக்கை நிதி"யை அரசாங்கம் செலவிடுமாம். மக்களின் பணத்தைச் சூறையாடும் இத் திட்டம் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

வெளிநாடுகளில் ரூ. 17½ கோடி வாங்கவும் நிதி மந்திரி திட்டமிட்டிருக்கிறார். இதுவரை இலங்கை அரசாங்கம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ரூ. 318 கோடி கடன் வாங்கியுள்ளது. அந்தக் கடனுக்கு வருடா வருடம் செலுத்தும் வட்டி மட்டும் ரூ. 10 கோடி. இந்நிலையில் அரசாங்கம் உள்ளூரிலும், வெளியூரிலும் மென் மேலும் கடன் வாங்குவது மன்னிக்க முடியாத தவறாகும். இதனால் நாடு கடனில் மூழ்குவதுடன் நாட்டின் கண்ணியமும் காற்றில் பறந்துவிடும்.

பற்றாக்குறையை நிரப்ப அச்சு இயந்திரத்தை முடுக்கிவிட்டு ரூ. 5 கோடிக்கு வெறும் கடதாசி நோட்டுகளை அச்சிடப் போகிறார்களாம். இதனால் பணவீக்கம் பெருமளவு அதிகரிக்கும். அதன் நேரடி விளைவு ரூபாயின் மதிப்புக் குறைந்து, விலைவாசிகள் இன்னும் உயர்ந்து கொண்டு போவதுதான்.

தொழில் வளர்ச்சி குன்றிய நாட்டில் பணவீக்கம் தவிர்க்க முடியாது என்கிறார் திரு. இலங்கரத்தின. ஏற்கனவே பணவீக்கத்தால் இடர்படும் நாட்டில் பணவீக்கத்தை மென் மேலும் அதிகப்படுத்துவது மூடத்தனமான செயல். தொழில் வளம் அதிகரித்து, வேலை வாய்ப்பும் கூடி வருமானால் பணவீக்கம் ஓரளவு ஏற்படின், நாடு பாதிக்காது. ஆனால் இங்கே வளர்வதோ வேலையின்மை—வேலை வாய்ப்பன்று. இந்நிலையில் பணவீக்கம் மேலும் உயர்ந்தால் பொருளாதாரம் அளவுக்கு மீறி காற்றடிக்கப்பட்ட பலூனைப் போல வெடித்துவிடும்.

வேலை வாய்ப்புகளைப் பெருக்கி, வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க வரவு—செலவுத் திட்டம் ஒரு வழியும் காட்டவில்லை. முக்கிய சீர்திருத்தத் திட்டங்களைப் பற்றியும் இதில் எதுவுமில்லை. வரவு—செலவுத் திட்டம் சமர்ப்பிக்க முன்பே ஓர் அறிவிப்பு மூலம் தபால் அட்டை தொட்டு எல்லாத் தபால் கட்டணங்களையும் திருட்டுத்தனமாக உயர்த்திவிட்டு, "தபால் கட்டணத்தை உயர்த்த மாட்டோம்" என்கிறார் நிதி மந்திரி.

நிதி மந்திரியின் "பட்ஜெட்" பிரசங்கத்தில் வகுப்புவாதம் தொனிக்கிறது. தமிழ் பேசும் மக்களை அவர் அடியோடு புறக்கணித்துவிட்டார். அவர்களைப் பற்றியோ அவர்களின் மொழியைப் பற்றியோ ஒரு சொற் கூட அவரது வாயினின்று வெளிவரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

"நமது மொழி, பண்பாடு, சமயம் ஆகியவற்றைக் காப்பாற்றி அவற்றிற்குரிய அந்தஸ்தை அளித்துள்ளேன்" என்று நிதி மந்திரி தமது பிரசங்கத்தில் குறிப்பிட்டார். "நமது" என அவர் கூறியது அரசாங்கத்தையே. அரசாங்க மொழி சிங்களம், அரசாங்கத்தின் பண்பாடு, அரசாங்கத்தின் மதம் பௌத்தம் என்பதே அவரது பேச்சின் கருத்து. அப்படியாயின் தமிழ் மொழி, தமிழ் பண்பாடு, இதர சமயங்கள் ஆகியவற்றின் கதி என்ன? அவற்றிற்கு இந்த நாட்டில் இடமில்லையா?

"தொழிலாளர்களின், கிராம மக்களின் மதம் என்று கருதப்பட்ட பௌத்தத்துக்குரிய இடத்தைப் பெற்றுக் கொடுத்தோம்" என்கிறார் திரு. இலங்கரத்ன. அப்படியாயின், இந்து சமயம், இஸ்லாம், கிறிஸ்துவம் ஆகியவை முதலாளிகளின், பணக்காரர்களின், நிலச்சுவான்களின், பிரபுக்களின் மதங்களாகக் கருதப்பட்டனவா? மதத் துவேஷம் மண்டையிலேறிய பேச்சு இது.

"அடுத்த ஆண்டு அரசாங்க அலுவல்கள் அனைத்தும் சிங்களத்தில் மட்டுமே. இதனால் நிர்வாகிகளுக்கும் பொதுமக்களுக்குமிடையே நெருங்கிய தொடர்பு ஏற்படும்" என்று நிதி மந்திரி தனது பிரசங்கத்தில் கூறியுள்ளார். 'பொது மக்கள்' என்று அவர் கூறுவது சிங்கள மக்களையே. சிங்களம் அரச கரும மொழியாவதால் தமிழ் மக்களுக்கும் அரசாங்க நிர்வாகிகளுக்குமிடையேயுள்ள தொடர்பு அறுந்துவிடுமேயன்றி நெருங்காது என்பது அவருக்குத் தெரியும். தமிழ் பேசும் மக்களை இந்நாட்டுப் பொதுமக்களாக அவர் கருதவில்லை என்பது இதினின்று தெளிவு. அடுத்த ஆண்டில் சிங்களம் செங்கோலோச்சத் தொடங்கும் போது, தமிழ் மொழியின் நிலை எப்படியிருக்கும்? இது பற்றி ஒரு சொற் கூட நிதி மந்திரி கூறவில்லையே. "தமிழ் மொழிக்கு எதுவும் கிடையாது" என்பதையே நிதி மந்திரி கூறாமல் கூறியுள்ளார்.

மாவட்ட சபை அமைத்து சிறுபான்மையோர் பிரச்சினையைத் தீர்க்கப்போவதாகப் பறை சாற்றியது அரசாங்கம். ஆனால் மாவட்டசபைகள் அமைக்கக் கால் சதம் கூட வரவு—செலவுத் திட்டத்தில் ஒதுக்கவில்லை. இதினின்று மாவட்டசபை இவ்வருடம் வெறும் ஆலோசனையோடு நின்றுவிடும் என்பது தெளிவு. அலரிமாளிகைக்குக் காவடி தூக்கிய, காக்கை வன்னியர் கூட்டத்துக்கு இவ்வாறு பட்டை நாமம் சாத்தியுள்ளது வரவு செலவுத் திட்டம்.

அதுமட்டுமா? திரு. நடேசபிள்ளையையும் ஏமாளியாக்கிவிட்டனர் ஆட்சியாளர். அவர் கனவுகண்ட இந்து பல்கலைக் கழகத்தை அமைக்க செம்பால் அடித்த ஒரு சல்லிகூட ஒதுக்கவில்லை நிதி மந்திரி. பாவம் திரு. நடேசபிள்ளை! சிம்மாசனப் பிரசங்கமும் அவருக்குக் கையைவிரித்தது. அவர் இன்னும் இந்த அரசாங்கத்துடன் ஒட்டிக்கொண்டிருப்பது கண்ணியமாகாது.

இவ்வாறு பொருளாதாரத்தில் செப்படிவித்தை காட்டும் — சிறுபான்மை மக்களைக் காலை வாரிவிடும் இந்த வரவு செலவுத் திட்டத்தை மண்ணெண்ணை, மாவு விலையை ஒரு சில சதங்கள் குறைத்ததற்காகத் தன்மானமிக்க எந்தத் தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினரும் ஆதரிக்க முடியாது.

# அவசர காலச் சட்டத்தின் துணைகொண்டு மோசம் செய்வதா?

## தென்னாட்டு மக்களுக்கு தில்லி அரசு தீங்கிழைத்துவிட்டது

### பிரிவினைத் தடை மசோதா வேண்டாத ஒன்று

### சீன நிலை பற்றிய 'சுதந்திரன்' கூற்று உண்மையாகிவிட்டது

தில்லிப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பிரிவினை தடை மசோதா, சட்டமாவதற்கு உரிய ஒப்புதலை குடியதிபதியிடம் பெறுவதற்கு முன்னர் மாநில சட்ட சபைகளினதும் அங்கீகாரத்தைப் பெற வேண்டுமென்ற சம்பிரதாயத்திற்கு ஏற்ப தமிழ் நாட்டு மாநில சட்ட சபையில் இவ்வாரம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

#### காரணம் என்ன?

பிரிவினைத்தடை மசோதா இத்தனை அவசரமும் அவசியமுமாகக் கொண்டுவருவதற்கு உரிய காரணங்கள் என்ன? அவசரகாலச் சட்டம் அமுலில் இருக்கையில் பிரச்சினைக்குரிய இத்தகைய மசோதாக்கள் அவசியம் தானா? இதுபோன்ற கேள்விகள் அரசியல் வட்டாரங்களில் சாதாரணமாக அடிபடுகின்றன.

#### ஏக இந்தியா எதிர்ப்பு

இந்தியாவின் ஆட்சி மொழி இந்தி என்றதும் தென்மண்டலத்தில் தில்லி அரசுமீது ஒரு வெறுப்பு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக ஏக இந்தியாவை எதிர்க்கும் அரசியல் கட்சிகள் மக்கள் மத்தியில் பிரபலமடைவதற்கு வசதியும் வாய்ப்பும் பெருகியுள்ளது. தான் தமிழ் நாட்டு மாநில பாரதம் முழுவதிலும் பிரிவினை கோரும் கட்சிகள் மூன்று. அவற்றுள் இரண்டு கட்சிகள் தமிழ் நாட்டில் உள்ளன. இவை அறிஞர் அண்ணாத்துரை தலைமையில் இயங்கும் திராவிட முன்னேற்றக் கழகமும், திரு. சி.பா. ஆதித்தன் தலைமையில் இயங்கும் 'நாம் தமிழர்' இயக்கமும் ஆகும்.

#### மிகப் பெரிய கட்சி

நாம் தமிழர் இயக்கத்தின் வளர்ச்சி குறிப்பிடக்கூடிய அளவுக்கு இல்லை. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகமோ மிகப் பெரிய அரசியல் கட்சிகளில் ஒன்றாக வளர்ந்து விட்டது.

அடுத்துவரும் பொதுத் தேர்தலில் தமிழ் நாட்டு மாநில சட்ட சபையைக் கைப்பற்றும் என்று அரசியல் அவதானிகள் கணிக்கக் கூடியளவு கழகம் வளர்ந்துள்ளது — வளர்ந்து வருகிறது.

#### ஒரு ஆயுதம்

இந்தப் பெரும் ஆபத்திலிருந்து தமிழ் நாட்டு காங்கிரஸ் கட்சி தன்னைக் காப்பாற்றிக்கொள்ள இந்தப் பிரிவினை தடை மசோதாவை ஒரு ஆயுதமாகப் பாவித்துள்ளது என்பது அரசியல் அவதானிகள் கருத்து. எனவே சட்ட சபையில் இம்மசோதாமீது நடைபெற்ற விவாதம் இத்தனை முக்கியத்துவம் பெற்றுள்ளது.

#### பக்தவத்சலம் கூற்று

பிரிவினைத் தடை மசோதாவை தமிழ் நாடு மாநில சட்ட சபையில் தாக்கல் செய்து சபை முதல்வரும் நிதி, கல்வி மந்திரியுமான திரு. பக்தவத்சலம் பேசுகையில் 'நாட்டைத் துண்டாக்கும் முறையில் பேசுவது, ஜீவாதார உரிமை என்பதை ஏற்க முடியாது' என்று கூறினார். மேலும் அவர்கள் 'தேசத்தின் ஐக்கியம், பாதுகாப்பு போன்ற அடிப்படைப் பிரச்சினைகள், பொது மேடைகளில் விவாதிக்கப்பட்டு வாக்குப் பலத்தால் தீர்மானிக்கப்படக்கூடியவையல்ல என்றும், இவற்றின் மீது 'பொதுஜன வாக்கெடுப்பு நடத்துவதென்ற கேள்விக்கே இடமில்லை' யென்றும் கூறினார்.

#### தயாராக இல்லை

மந்திரி அவர்களின் கூற்றில் இருந்து ஒரு விடயம் தெளிவாகிறது. காங்கிரஸ் கட்சி இப்பிரச்சினையை வைத்து தேர்தலுக்கு நிற்கத் தயாராக இல்லை என்பது. மக்களுக்கு இப்பிரச்சினை ஆளும்கட்சி கூறுகின்ற அளவு பயங்கரமானதாகவும் தெரியவில்லை. இதைக் காங்கிரஸ் கட்சியும் நன்றாக உணர்ந்துள்ளது.

#### நெடுஞ்செழியன் கூற்று

மேலும் மந்திரி பக்தவத்சலம் பேசுகையில் 'கலாச்சாரத்தாலும் பிற வழிகளாலும் இந்தியா ஏக நாடாகவும் பிரிக்க முடியாத ஒன்றாகவுமிருக்கிறது. மிகப் புராதன தமிழ் இலக்கியங்கள் இந்த உண்மையை ஊர்ஜிதம் செய்கின்றன' என்றார்.

எதிர்க்கட்சித்தலைவர் திரு. நெடுஞ்செழியன் பேசுகையில் மந்திரியின் அறியாமையையும், வரலாற்றைப் புரிந்துகொள்ளாமையையும் நாசூக்காக எடுத்துக் காட்டினார். திரு. நெடுஞ்செழியன் பேசுகையில் 'ஐக்கிய இந்தியா என்பது இயற்கையாகத் தோன்றியதல்ல. பிரிட்டிஷார் துப்பாக்கி முனையின் உதவியுடன் உருவாக்கியதே இந்த ஐக்கிய இந்தியா' என்றார்.

#### புத்திசாலித்தனமல்ல

அடுத்து நாடு அவசரகாலச் சட்ட நிர்வாகத்தின் கீழ் உள்ள இந்த நேரத்தில் இத்தகைய மசோதாக்களைக் கொண்டுவருவது அவசரம் தானா — புத்திசாலித்தனமானதா என்ற கேள்வி அரசியல் வட்டாரங்களில் எழுவது இயற்கையே.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் எதிர்க் கட்சிகளின் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. நாட்டின் ஆபத்து நிலையைச் சுட்டிக் காட்டி மக்கள் கவனத்தை வேறு பக்கம் திருப்பி மக்கள் எழுச்சியைத் தடைப்படுத்த நல்ல சந்தர்ப்பம். இவற்றையெல்லாம் நல்ல முறையில் பயன்படுத்தியுள்ளது ஆளும் கட்சியான காங்கிரஸ். உள்துறை அமைச்சர் லால்பக

(9-ம் பக்கம் பார்க்க)

# கோணேசர் ஆலயத்திற்கு ஆபத்து

## அவசரகாலச் சட்டத்தின்....

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

தூர் சாஸ்திரி அவர்களின் அரசியல் சாணக்கியத்திற்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

### தவருன முடிவு

ஆனல் மக்களின் எழுச்சியை வேறு பக்கம் திருப்பி விடலாம் என்று ஆளும் கட்சியினர் எண்ணினுல் அது தவருன முடிவாகும். காங்கிரஸ் கட்சி கடந்த காலத்தில் வரைந்த அரசியல் பாடத்தை மறுத்துரைப்பதாக முடியும்

பிரிவினை தடை மசோதா இன்றைய இந்தியாவின் அரசியல் சூழ்நிலைக்கு அவசியமா? இந்தி மொழியை ஆட்சி மொழியாக்குவது இன்றைய இந்தியாவின் அரசியல் சூழ்நிலைக்கு அவசியமா? இது போன்ற கேள்விகள் மக்கள் மத்தியில் உள்ளன.

சீன இந்தியா மீது கடந்த ஆண்டு தாக்குதலை ஆரம்பித்த சமயம் வேறுபட்டு நின்ற அரசியல் கட்சிகள் (கம்யூனிஸ்டுக் கட்சியின் ஒரு பிரிவினரைத் தவிர) அனைத்தும் ஒன்றுபட்டு இந்தியாவின் பாதுகாப்பிற்கு உழைத்தன.

இன்று இந்தி அரசியல் மொழி என்பதும், பிரிவினை தடை மசோதாவும் மீண்டும் ஒன்றுபட்டு நின்ற மக்களை வேறுபட வைத்துள்ளது.

பிரிவினைத் தடை மசோதாவினுல் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அறிஞர் அண்ணுத்துரை அவர்கள் நாட்டின் நெருக்கடி நிலையை உணர்ந்து அன்று கூறியதாவது: 'நெருக்கடி நிலைமை தீரும் மட்டும் தி. மு. கழகம் தன்னுடைய பிரிவினைக் கோரிக்கையை வற்புறுத்தாது நிறுத்தி வைக்கும்; சீன ஆக்கிரமிப்பை எதிர்க்க நிபந்தனையற்ற முழு ஒத்துழைப்பையும் தி. மு. கழகம் இந்தியப் பேரரசுக்கு நல்கும்'.

### துரோகமான செயல்

இத்தனை தூரம் நிபந்தனையற்ற ஒத்துழைப்புத் தந்த அரசியல் கட்சிகளுக்கும் ஏனைய மக்களுக்கும் ஆளும் கட்சி அவசரகாலத் துணைகொண்டு மோசம் செய்வது பெரும் துரோகமான செயல் என்று கூறுவதில் சிறிதும் தப்பில்லை.

இந்தி மொழியைத் தாய் மொழியாகக் கொள்ளாத மக்களும் சீனவை எதிர்ப்பதில் முழு மனதுடன் முன் வந்து போராடினுர்கள். இன்று அவசரகாலத்தின் துணையுடன் ஆளும் கட்சி அவர்கள் மீது இந்தியைத் திணிக்க முனைந்துள்ளது. இதுதான் அவர்களுக்குச் செய்யும் பதில் உபகாரமா?

மீண்டும் சீனவின் ஆபத்து தலை தூக்கியுள்ளது. சுதந்திரன் முன்னர் குறிப்பிட்டது முழு உண்மையாகிவிட்டது 'சீனப் போர் நிறுத்தம் தற்காலிகமானதுதான். ஆக்கிரமிப்பு எண்ணத்தை அது கைவிடவில்லை. தக்க சூழ்நிலை ஏற்பட்டதும் மீண்டும் தாக்கும். நியாயம், தர்மம், நேர்மை என்பதெல்லாம் சீனக் கொம்யூனிஸ்டுகளிடம் கிடையா. சமரசம் பேசும் போதே தாக்கிவிடுவார்கள்.'

சுதந்திரன் 25—11—62-ல் கூறியதில் சிறிதும் பொய்க்காத முறையில் இன்று சீன செயல் அமைந்துள்ளது.

### பின்போடுக

இந்த ஆபத்தான நேரத்தில் இந்தியப் பேரரசு உள்நாட்டில் வேற்றுமைக்கு இடமளிக்காத முறையில் நடப்பதே சிறந்த அரசியல் சாணக்கியமாகும். இந்தி மொழித் திணிப்பையும், பிரிவினை தடை மசோதாவையும் கால வரையறையின்றிப் பின் போடுவது புத்திசாலித்தனமாகும்.

## தமிழ் மொழிச்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆதரவாளர்களிடமிருந்து இரகசியமாகப் பெறுவதற்கு பௌத்த ஸ்தாபனம் ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது.

இதே சமயத்தில் ஜாதிக விமுக்தி பெரமுனைத் தலைவர் திரு. கே. எம். பி. ராஜரத்தினுவும் குறிப்பிட்ட பௌத்த ஸ்தாபனத்துக்கு தமது கருத்துக்கள் அடங்கிய அறிக்கை யொன்றை சமர்ப்பித்திருக்கிறுர். இவ்வறிக்கைபற்றி சமீபத்தில் ஆராயப்படவிருக்கிறதாம்.

பௌத்த சிங்களவர்கள் எல்லோரும் தமிழ் மொழிக்கெதிராகப் புரட்சி செய்யத் தயாராக இருக்க வேண்டுமெனவும், 'பண்டா — செல்வா' ஒப்பந்தத்தைக் கிழித்தெறியச் செய்த பௌத்த பிக்குகள் கோஷ்டியைப் போன்ற ஒரு கூட்டத்தைத் திரட்டுவது நல்லதெனவும் திரு ராஜரத்தின அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறுராம்.

## சீனவுக்குத்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தான் சீனவுக்கு 'ஏற்றுமதி' செய்யப்பட விருப்பதாகக் கூறப்படுகிறது.

'ஏற்றுமதி' செய்யப்படுபவர்கள் சீனவில் 'இறக்குமதி' யானதும் வானெலி மூலமும் இதர பிரசுரங்கள் மூலமும் இந்தியாவுக்கெதிரான பிரச்சாரங்களில் ஈடுபடுத்தப்பட விருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன.

பீக்கிங் வானெலியில் இலங்கையிலுள்ள ஒருவருக்கு வேலை கிடைத்திருக்கிறது. அவரை இந்தியாவுக்கெதிரான பிரச்சாரங்களில் இறக்கியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

முக்கியமாக இலங்கையிலிருந்து 'ஏற்றுமதி' செய்யப்படுபவர்கள் இந்தியாவுக்கெதிராகவே உபயோகப்படுத்தப்பட விருக்கிறுர்கள் என்று அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

## ஆலயத்திற்கு அண்மையில் உள்ள நிலம் பறிபோகலாம்

### நில ஆணையாளருக்கு தமிழரசுத் தந்தை கடிதம்

புராதனப் பெருமை வாய்ந்த இந்து ஆலயமான திருமலைக் கோணேஸ்வரர் கோவிலுக்கண்மையில் உள்ள நிலத்தைக் குத்தகைக்குவிட அரசாங்கம் முடிவு செய்திருப்பதை ஆட்சேபித்து, தமிழரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் நில ஆணையாளருக்கு ஓர் கடிதம் அனுப்பியுள்ளார்.

"ஜூன் 28ந் திகதியிடப்பட்ட அரசாங்க வர்த்தமானியில், கோணேஸ்வரர் தெருவும் பிரெடெரிக் கோட்டைத் தெருவும் சந்திக்கும் சந்திக் கருகாமையிலுள்ள நிலப்பரப்பைக் குத்தகைக்கு விட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. திருக்கோணமலை நகராண்மைக் கழக எல்லைக்குட்பட்ட இந்த நிலப்பரப்பைக் குத்தகைக்கு விடுவதை நான் ஆட்சேபிக்கிறேன்' என்று திரு. செல்வநாயகம் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அக்கடிதத்தில் மேலும் கூறியிருப்பதாவது:

'எனது ஆட்சேபத்துக்கான காரணங்கள் பலவுண்டு. முதலாவதாக, நீங்கள் புத்த சமய வளர்ச்சியை முன்னிட்டுக் குத்தகைக்கு விட்டிருக்கும் காணி, கோணேஸ்வரர் ஆலயத்துக்குச் சிறு தொலைவிலேயே உள்ளது. இவ்வாலயம் சைவ சமயத்துக்குரித்தான பழம்பெரும் ஆலயமாகும். இவ்வாலயத்துக்கு அருகாமையிலுள்ள நிலப்பரப்பைப் 'புனித நில'மாகப் பிரகடனப்படுத்தும்படி, ஆலய பக்தர்கள் பிரதமருக்கு ஓர் கோரிக்கைவிடுத்திருந்தனர். அக்கோரிக்கையைக் கலாசார மந்திரியின் கவனத்துக்குப் பிரதமர் விட்டிருக்கிறுர். ஆகவே, இந்தக் கோரிக்கை அனுமதிக்கப்படும் பட்சத்தில், இந்துக்களுக்கான 'புனித நில'த்தில் வேறு சமயிகள் தமது சமயங்களின் வளர்ச்சிக்கான கட்டிடங்களை நிறுவ அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

அனுராதபுரம் 'புனித நக'ராக்கப்பட்ட சமயம், அதன் எல்லைக்குள் கந்தசுவாமி கோவில் கூட விட்டுவைக்கப்படவில்லை. அக்கோவில் அகற்றப்பட்டு, அதன் சொந்தக்காரர்களுக்கு வேறு இடத்தில் அதைநிறுவுவதற்கான நஷ்டஈடும் அளிக்கப்பட்டது.

குறிப்பிட்ட குத்தகைக்காணி சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததும், இந்து சமயிகளிடையே அதிக செல்வாக்குப் பெற்றதுமான ஓர் ஆலயத்தின் அருகாமையில் உள்ளபடியினுல், அதைச் சுற்றியுள்ள நிலப்பரப்பில், இவ்வாலயம் நாடிவரும் யாத்திரிகர்களுக்கான மடங்களும், சத்திரங்களும் அமைக்கவேண்டிய அவசியம் ஏற்படும்.

ஆகவே, இந்த நிலப்பரப்பில் ஓர் பௌத்த தேவாலயம் எழும்புவதற்கு இடமளிக்கப்பட்டால், இந்துக்களுக்கும் பௌத்தர்களுக்குமிடையே சச்சரவு ஏற்பட ஏதுவாகலாம்.

இக்காரணங்களை யிட்டே, நீங்கள் குத்தகைக்கு விட்டிருக்கும் நிலம் பற்றி எனது ஆட்சேபணையைத் தெரிவிக்கின்றேன்.'

### பல்லாயிரக் கணக்கில் கையெழுத்துக்கள்

இது சம்பந்தமாகத் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் உள்ள பல இயக்கங்கள் கையெழுத்து சேகரிக்கும் முயற்சியில் க்டந்த இருவாரங்களாக ஈடுபட்டிருந்தன. இது வரையில் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட தமிழ் பேசும் மக்கள் மத வேறுபாடற்ற முறையில் கையொப்பமிட்டிருப்பதாக நமது நிருபர் தெரிவித்துள்ளார்;

## தமிழரசு......

(1-ம் பக்கத் தொடர்சசி)

தொண்டர்கள் தீவிரமாகக் கவனம்செலுத்தி வருவதாகவும் தெரிய வருகிறது.

திரு. நவரத்தினத்தை எதிர்த்துப் போட்டியிடும் அபேட்சகர் சுயேச்சை வேட்பாளராக இருந்த போதிலும் பல உதிரிக் கட்சிப் பிரமுகர்களும் ஆளும் கட்சியின் கையாட்களும் அவருக்காக உழைப்பதில் முன் நிற்பதாகவும் தெரிய வருகிறது.

நோக்கங்களில் வேறுபட்டு, மாறுபட்டு நிற்கும் உதிரிக் கட்சிப் பிரமுகர்கள் அனைவரும் இச் சுயேச்சை அபேட்சகரின் கட்டுப்பணத்தையாகுதல் காப்பாற்றிவிட வேண்டும் என்ற நோக்கத்தில் ஒன்றுபட்டு உழைப்பதாகவும் நமது நிருபர் தெரிவித்துள்ளார்.

## நிதிமந்திரி பிரதமராகும்........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செலவுத் திட்டத்தைத் திரு. பீலிக்ஸ் டயஸ் மறைமுகமாக எதிர்த்து வருகிறுர் என்றும் தெரிகிறது. இதே அபிப்பிராயத்தைப் பிரதமரும் மேற்கொள்ளக் கூடுமோவெனவும் சிலர் விசனிக்கின்றனர்.

### அரிசி வெட்டு?

கடந்த வருடத்தில் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா தயாரித்த வரவு செலவுத் திட்டம் நாட்டில் பெரிய கொந்தளிப்பையே ஏற்படுத்தியது. அரிசி மான்ய வெட்டை நடைமுறைக்குக் கொண்டு வந்தோ அல்லது அரிசிக்கு விலை யேற்றியோ தான் வரவுசெலவைச் சமாளிக்க முடியும் என்றும், நாட்டில் பெரியதொரு நிதி நெருக்கடி உருவாகியுள்ளது என்றும் திரு. பீலிக்ஸ் பயங்காட்டினுர். அவருடைய கருத்தை வேத வாக்காகக் கொண்டு பிரதமர் திருமதி பண்டாரநாயக்காவும் நாட்டில் நெருக்கடி ஏற்பட்டிருப்பதால் தியாகம் செய்ய வேண்டும்' என்று மக்களுக்கு அறிவுரை பகன்றுர்.

இவ்வருடம் திரு. இலங்கரத்தின அரிசி வெட்டோ, விலை யேற்றமோ எதுவுமின்றி வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்துள்ளார். அவரது பட்ஜெட் பிரசங்கத்தில் நாட்டில் நிதி நெருக்கடியே கிடையாதென்று கூறினுர். இக் கூற்றினுல் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா 'ஒரு பொய்யர்' என்று திரு. இலங்கரத்தின ருசுப் படுத்தியிருப்பதாக அரசாங்க எம். பிக்களே கூறத் தொடங்கியுள்ளனர். எனவே இந்த பட்ஜெட் திரு. பீலிக்ஸுக்குச் சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளதாம்.

திரு. பீலிக்ஸ் அன்று கூறியது 'பொய்' என்பது ருசுவாகுமிடத்து, அவருடைய கூற்றை ஏற்றுத் தியாகம் செய்யுமாறு மக்களைத் தூண்டிய பிரதமருக்கும், திரு. இலங்கரத்தினவின் பட்ஜெட், சங்கடத்தை ஏற்படுத்தியிருக்கக் கூடுமென அரசியல் வட்டாரங்களில் நம்பப்படுகிறது.


அழகானவர்களாய்
திகழவேண்டுமா?

சருமத்திலுள்ள சொறி, சிரங்கு முதலியவற்ருல் ஏற்பட்ட வடுக்கள், தேமல், பருக்கள் முதலியவை நீங்கி சருமம் வசீகரத்துடனும், இளமையுடனும் திகழ ஓர் அற்புத மருந்து இருக்கிறது. 10 சத முத்திரையுடன் விபரங்களுக்கு எழுதவும்.

கருணவத்தி திசாநாயக்க,
208, கண்டி ரோடு, கம்பளை.

கிடைக்கப்பெறும்:

அஸாஹே
சிமிந்து

விநியோக இடம் : திருகோணமலை

கல்வனைஸ்ட் தகடுகள்
சாதாரணமானதும், நெளிவுள்ளதும்

அஸ்பெஸ்டஸ் தகடுகள்
சாதாரணமானதும், நெளிவுள்ளதும்

'ஸ்பியர்' மார்க்
உள்ளூர்த் தயாரிப்பான
முள்ளுக் கம்பி

ஜபார்ஜி பிரதர்ஸ்,
161, பிரின்ஸ் வீதி,
புறக்கோட்டை,
கொழும்பு-11.

தொலைபேசி : 78501

# பிறந்த நாட்டைக் காட்டிக் கொடுத்த கொம்யூனிஸ்ட்டுப் பிரமுகரா நமது போராட்டத்தை எடை போடுவது?

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

நாமிலே பௌத்த மக்கள் தென்வியட்நாம் அரசாங்கத்துடன் நடத்துகின்ற போராட்டத்துக்கு தாங்கள் ஆதரவு தெரிவிப்பதோடு, தென் வியட்நாம் பௌத்த மக்கள் சார்பாக உலக அபிப்பிராயத்தைத் திரட்டுவதாகவும் கூறியிருக்கிறார்கள். உண்மையிலே தென் வியட்நாமிலே பௌத்த மக்கள் தென் வியட்நாம் அரசாங்கத்தால் தாக்கப்பட்டால் எல்லோரும் அவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கவே வேண்டும். தமிழ் பேசும் மக்களாகிய நாங்களும் எங்களுடைய மனப்பூர்வமான அனுதாபத்தைத் தெரிவிக்கிறோம்.

கௌரவ சபாநாயகரவர்களே, இந்த நெருக்கடி அமெரிக்க அரசாங்கத்தினாலேதான் ஏற்பட்டதாக கூறுகிறார்கள். ஆனால் அமெரிக்கப் பத்திரிகைகளும் தென் வியட்நாம் பௌத்த மக்களுக்கு அனுதாபம் தெரிவித்துள்ளதும் எங்களுக்குத் தெரியும். இந்த நிலையிலே நான் இந்த அரசாங்கத்திடம் கேள்வியொன்று கேட்க விரும்புகின்றேன். இந்த நாட்டிலே வாழுகின்ற சிறுபான்மை இனமக்களை இவ்வளவு கொடுமையாகவும் அநீதியாகவும் நடத்துகின்ற இந்த அரசாங்கத்துக்கு, தென் வியட்நாமிலே வாழும் மக்களுக்கும் அவர்களுடைய போராட்டத்துக்கும் அனுதாபம் தெரிவிக்க என்ன யோக்கியதை இருக்கின்றது என்று கேட்க விரும்புகின்றேன்.

சில மாதங்களுக்கு முன்னர் சர்வதேச ஸ்தாபனத்திலே தென் ஆபிரிக்காவின் பிரச்சினையைப் பல நாடுகள் எழுப்பியது எங்களுக்குத் தெரியும். அப்பொழுது, அந்த ஸ்தாபனத்திலே எங்களுடைய அரசாங்கத்தின் சார்பில் அங்கம் வகிக்கும் பிரதிநிதி தென் ஆபிரிக்காவைக் கண்டித்துப் பேசினார். அப்பொழுது அந்த ஸ்தாபனத்திலே குழுமியிருந்த மற்றைய நாடுகளின் பிரதிநிதிகள் எங்களுடைய பிரதிநிதியைப் பார்த்துச் சிரித்தார்கள். நீங்கள் உங்களுடைய நாட்டிலேயிருக்கும் சிறுபான்மை இனத்தை அடக்கி ஒடுக்கிக்கொண்டு இருக்கும் நேரத்தில், இங்கே வந்து தென் ஆபிரிக்காவைப் பற்றிக் கண்டிப்பது விசித்திரமாக இருக்கிறது என்று சிரிப்பாய்ச் சிரித்தார்கள். இப்படியான ஒரு அரசாங்கம் என்ன உரிமையுடன், என்ன யோக்கியதையுடன் தென் வியட்நாம் பௌத்த மக்களுக்கு அனுதாபம் தெரிவிக்கின்றது என்று கேட்க விரும்புகின்றேன். இது மாத்திரமல்ல. 1961ம் ஆண்டிலே இலங்கையிலே தமிழ் பேசும் மக்கள், சிங்களம் மாத்திரம் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்படுவதை நிறுத்த வேண்டும் என்று போராட்டம் ஒன்றை நடாத்தியதை ஞாபகத்தில் வைத்திருப்பீர்கள் என்று நம்புகின்றேன். அப்பொழுது இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் சாதி வித்தியாசமின்றி, சமய வித்தியாசமின்றி, ஊர் வித்தியாசமின்றி, ஏன் கட்சி வித்தியாசமின்றியும் கூட ஒன்றுபட்டு அந்தப் போராட்டத்தை நடத்தினார்கள். அந்தப் போராட்டத்தை மிகவும் மிருகத்தனமாக, பட்டாளத்தின் உதவியுடன் இந்த அரசாங்கம் நசுக்கியது. எமது போராட்டம் சரியானது, நியாயமானது,

## இன்றைய பொலீஸ் படை, ஒரு குண்டாந்தடிப் படையாகும்

### அஞ்சலகம் அமைக்கப் பணம் இல்லாத ஆட்சியாளர்களா மாடி வீடு கட்டிக் கொடுக்கப் போகிறார்கள்?

எமது கோரிக்கைகள் நியாயமானவை என்பதை உலகமே ஒப்புக் கொண்டது. பொதுவாக உலக அபிப்பிராயமும், சிறப்பாக தென் இந்திய அபிப்பிராயமும் எங்கள் சார்பில் இருந்தன. அந்த அபிப்பிராயத்தை மாற்ற வேண்டும் என்பதற்காக எத்தனை பொய்ப் பிரசாரங்களை அரசாங்கம் செய்தது என்பதை உங்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். தென் இந்திய அபிப்பிராயம் எங்கள் சார்பில் இருக்கின்றது என்பதை எங்களுடைய அரசாங்கம் அறிந்ததும் இலங்கையிலே இருந்து இப்பொழுது புதிய செனற்றராக நியமனம் செய்யப்பட்டிருக்கும் திரு. நடேசன் அவர்களை இந்தியாவுக்கு அனுப்பியது. அவருடைய வாய் மூலமாக இலங்கையிலே தமிழ் பேசும் மக்கள் நடத்தும் போராட்டம் பிழையான போராட்டம், அது கிறிஸ்தவ மக்களால் அரசாங்கத்துக்கு எதிராக நடத்தப்படும் போராட்டமாகும் எனப் பொய்ப் பிரசாரம் புரிவித்ததை மறந்துவிட்டீர்களா என்று கேட்க விரும்புகின்றேன். அதுமட்டுமல்ல. இந்தியாவிலிருந்து, தன் பிறந்த நாட்டைக் காட்டிக் கொடுத்ததற்காகச் சிறைசென்ற தோழர் இராமமூர்த்தியை இலங்கைக்கு இறக்குமதி செய்தார்கள். இலங்கைக்கு இறக்குமதி செய்த அவரைக் கொழும்பிலே மாத்திரம் வைத்திருந்தார்களேயன்றி, போராட்டம் நடைபெறும் இடங்களைப் பார்க்கவோ அல்லது போராட்டம் நடத்துபவர்களைச் சந்திக்கவோ விடாமல் திருப்பியனுப்பினார்கள். கொழும்புக்கு வந்து திரும்பிய தோழர் இராமமூர்த்தி இந்தியா போய்ச் சேர்ந்ததும் ஒரு புத்தகம் எழுதி வெளியிட்டார். இங்கே தமிழர்கள் நடத்துகின்ற போராட்டம் பெற்றோல் எண்ணெய்க்காக என்று அவர் புத்தகத்தில் எழுதி வெளியிட்டிருக்கின்றார். இப்படிப் பொய்ப் பிரசாரம் செய்கின்ற அரசாங்கத்திற்கு வியட்நாம் பௌத்த மக்களுக்காக அனுதாபம் தெரிவிக்க என்ன யோக்கியதை இருக்கிறது? இதுவரை அயல்நாட்டு விவகாரங்கள் பற்றிப் பேசினேன். தொடர்ந்து உள்நாட்டு விவகாரங்கள் சிலவற்றைப் பற்றிப் பேச விரும்புகின்றேன். பொலீஸ் சேவை திருத்தி அமைக்கப்படுமென்று இந்த அரசாங்கம் கூறுகிறது. எந்த விதமாக இந்த அரசாங்கத்தினர் பொலீஸ் சேவையைத் திருத்தி அமைக்கப் போகிறார்கள் என்று கேட்க விரும்புகிறேன். இன்று எங்கள் நாட்டிலுள்ள பொலீஸ் படையினர் பொது மக்களிடம் மிகவும் அக்கிரமமாக நடந்து கொள்கிறார்கள். இன்றைய பொலீஸ்படை குண்டாந்தடிப் படையாக இருக்கிறது. ஒரு பொலீஸ் நிலையத்திற்கு இன்று ஒரு புகாரைப் பதிவு செய்யப் போனால்—ஒரு விசாரணையின் நிமித்தம் போனால் கேட்டுக் கேள்வி இல்லாமல் அடி உதை பட வேண்டியிருக்கிறது. இந்த நிலையில்தான் இன்று பொலீஸ் சேவை இருக்கிறது. சாதாரண பொது மக்களை—ஏன் பாராளுமன்றப் பிரதிநிதிகளைக் கூட இந்தப் பொலீஸ் படையினர் தெருவிலும் வீதிகளிலும் பொலீஸ் நிலையங்களிலும் தாக்குகின்றார்கள்.

திரு. சி. இராசதுரை:

இது அரசாங்கக்கட்டளை.

திரு. தர்மலிங்கம்:

இப்படியாகப் பொலீஸ் படையினர் அரசாங்க உத்தரவுடன்தான் நடந்து கொள்ளுகிறார்களா என்று கேட்க விரும்புகிறேன். யாழ்ப்பாணத்தில் எங்களுடைய கௌரவ நல்லூர்ப் பிரதிநிதியவர்கள் பொலீஸ் நிலையத்தில் வைத்து ஒரு பொலீஸ் இன்ஸ்பெக்டரால் தாக்கப்பட்ட விஷயம் எல்லோருக்கும் தெரிந்ததே. இந்தப் பொலீஸ் தாக்குதல் பற்றி எங்களுடைய கௌரவ பிரதம மந்திரி அவர்கள் செனேட் சபையில் எவ்விதமாகப் பதிலளித்தார் என்பதும் எல்லோரும் அறிந்த விஷயமே. அதன் பிறகு கௌரவ நல்லூர்ப் பிரதிநிதியவர்கள் தனிப்பட்ட முறையில் அந்தப் பொலீஸ் இன்ஸ்பெக்டருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தார். நீதி மன்றம் அந்தப் பொலீஸ் இன்ஸ்பெக்டர் நடந்துகொண்ட விதம் தவறு என்று கூறி அவரைச் சிறைக்கு அனுப்பியது. அப்படியாகச் சிறைக்கு அனுப்பப்பட்ட ஒருவர் இன்னும் 'யூனிபோம்' போட்டுக் கொண்டு கடமை பார்க்கிறார். அவர் அப்படிக் கடமை பார்ப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா தெரியாதா என்று கேட்க விரும்புகிறேன்.

## ஓலை வீடுகளை ஓட்டை வீடுகளாக்கிய பெருமைக்குரியது இன்றைய அரசாங்கம்

திரு. சிவசுந்தரம்:

ஏன் தெரியாது?

திரு. இராசதுரை:

நன்றாகத் தெரியும்.

திரு. தர்மலிங்கம்:

உண்மையில் பொலீஸ் படை மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்றால் அதில் மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட வேண்டும். பொலீஸார் மக்களுடன் சேர்ந்து பழக வேண்டும். இல்லாவிட்டால் பொலீஸ் சேவையால் பயன் எதுவும் இல்லை. பொலீஸாரிடம் மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட வேண்டுமென்றால் மக்கள் பேசும் பாஷையை அறிந்தவர்களாகப் பொலீஸார் இருக்க வேண்டும். பொலீஸ் நிலையத்திற்குச் சென்று ஒருவர் செய்யும் முதல் முறையீடு மிக முக்கியமானதென்பதை எல்லோரும் அறிவார்கள். இந்த முதல் முறையீட்டில் நீதி பரிபாலன விஷயங்கள் எவ்வளவோ தங்கியிருக்கின்றன. இந்த முதல் முறையீட்டில்தான் வழக்கின் வெற்றி தோல்வி தங்கியிருக்கிறது. இந்த முதல் முறையீடு ஒருவர் கூறும் அதே பாஷையில் பதியப்பட வேண்டும். அப்படியாகப் பதியப்பட்டிருந்தால்தான் அந்த முதல் முறையீடு நேர்மையான முறையில் பதியப்பட்டதென்று தெரியும். சமீபத்திய வழக்கொன்றில் உயர்தர நீதியரசர் ஒருவர் கூறினார், அந்தவழக்கைகருசுப் படுத்த முடியாததன் காரணம் என்னவென்றால், முதல் முறைப்பாடு அவர் கூறிய பாஷையில் பதியப்படாமல் வேறு பாஷையில் பதியப்பட்டதனாலாகும் என்று. இப்படி ஒரு நீதியரசர் கூறியிருந்தபோதிலும் இன்று நாங்கள் ஒரு முதல் முறைப்பாட்டைக்கொடுத்தால் அம் முறைப்பாட்டை நாங்கள் கொடுக்கின்ற பாஷையில் பதிகின்றார்களில்லை. அவர்கள் தங்களுக்கு விரும்பிய பாஷையில் — அனேகமாகச் சிங்கள மொழியில் — தான் பதிகின்றார்கள். ''அரசகருமமொழிக்கும்'' இதற்கும் ஒருவிதமான சம்பந்தமுமில்லை. இது நீதிபரிபாலனத்தையொட்டியது. நீதிபரிபாலனம், 'அரசகருமமொழியை'' விட மேம்பட்டது என்று கூற விரும்புகின்றேன்.

ஆகையால் இந்த அரசாங்கத்தை நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால் இனிமேலாவது ங்கள் பகுதிகளிலே எங்கள் மக்கள் தாக்கப்பட்டு, அவர்கள் பொலிஸ் நிலையங்களுக்குப் போய்த் தங்கள் முதல் முறைப்பாட்டைக் கொடுக்கும் போது, அம் முதல் முறைப்பாடு அவர்கள் கொடுக்கின்ற பாஷையிலேயே பதியப்படல் வேண்டும் என்பதாகும். அதற்கேற்ற ஒழுங்குகளை அரசாங்கம் செய்ய வேண்டும். நீதி பரிபாலனத்தைப் பொறுத்தவரையில் இது மிகவும் அத்தியாவசியம். அப்படிப் பதியப்படாவிட்டால், ஒரு மொழிபெயர்ப்பாளரின் திறமையில்தான் அவ் வழக்கின் வெற்றியும் தோல்வியும் தங்கியிருக்கின்றது; நீதியின் வெற்றியும் தோல்வியும் தங்கியிருக்கின்றது.

அடுத்ததாக, வீடமைப்புத் திட்டத்தைப் பற்றி ஏதோ கனக்க இந்த சிம்மாசனப் பிரசங்கத்திலே கூறியிருக்கிறார்கள். அதைப் பற்றிக் கவனிப்போம். 1960ம் ஆண்டு தொடக்கம் இந்த வீடமைப்புத் திட்டத்தைப் பற்றி ஒவ்வொரு சிம்மாசனப் பிரசங்கத்திலும் கூறி வந்திருக்கின்றார்கள். ஒவ்வொரு கேள்விகாரர்களுக்கும் இரண்டாயிரம் ரூபா கடன் கொடுப்போம் என்று 1960ம் ஆண்டு சிம்மாசனப் பிரசங்கத்திலே கூறினார்கள். அது மட்டுமல்ல. ஓலை வீடுகளையெல்லாம் ஓட்டு வீடுகளாக்கி விடுவோம் என்று கூறினார்கள். இந்த இரண்டாயிரம் ரூபா கடன் எத்தனை பேருக்கு இதுவரை கொடுக்கப்பட்டிருக்கின்றது என்று கேட்க விரும்புகின்றேன். எனக்குத் தெரிந்த வரையில் எனது தொகுதியில் எவருக்காவது இந்தக் கடன் இதுவரை கொடுக்கப்படவில்லை.—

(13-ம் பக்கம் பார்க்க)



பாட்டாளி முதல் பணக்காரன் வரை

எல்லோரும் புகைப்பது

கமலா பீடி

ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்

கமலா ஸ்டோர்ஸ்,

நிர். 15, செட்டியார் தெரு,
கொழும்பு-11

தந்தி தாமரை

தொலைபேசி 3597—6522

வண்ணக் கட்டிடங்களில் பட்டு வழிந்தோடிய நீரோட்டம். எழிலான வீதியில் தண்ணீர் வெள்ளத்தின் ஊழிகால ஆட்டம். அங்குமிங்கும் புகுந்து கொண்ட மனித உயிர்களின் எதிரொலி. தெருவில் நடமாட்டமே மறைந்தது.

மழை—பெரு மழை.

இருண்டு போன சந்தின் மூலையில் நடுங்கியவாறு ஒரு ஜீவன். ஒட்டிய உடலாய், ஒடுங்கிய கன்னங்களாய், உள்ளே தெரிந்த எலும்புகளை மூடக் கிழிந்த ஆடையாய், சிக்குப் பிடித்த தலையைச் சுற்றி ஒரு பழந்துண்டாய்—அவனருகே சிதறிக் கிடந்த பல் வகைப் பட்ட தோல்கள்; சிறு சிறு நார்கள்; ஏதேதோ உடைந்து ஒட்டப்பட்ட ஆயுதங்கள்; கையிலே ஓர் அரை குறை சப்பாத்து; அதைத் தான் அவன் வெகு வேகமாகத் தைத்து ஒட்டுப் போட்டுக்கொண்டிருந்தான். கண்களைக் குருடாக்கும் ஒளியும், காதுகளைச் செவிடாக்கும் ஒலியும்—

'மைக்கேல், மைக்கேல்!' இருளைக் கிழித்து வந்த அந்தப் பழகிய சப்தம். மைக்கேல் நிமிர்ந்து பார்த்தான். 'விக்டர்'. அவனேதான். அவனுடைய உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ளும் அவனுடைய நண்பன்தான்—

'மைக்கேல், இன்னுமா வீட்டுக்குப் போகல்ல? மணி எட்டு ஆகிவிட்டதே!'

'இன்னும் வேலை முடியவில்லை விக்டர்!'

'என்னப்பா நேத்துக் காலமே தொடங்கிய வேலையாச்சே!'

'என்னப்பா செய்யறது விக்டர்?' மைக்கலின் கண்களில் நீர்த்திவலைகள் நெளிந்தன.

'முந்தா நாளே முடிச்சிட்டேன், தொர வந்து சப்பாத்து போட்டுப் பாத்தாரு சரியா அமையல்ல, தடாபுடார்னு கூச்சல் போட்டாரு. அத திரும்ப வாங்கி சரியா செய்து தர்ரேன்னு சொன்னேன்......'

''ஏன் அத தூக்கி அவன் மொகத்தில எறியறது தானே!

'இல்ல விக்டர். தொர ரொம்பவும் நல்லவரு, ஏங்கிட்டத்தான் எதையும் தைப்பாரு. யாரோ அவருடைய கூட்டாளிக்கு கல்யாணமாம். அதுக்குத்தான் போட்டுட்டுப் போகனும்னு ஆர்டர் பண்ணிஞரு. அவரு நெனச்சிருந்தா சாப்பில புதுசா வாங்கியிருக்கலாம். ஆனு என்ன நம்பி இத குடுத்தாரு. அந்த ஆத்திரம்தான் அப்படி பேசிஞரு!'

'கடைசியாக நீ என்ன சொன்னே?'

'நாளக்கி காலமே எல்லாம் ரெடியாய் வைச்சிருக்கேன். வந்து வாங்கிட்டு போங்க' கோவிச்சிக்கார்தீங்க தொர என்று சொல்லி அனுப்பினேன்'

'அடப்பாவி! அதுக்குத்தானு நீ இப்படி சாவுறே? மேரி உன்னையே பாத்துக்கிட்டுயிருக்குமே! ஜோன் வாசலிலே நிற்பானே.....வா ...வா...நாளைக்குப் பாத்துக்கலாம்.'

விக்டர் மைக்கேலின் கரத்தைப் பிடித்து இழுத்தான். வான் வெளியை வெட்டிச் சென்ற மின்னல் கீற்று—

விக்டர் அலறிப் பின்வாங்கினுன். மைக்கேலின் உடம்பு நெருப்பாய் சுட்டது. 'அடப்பாவி ஏண்டா இப்படிப் போனுய்?' விக்டர் சொல்லிக்கொண்டே வெளியே ஓடினுன். மீண்டும் திரும்பி வந்தபோது நன்ருக நனைந்து விட்டான். அவனருகே அந்த 'ரிக்ஷா'—உடைந்த

சிறுகதை

# அமைந்த பாதை

—தங்க-பிரகாஷ்—

**தனது மகன் தன்னைப் போலவே கஷ்டப்படக் கூடாது, அவன் நல்லாய் வாழ வேண்டுமென்ற கனவின் உந்தலில் செருப்பாய் உழைத்தான் அவன்— மைக்கேல்.**

**ஆனுல், மகனுக்கு அமைந்த பாதை?..................**

லொட லொட வண்டி. அது அவனுடைய ஒரே சொத்து. வண்டியை முன்னே தள்ளி மைக்கேலை பலாத்காரமாக உள்ளே தூக்கிப் போட்டான். பின்னர் அதை இழுத்துக்கொண்டு மழையில் உருண்டு புரண்டு ஓடினுன்.

●

'அம்மா, அம்மா, அப்பா இன்னும் வர்லியா? நாளக்கி ஸ்கூலுக்கு பீஸ் குடுக்கணும்மா. அப்பா இன்னைக்கு கொண்டு வர்றேன்னு சொன்னுரே' ஜோன் சத்தம் போட்டுக் கேட்டான். மேரி வெளியே ஓடி வந்தாள்.

'இப்ப வந்திரும்டா கண்ணு. நீ நாளக்கி பீஸோடு ஸ்கூலுக்கு போவ......'

அன்னையின் வாய் மூடவில்லை. ரிக்ஷாவிலிருந்து மைக்கேலை இழுத்துத் தோளில் போட்டுக் கொண்டு தள்ளாடித் தள்ளாடி உள்ளே வந்தான் விக்டர். 'அய்யோ இதென்ன' என்று கத்திக்கொண்டே அருகே ஓடிஞள் மேரி. 'அப்பா' என்றவாறே மூலையிலிருந்த கட்டிலை நகர்த்திஞன் ஜோன். மேரி அவசர அவசரமாக அடுப்பை மூட்டிஞள். ஜோன் ஜேம்ஸ் பாதரிடம் ஓடிஞன். அடுத்த வீட்டு திரசாவும் அவள் கணவனும் உதவிக்கு வந்து விட்டார்கள்.

●

இரண்டு நாட்களாக அந்த வீட்டில் துயரத்தின் நிழலே ஊசலாடியது. இடி இடித்தபோதும், புயலடித்த போதும், கடலலை ஆயிரம் கரை புரண்டபோதும் கலங்காத கப்பல் தலைவனைப் போல் அன்று வரை இருந்த மேரி, இன்று மன உளைச்சலில் நெஞ்சம் குமுறிஞள்.

மைக்கேல் இன்னும் நினைவு தடுமாறிய நிலைமையிலே இருந்தான். வைத்தியரின் மருத்துவம், ஜேம்ஸ் பாதரின் அன்பான மொழிகள், மேரியின் கதறல், திரசம்மாவின் அனுதாபம் அவனை ஒன்றுமே செய்யவில்லை. அவன் இதய சாகரத்தில் மாறி மாறி வந்தது அவை இரண்டும் தான்—

அந்த முடிவு பெருத சப்பாத்து...அவனுடைய ஒரே மகன்......

'நான் பாவி, தொரய ஏமாத்திட்டேன். எத்தனை வருஷமா எங்கிட்ட தைச்சாரு நம்பிக்கையோடு, நாணயமுள்ளவன் நான் என எண்ணித்தான் தைச்சாரு. அய்யோ எனக்கு இவ்வளவு கஷ்டமா? ஏன் கஷ்டப்பட்டேன்? என் மகன் ஒரே செல்வம்...ஜோன்...'

ஜோன்—

மைக்கேலின் ஒரே மகன். பரம்பரைத் தொழிலாளி மைக்கேல். சப்பாத்து தைக்கும் தொழிலாளி. சமுதாய அமைப்பென்னும் சாக்கடையிலே தள்ளப்பட்ட ஜீவன். அவனை நம்பிய அந்த மேரியைக் கைப்பிடித்த நாள் முதல் பொல்லாத அந்த அடிமை விலங்கினை அறுத்தெறியவே துடித்தான். தலைநிமிர்ந்து வாழும் மற்றவர்களுடன் சரிநிகர் சமமாகவே வாழ விரும்பிஞன். மகன் ஜோன் பிறந்தவுடன் அவனை வளர்த்து, பெரியவனுக்கி, 'ஜேம்ஸ் பாதரின்' பள்ளியில் அவனை ஒப்படைக்கும்வரை மைக்கேல் அடைந்த இன்னல்கள்...மேரி பெற்ற சுமைகள்..அவை பொல்லாதவை. மகன் ஜோன் வளர்ந்து ஆளாகிவிடுவான், நன்ருகப் படிப்பான், மற்றப் பிள்ளைகளைப்போல் உடை உடுத்துவான், சப்பாத்துப் போடுவான், 'டை' கட்டுவான். அவர்களுடன் விளையாடுவான், நடப்பான், திரிவான். அந்தப் பொன்னுனாளெல்லாம் வருமே......

அவன் நெஞ்சிலே எண்ணங்கள் அடிபட்டு நொறுங்கின. உடல் அனலாய்க் கொதித்தது. தொண்டையிலே தண்ணீர் வரண்டு நா உலர்ந்தது.

''மேரி, மேரி ... ஜோன் ... ஜோன்''

எங்கிருந்தோ மலைகளைக் கடந்து, ஆறுகளைக் கடந்து வயல் வெளியிலே எதிரொலித்த அவலத்தின் தீனக் குரல்—

மேரியும் ஜோனும் மைக்கேலினருகே ஓடிஞர்கள். திரசம்மாவும் ஜேம்ஸ் பாதரும் பின்தொடர்ந்தார்கள். மைக்கேலின் கண்கள் திறந்து ஒளிவிட்டுப் பிரகாசித்தன. தலையை மெல்லத் தூக்கி வலது புறச் சுவரை நோக்கித் திருப்பிஞன்...

• அங்கே—

அன்பே உருவாய் அமைந்த 'இயேசு நாதரின்' சிலை புன்னகை பூத்தது. 'அதோ இயேசு என்னை அழைக்கிருர். தாகத்திற்குத் தண்ணீர் குடிக்க அழைக்கிருர். ஜீவ ஊற்றை நோக்கி...மேரி... ஜோன் ... இயேசு ... இதோ வந்துவிட்டேன்...''

மைக்கேல் அலறித் துடித்தான். தலை சாய்ந்தது. உடம்பு ஜில்லிட்டு ஓய்ந்தது. அந்தஉடம்பின்மீது விழுந்து மேரியும் ஜோனும் புரண்டனர்.

''மைக்கேல் போய் விட்டான். அன்பைத் தேடி, இயேசு சுவாமியின் ஜீவத் தண்ணீரைத் தேடிப் போய் விட்டான்'' ஜேம்ஸ் பாதரின் வாய் மெல்லச் சொல்லியது.

தலைவன் மறைந்து ஒரு வாரம் ஆகிவிட்டது. துயர உளைச்சல் மேரியைச் சின்னு பின்னப்படுத்தி விட்டது. உடலெங்கும் கண்ணீர்த் திவலைகள் கட்டிசளாகவே மாறியிருந்தன. ஜோன் — அந்த சின்னஞ் சிறு உள்ளம் ஏக்கத்தால் வாடியது. சிந்தை நொந்து மேரியின் கல்லையும் உருகச் செய்யும் கண்ணீர் ஓட்டம்—

'ஏம்மா இப்படியே அழுது சொண்டிருந்தா என்னதான் நடக்கும்? மாண்டவங்க வந்திடுவாங்களா? ஜோன் — அந்தக் குழந்த ஏக்கத்தால் வாடுருன். அவனக் காப்பாத்த வேணு?' திரசம்மா தான் பேசிஞள். மேரி நிமிர்ந்து பார்த்தாள்.

'என்னக்கா செய்யறது? பாவி என்னையும் இயேசு அழைக்காம விட்டிட்டாரே, என் செல்வத்தைக் எப்படிக் காப்பாதுவேன்? மற்றவங்களப்போல என் மகனையும் படிக்கப் போடனும், மனுஷனுக்கனும்னு கனவு கண்டாரு என் சுவாமி, இன்று எல்லாமே கனவு. வெறுங் கனவு. நாங்க இப்ப நடைப் பிணமாயிட்டோம். எதுக்கு வாழனும்? நாங்க யாருக்கு வாழனும்?' மேரியின் நெஞ்சோட்டம் வார்ப்பெடுத்தது.

'அழாதம்மா! குழந்த இதக் கேட்டான்னு என்ன செய்வான்? மனசெ தேற்றிக்கம்மா. எப்படியாவது நீ ஒழைச்சுத்தான் மகனக்காப்பாத்தனும். ஜேம்ஸ் பாதரையும் நம்பிப் பிரயோசனமில்லை அவரே அனுதக் குழந்தகள வைச்சுக்கிட்டு தவிக்கிருரு. நீதானம்மா குழந்தக்கி எல்லாம். நாலு இடத்தில கூலி வேலை செய்தாவது ஜோனை ஆளாக்கிடுமா!' திரசம்மா நிதானமாகப் பேசிஞள்.

'அக்கா என்னுல இந்தச் சித்திரவதையைத் தாங்க முடியாது. இருந்த எல்லாத்தையும் இந்த ஒரு வாரத்திலே வித்துட்டேன். இனிமே யார் சாப்பாடு போடுவா? என் சுவாமியின் தோல் பைதான் இருக்கு...? மேரி பேசி முடிக்கவில்லை.

'நான் இருக்கிறேனம்மா... நீ ஏம்மா அழனும்—எல்லாத்துக்கும் நம்ம இயேசு சுவாமி இருக்கிருரம்மா...' தெளிந்த நீரின் சரக்கூடம் போல் துள்ளிவிழுந்த வார்த்தைகள். மேரியும் திரசம்மாவும் வாயிலை நோக்கினர்.

அங்கே—

ஜோன் — அந்த இளங் கன்று. உலகின் ஆசாபாசங்களின் வாசனையே யறியாத களங்கமற்ற உள்ளம். சாந்தமே உருவாய் நின்றிருந்தான். அவன் கரத்தில் தொங்கிய கிழிந்த தோல் உறை அவற்றினின்று வெளியே தெரிந்த கிழிந்த சப்பாத்துகள். உடைந்து ஒட்டப்பட்ட ஆயுதங்கள்.

அன்னையின் உள்ளம் எரிமலையாய் வெடித்தது. திரசம்மா கண்களின்றும் பாய்ந்த நீரை அணைபோட்டுப் பார்த்தாள். முடியவில்லை. ஜோன் சமாளித்துக் கொண்டான். வார்த்தைகள் முத்துக்களென உருண்டன:

'நான் முடிவு கட்டி விட்டேனம்மா. இதை விட்டா வேறு நமக்கு ஏதம்மா வாழ்வு? பேணி வளர்த்த தந்தையைக் காப்பாத்த முடியவில்லை. பெற்றெடுத்த உங்களையுமா காப்பாத்தக் கூடாது? நான் இனிமே எப்படிப் படிப்பேன்? வாழ்வெல்லாம் சிதைந்து நொறுங்கி வழியே தெரியாது திகைக்கும் போது நான் இதைக்கூடச் செய்யக் கூடாதா? நான் செய்வேனம்மா ... அப்பா எனக்கு தொழில் கற்றுத்தர மறுத்து விட்டார். ஆனு நான் அவருக்கும் தெரியாம அவரப் பாத்து படித்துக்கொண்டேனம்மா. தைரியமா இந்தப் பாதையிலே நடப்பேன். நமக்கேற்ற பாதை இதுதான். தாயே இதுதான் நமக்கு அமைந்த பாதை.''

(யாவும் கற்பனை)


## வியாபாரத்திற் கழகு விளம்பரம் செய்தல்

### உங்கள் வியாதி எதுவானுலும் தீர்த்துத் தருகிருேம்



நரம்பு பெலவீனம், பெலக்குறைவு, குண்டிக்காய், மூத்திரப்பை கோளாறுகள், அசுத்த இரத்தத்தால் ஏற்படும் பண்புறைகள், பற்றுகள், க்ஷயரோகம், இளைப்பு, இருமல், வலிப்பு, தீராத வயிற்று வலி, வாதம், வயிற்றுக் கோளாறுகள், பித்த காமாலை, சோகை, பாண்டு, அண்டவாய்வு, இரத்த மூலம், சீழ்மூலம், வெளி மூலம், பெண்களுக்கு ஏற்படும் சூதகக் கோளாறுகள், கெர்ப்பக் கோளாறுகள் இன்னும் பல டாக்டர்களால் கைவிடப்பட்ட நாட்பட்ட வியாதிகளினின்று பூரண குணமடைவதற்கு உடனே காலதாமதமின்றி புகழ்வாய்ந்த ஆயுர்வேத டாக்டர் T. H. மதுரநாயகம் வைத்தியராஜ் MD. MS. (H) Cal. அவர்களைக் கலந்தாலோசியுங்கள்.

63 வருட பரம்பரை வைத்திய நிபுணர்.

**ஞானசுந்தர வைத்தியசாலை,**

187, செட்டியார் தெரு, கொழும்பு-11.

# கறுப்புப் பணத்தால் கொழுக்கும் நடிகர்கள்

## கடுமையாகத் தண்டிக்க பாலச்சந்தர் யோசனை

"ஒரு நடிகர் நடித்த படம் எதிர்பாராத விதமாக வெற்றியீட்டி விட்டால் போதும். ஒரு படத்துக்கு ஆயிரக்கணக்கான ரூபாய் வாங்கும் அவர் திடீரெனத் தன்னைத் தானே லட்சாதிபதியாக்கி விடுகிறார். தேவைக்கதிகமாகத் தேவைப்படும் பணத்தை கறுப்புப் பணமாக வாங்கி விடுகிறார்கள் இந்த நடிகர்கள். இந்த வகைச் சம்பாத்தியம் படத்துறை ஒன்றில் தான் இருக்கிறது." இவ்வாறு நமது சென்னை நிருபரிடம் டைரக்டர் பாலச்சந்தர் கூறினார்.

மத்திய அரசாங்க அமைச்சர் கோபால் ரெட்டியாருக்கு தென்னிந்திய பிலிம் வர்த்தக சபையார் அளித்த ஓர் வரவேற்புபசாரத்தின் போது தமிழகத்துப் பேசும் படத் துறை விற்பன்னர்கள் அனைவரும் வந்திருந்தனர். நடிகர்கள் கறுப்புப்பணம் பெறுவதை மையமாக வைத்தே அன்றைய சர்ச்சைகள் யாவும் நடைபெற்றன. கறுப்புப் பணம் பற்றிப் பேசும்போது டைரக்டர் பாலச்சந்தர் மேற்கண்டவாறு நமது நிருபரிடம் கருத்துத் தெரிவித்தார்.



கருவியின் ஒலி இனிதா, காளையின் இசை இனிதா? என்பதை அறிய அவாவுறுகிறாள் வனிதை பலேபாண்டியாவில் சிவாஜி, தேவிகாவும்.

திரு. பாலச்சந்தர் மேலும் கூறியதாவது: இன்று நட்சத்திரபீடத்தை அடைந்துள்ள எவரும் கூடிய மட்டும் அதே நிலையில் வாழ்கிறார்கள். பணத்தைக் கொண்டே தங்கள் உடலை அழகு படுத்திக் கொண்டு எத்தனை வயதானாலும் அழகும், இளமையும் குறையாமல் நிரந்தரக் கதாநாயகர்களாகிவிடுகிறார்கள். பல லட்சக்கணக்கான ரூபாய்களை திரைப்படங்களின் மூலம் திரட்டிவிடுகிறார்கள்.

கறுப்புப் பணம் வாங்கும் நடிகர்கள் மட்டும் குற்றவாளிகளல்லர். கறுப்புப் பணம் கொடுப்பவர்களும் பாரிய குற்றவாளிகளேயாவர். இக கறுப்புப்பண நடவடிக்கைகளை அரசாங்கம் கண்காணிக்க வேண்டியது அவசியமாகிறது.

### மெஹ்பூப்

பிரபல இந்திப் படத் தயாரிப்பாளரான மெஹ்பூப் கான் அவர்களும் இந்த விருந்து வைபவத்தில் கலந்து கொண்டு பேசினார்

திரு. மெஹ்பூப் பேசியதாவது:- நட்சத்திரங்களாக இன்று திகழுபவர்கள் நாளை மங்கிப் போய் விடுவார்கள். அவர்களுடைய புகழ் வாழ்க்கை நிரந்தரமானதல்ல. மிகக் குறுகிய காலத்திலேயே அவர்கள் பேரும், புகழும், பணமும் சம்பாதிக்க முடியும்.

நேற்று நட்சத்திர நிலையிலிருந்தவர்கள் இன்று படுமோசமான நிலையில் பம்பாய் நகரில் சுற்றி அலைவதை நாம் தினசரி பார்க்கக்கூடியதாக இருக்கிறது. ஒரு சிலர் மட்டும் தான் கூடியது 10 வருடங்களாவது பிரகாசிக்க முடிகிறது. அதற்கிடையில் அவர்கள் சம்பாதிக்கக் கூடிய கூடுதலான தொகையைச் சம்பாதித்து விடுகிறார்கள். இதற்காக அரசாங்கத்தின் கண்களில் படாமல் ஏதோ பணம் பெறுகிறார்கள்.

கறுப்புப் பணம் வாங்குபவர்களையும், கொடுப்பவர்களையும் அரசாங்கம் கண்டிக்கிறது. அவர்களைக் கையும் களவுமாகக் கண்டு பிடிக்க முயலுகிறது. கள்ளத்தனமாக நடக்கும் இவர்களைத் தண்டிக்க முயலும் ஆட்சியாளருக்கு நாமும் உதவுவோம். ஆனால் அதே வேளையில் நடிகர்களிடமும் கொஞ்சம் கருணையுடன் அரசாங்கம் நடந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

## டைரக்டருக்கு ஒரு ஸ்டூடியோ

பிரபல டைரக்டர் பீம்சிங் சென்னை நியூடோன் ஸ்டுடியோவின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றிருக்கிறார். நியூடோன் என்றிருந்த பெயரை ஸ்ரீ வெங்கடேஸ்வரா சினிஸ்டூடியோ என்று பெயர் மாற்றியுள்ளனர்.

## தாத்தா, தந்தை, மகன் வேடங்களில் நாகேஷ்

தாத்தா, தந்தை, மகன் ஆகிய மூன்று பாகங்களில் நகைச்சுவை நடிகர் நாகேஷ் தோன்றுகிறார். இம் மூவரையும் ஒரே சமயத்தில் ஒரே இடத்திலே பார்க்க நேருகிறது புரட்சி நடிகர் எம். ஜி. ஆருக்கு.

குடுகுடுத்த கிழவனாகவும், நடுத்தர வயதுத் தந்தையாகவும், வாலிப வயதினனாகவும் நாகேஷ் வேடம் புனைந்துகொண்டு வரும் கட்டங்களை, "பெரிய இடத்துப் பெண்". "பாசம்" ஆகிய படங்களைத் தயாரித்த ஆர். ஆர். பிக்சர்சாரின் அடுத்த பெயரிடப்படாத படத்துக்காக நெப்டியூன் ஸ்டுடியோவில் படமாக்கி படப்பிடிப்பை ஆரம்பித்தனர். இதே கட்டத்தில் எம். ஜி. ஆரும் தோன்றுகிறார்.

புரட்சி நடிகருக்குச் சோடியாகச் சரோஜாதேவி நடிக்கிறார். சக்தி கிருஷ்ணசாமி கதை வசனம் எழுதியுள்ள இப்படத்துக்கு கவிஞர் கண்ணதாசன் பாடல்கள் எழுத விஸ்வநாதன் ராமமூர்த்தி இசை அமைக்க, ராமண்ணா டைரக்ட் செய்கிறார்.



## நீர்கொழும்பில் பரதநாட்டியம்

தஞ்சாவூரைச் சேர்ந்த வழுவூர் ராமையாபிள்ளையிடம் பரதம் கற்ற செல்வி திரு. குமாரசாமியின் மாணவிகளின் பரத நாட்டியக் கச்சேரி இவ்வார இறுதியில் நீர்கொழும்பு நகர ரசிகர்களின் ஆவலைப் பூர்த்திசெய்யக்கூடிய வசதி ஏற்பட்டுள்ளது. நீர்கொழும்பு நகர மண்டபத்தில் இந் நாட்டிய நிகழ்ச்சியை இந்து வாலிபர் சங்கத்தினர் ஏற்படுத்தியுள்ளனர்.

வாலிபர் சங்க நிதிக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பரத நாட்டியக் கச்சேரிக்கு நீர்கொழும்பு சுப்ரீம் கோர்ட் நீதிபதி கௌரவ வி. மாணிக்க வாசகர் தலைமை தாங்குகிறார்.

செல்வி திரு. குமாரசாமி யாழ்ப்பாணத்தில் பரதநாட்டியம், சங்கீதம் ஆகியவற்றுக்கான வகுப்புகளை நடாத்தி வருகிறார் எனத் தெரிகிறது.

## எமது விமர்சனம்

### தியாகியின் குரலே தூய்மையின் உருவே மணி ஓசை

அவலெட்சணத்தின் அவதாரம்தான் அவன். கல்வி அறிவும் கிடையாது. ஆனால் அவனிடம் அன்புண்டு, ஆதரவுண்டு. அருங் குணங்கள் அத்தனையும் உண்டு.

பகட்டையும், படாடோபத்தையும், வெளி அழகையும் அள்ளிப் பருகி அரவணைக்கத் தெரிந்த உலகுக்கு,



தியாகமே உருவான, அந்த அழகற்ற—கூனனான அருணகிரியை மதிக்கத் தெரியவில்லை. ஊரார் மட்டும் அவனை வெறுக்கவில்லை. சொந்தத் தந்தையே அவனைப் புறக்கணித்தார்.

பெற்றோர் இருந்தும் தாயை அறிய முடியாமலும், தந்தையின் அன்பைப் பெற முடியாமலும், பாட்டலின் அரவணைப்பிலும் தங்கை என்று உறவு கொண்டாடிய மதனியின் பாசத்திலும் வளரும் அருணகிரியின் அப்பழுக்கற்ற உள்ளத் தூய்மையை உருக்கமாக எடுத்துக் காட்டும் உன்னத காவியமாக மலர்ந்துள்ளது மணி ஓசை.

அவலெட்சணக் கூனனாக கல்யாணகுமார் நடிக்கிறார். ஒப்பனையும், நடிப்பும் கனகச்சிதமாகப் பொருந்தியுள்ளன. உள்ளத் துடிப்பையும் உணர்ச்சிக் கட்டங்களையும் நாசூக்காகக் கையாண்டு தமது நடிப்புத் திறமையை வெளிக்காட்டியுள்ளார். ஊராரின் அவமதிப்பால் மனம் ஒடிந்து ஒதுங்கி வாழும் வேளையிலும், தனது தவறான எண்ணத்தை உணரும் போதும், தங்கையின் கனவை நனவாக்கி எக்களிப்படையும் போதும் நடிப்பு உச்ச நிலையை அடைகிறது.

கொடூரமான நினைவுகளிலே புலன் செலுத்தும் தந்தையின் பாகத்தில் தோன்றும் எம். ஆர். ராதாவும் இப்படத்தில் அமைதியாக நடித்துள்ளார். அனுவசியமான துள்ளல்களைக் காண முடியவில்லை. விஜயகுமாரி, புஷ்பலதா, முத்துராமன், குமாரி ருக்மணி நாகையா போன்றோரும் பரவாயில்லை.

நகைச்சுவைப் பாகத்தில் வரும் நாகேஷ் சிரிப்பூட்டுகிறார். பழைய "கிராமபோன்" சகிதம் திரையை விட்டு வெளியேறும் கட்டம் நம்மைக் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைக்கும்.

செங்குத்தான மலையிலிருந்து சீறிப்பாயும் நதி, சுனைகளில் தங்கி மீண்டும் வேகமாக ஓடுவது போன்று படத்தின் ஓட்டம் உள்ளது. நடுக்கட்டத்தில் ஏற்படும் சிறு தயக்கத்தை விடப் படம் நன்றாகவே நகருகிறது.

புஷ்பலதா. விஜயகுமாரி இருவரும் சோலைக்குள் போடும் கும்மாளம் சில ரசிகர்களுக்குக் கிளுகிளுப்பை மூட்டும். 'பாயுதுபாயுது கண்ணம்மா', 'தேவன் கோயில் மணி ஓசை', 'ஆட்டுக்குட்டி ஆட்டுக்குட்டி மாமாவைப் பாரு' ஆகிய கவிஞரின் பாடல்கள் இனிமையாகவுள்ளன. வசன



அமைப்பும் நன்றாகவிருக்கும் இப்படம் தியாகத்தின் உச்சத்துக்கே சென்று விட்ட ஒருவனின் தூய வாழ்வைக் காட்டுகிறது. அருணகிரி போன்ற எத்தனையோ ஜீவன்கள் நம்மிடையிலும் உள்ளன. அந்த உத்தமர்களின் உள்ளத்தை ஒலிபரப்பும் மணி ஓசை எல்லோர்க்கும் இன்பம் பயக்கும் என்பதில் ஐயமில்லை.

—நாதன்.



பத்துமாதம் சுமந்து பெற்றெடுத்த பிள்ளையை வேற்றிடத்தில் வளரவிட்டுப் பரிதவிக்கும் இரு உள்ளங்கள் அவதியுறுகின்றன. 'அன்னை' படத்தில் முத்தையாவும் சௌகார் ஜானகியும்.

# சித்த ஆயுள் வேத வைத்தியர்களுக்கு இந்நாட்டில் இடமில்லையா?

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. சிவசுந்தரம்:

காசு எல்லாம் முடிந்து விட்டது.

திரு. தர்மலிங்கம்:

இரண்டு மூன்று தினங்களுக்கு முன் என்னை எத்தனையோ பேர் இது விஷயமாகக் கேட்டார்கள். நான் வீடமைப்புக் கமிஷனருக்கு இது பற்றி ஒரு கடிதம் எழுதினேன். ஏன் இப்பணம் இதுவரை கொடுக்கப்படவில்லை என்று அக் கடிதத்திற் கேட்டிருந்தேன். அவர் எழுதிய பதிலில், "எங்களிடம் பணம் இல்லை; பணம் கிடைத்ததும் கொடுப்போம்" என்று குறிப்பிட்டிருக்கின்றது. மூன்று வருடங்களாகியும் இதுவரை இந்தக் கடன் ஒருவருக்காவது கொடுக்கப்படவில்லை.

அது மட்டுமல்ல. ஓலை வீடுகளை ஓட்டு வீடுகளாக்குவோம் என்றார்கள். ஆனால், இன்று ஓலை வீடுகள், ஓட்டை வீடுகளாக இருக்கின்றன. ஓர் ஓலை வீட்டையாவது ஓட்டு வீடாக்கினார்களா என்று. கேட்க விரும்புகின்றேன்.

1961ம் ஆண்டிலே கூறினார்கள், "we will intensify the housing programme" என்று. அதாவது, வீடமைப்புத் திட்டத்தில் தீவிரமான கவனம் செலுத்துவோம் என்று கூறினார்கள். 1962ம் ஆண்டிலே கூறினார்கள், "we will accelerate the housing programme" என்று. அதாவது, வீடமைப்புத் திட்டத்தைத் துரிதமாகக் கொண்டு நடத்துவோம் என்று கூறினார்கள். இவ்வீடமைப்புத் திட்டத்தில் தீவிரமான கவனம் செலுத்துவோம் என்று 1961ம் ஆண்டிலே கூறிய அரசாங்கம் என்ன செய்தது? அரசாங்கப் பக்க முதல்வரிசை ஆசனங்களிலே இருக்கும் அமைச்சர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்தது. மிகவும் துரிதமாகவும் சுறுசுறுப்பாகவும் வீடமைப்புத் திட்டத்தையிட்டுக் கவனமெடுப்போம் என்று 1962ம் ஆண்டிலே கூறிய அரசாங்கம் என்ன செய்தது? திருமதி பண்டாரநாயக்கா அவர்களின் வீட்டு நாய்களுக்கு ஒரு வீட்டைக் கட்டிக் கொடுத்தது. இந்த வீடமைப்பு விஷயத்தில் திருமதி பண்டாரநாயக்கா அவர்களின் வீட்டு நாய்களை விடத் தங்களுக்கு நல்ல இடம் கிடைத்திருக்கின்றது என்று திருமதி பண்டாரநாயக்கா அரசாங்கத்தின் அமைச்சர்கள் ஆறுதல் அடைவார்கள் என நினைக்கின்றேன்.

இவ்வருட சிம்மாசனப் பிரசங்கத்திலே இது பற்றி என்ன கூறியிருக்கிறார்கள் என்று கவனிப்போம். வீடு தேவையானோருக்கு நாலாயிரம் மாடி வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுமென்று கூறப்பட்டிருக்கின்றது. இந்த அரசாங்கத்துக்கு இப்படிக் கூறுவதற்கு இனியும் என்ன உரிமை இருக்கின்றது என்று கேட்க விரும்புகிறேன். உண்மையிலே நீங்கள் அப்படிச் செய்வீர்களாவென்று உங்கள் மனத்தைத் தொட்டுக் கேட்டுப் பாருங்கள்.

ஏழாலை என்னும் கிராமம் எனது தொகுதியிலுள்ள ஒரு கிராமம். மூன்று வருடங்களுக்கு முன் அக்கிராமத்துக்கு ஒரு தபாற்கந்தோர் அமைத்துக் கொடுப்பதாக அரசாங்கம் வாக்குறுதி யளித்தது. பணத்தைக்கூட ஒதுக்கியிருந்தது. அது மாத்திரமல்ல, அந்தத் தபால் நிலையத்தை எங்கே அமைக்க வேண்டும் என்று தீர்மானித்து அதற்காக இடத்தைக் கூடத் தெரிவு செய்தது. உப தபால் நிலைய அதிகாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்காக ஒரு சோதனையும் நடாத்தியது. ஆனால் இறுதியில் என்ன நடந்தது? 6, 7 கிழமைகளுக்கு முன் கௌரவ கலுகல்ல அவர்கள் தபால் அமைச்சராக இருந்த பொழுது எனக்கு தபாற் கந்தோர் அமைக்க முடியவில்லை, பணம் இல்லை என்று ஒரு கடிதம் அனுப்பியிருந்தார். ஆனைக்கோட்டைக் கிராமத்திலே சிறிய தெரு ஒன்றை அமைக்கும்படி பொது மராமத்து இலாகாவுக்கு எழுதியிருந்தேன். அது மிகவும் சிறிய ஒரு தெரு, அதை அமைக்க அதிக செலவுமாகாது. அதற்கும் பணம் இல்லை என்று எனக்கு கடிதம் எழுதியிருக்கிறார்கள். உடுவில் கிராமத்தில் ஒரு சிறிய பாலம் ஒன்றை அமைக்கும்படி எழுதினேன். அதற்கும் பணம் இல்லை என்று பதில் எழுதியிருக்கிறார்கள். ஒரு உப தபாற் கந்தோரை அமைக்க, ஒரு சிறிய தெருவை அமைக்க, ஒரு பாலத்தைத் திருத்தப் பணம் இல்லை பணம் இல்லை என்று கூறும் அரசாங்கம் நாலாயிரம் மாடி வீடுகள் கட்டப் போவதாகச் சொன்னால் யார் நம்புவார்கள்? யாரால் நம்ப முடியும் என்று கேட்கிறேன். இது பொது மக்களை ஏமாற்றுவதற்காகச் சொல்லப்படும் வெறும் பசப்பு வார்த்தைகள் என்பதில் சிறிதளவும் ஐயமேயில்லை.

கௌரவ சபாநாயகர் அவர்களே, நான் என்னுடைய பேச்சின் ஆரம்பத்தில் இந்த அரசாங்கம் தன்னால் செய்து முடிக்க முடியாது என்பதை நன்கறிந்தும், சில வாக்குறுதிகளை மக்களை ஏமாற்றுவதற்காகக் கொடுத்திருக்கின்றது என்று கூறினேன். அதில் ஒன்று தான் இது என்பதை நான் அரசாங்கத்துக்குக் கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக ஆயுள் வேதத்தைப் பற்றிச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ஆயுள்வேத வைத்தியத்தை அபிவிருத்தி செய்வோம் என்று அரசாங்கம் கூறுகின்றது. அதற்கு வேண்டிய ஆராய்ச்சிகளைச் செய்வோம், என்றும் தெரிவிக்கின்றது. இந்த நாட்டிலே மூன்று வகையான சுதேச வைத்தியங்கள் இருக்கின்றன என்பதை அரசாங்கம் அறியுமா அறியாதா என்று கேட்க விரும்புகின்றேன். சிங்கள மக்கள் கையாளும் வைத்தியம் ஆயுள்வேத வைத்தியம். தமிழ் பேசும் மக்கள் சித்த ஆயுள்வேத வைத்தியத்தைக் கையாளுகின்றார்கள். முஸ்லிம் மக்கள் யூனானி வைத்தியத்தைக் கையாளுகின்றார்கள். இந்த நாட்டில் வாழும் மக்கள் மூன்று வகையான வைத்தியத்தைக் கையாளும் போது அரசாங்கம் ஆயுள்வேத வைத்தியத்தைத்தான் அபிவிருத்தி செய்யும் என்று கூறுவதன் அர்த்தம் என்ன என்று கேட்க விரும்புகின்றேன். 1960-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17-ம் தேதி நான் இக் கௌரவ சபையிலே சித்த ஆயுள்வேத வைத்தியம் பற்றிச் சில வார்த்தைகள் பேசியிருக்கின்றேன். நான் பேசுகையில் 1947 ஆம் ஆண்டிலே யாழ்ப்பாணத்திலே சித்த ஆயுள்வேத வைத்திய சாலை ஒன்றையும் கல்லூரி ஒன்றையும் அமைக்க இக் கௌரவ சபை தீர்மானித்ததே, அது சம்பந்தமாக நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படாததேன் என்று கேட்டேன். அதற்குக் கௌரவ பாராளுமன்றக் காரியதரிசி கூறியதை ஆங்கிலத்தில் வாசித்துக் காட்ட விரும்புகிறேன்.

"I believe two Members from Jaffna spoke about Siddha Ayurveda in Jaffna. My Government is actively considering this proposal at this very moment. I would like to say that we may be moving the entire Siddha Ayurvedic branch to Jaffna, and also provide that branch with the necessary facilities for research". — [OFFICIAL REPORT, 18th November, 1960; Vol. 41, c. 2543.]

'இவ்விஷயம் பற்றி எனது அரசாங்கம் தீவிரமாக ஆலோசித்து வருகின்றது. சித்த ஆயுள் வேதக் கல்லூரியையும் வைத்தியசாலையையும் யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வரவேண்டிய நடவடிக்கைகளை எடுப்போம். கூடிய விரைவில் செய்து முடிப்போம்' என்று கௌரவ பாராளுமன்றக் காரியதரிசி அவர்கள் கூறினார். இது வரையில் ஏதாவது நடவடிக்கை எடுத்தீர்களா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. இராஜதுரை:

சுகாதார அமைச்சர் மாறி விட்டார்.

திரு. தர்மலிங்கம்:

சுதேச வைத்தியச் சபையில் பல ஆண்டுகளாக சித்த ஆயுள் வேத வைத்தியர்களுக்கு இரண்டு இடம் கொடுக்கப்பட்டு வந்தது. திருமதி விமலா விஜயவர்த்தன அவர்கள் அமைச்சராக வந்ததற்குப் பின்னர் அந்தச் சபையில் ஒருவருக்கே இடம் அளிக்கப்பட்டது. ஆனால் தற்போதைய புதிய ஆயுள் வேத வைத்தியச் சபையில் புதிய சுகாதார அமைச்சர் அவர்கள் சித்த ஆயுள்வேத வைத்தியத்திற்கு இந்த நாட்டில் இடம் இல்லை என்பது போல் ஒருவருக்கும் இடம் கொடுக்கவில்லை என்பதைக் கூற விரும்புகிறேன்.

(அடுத்த இதழில் முடியும்)

## அ. ஏ. சங்கத்தின் புதிய கிளை

கணக்காய்வுத் திணைக்களத்தின் அரசாங்க எழுதுவினைஞர் சங்கக் கிளை ஒன்று 7-8-63 புதன்கிழமை பிற்பகலில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. கூட்டத்திற்குத் திரு. எஸ். அருணாசலம் அவர்கள் தலைமை வகித்தார்கள்.

தாய்ச் சங்கத் தலைவர் திரு. செ. கோடீஸ்வரன் பி. ஏ. அவர்கள் பேசும் பொழுது தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களுக்கு ஒவ்வொரு தினமும் ஏற்பட்டுக் கொண்டு வரும் இடையூறுகளை மன உறுதியுடன் எதிர்த்து, உரிமைகளைப் பெறுவதற்கு ஒற்றுமையுடன் போராட வேண்டுமென்று கூறினார்.

கீழ்க் கண்டோர் அலுவலாளர்களாகத் தெரிவு செய்யப் பெற்றனர்:

தலைவர்: திரு. எஸ். அருணாசலம், துணைத் தலைவர்கள்: திரு. வி. கந்தசாமி, திரு. வி. இராமலிங்கம், செயலாளர்: திரு. ஜி. எஸ். அந்தோனிப்பிள்ளை, துணைச் செயலாளர்: திரு. எஸ். கணேசலிங்கம், பொருளாளர்: திரு. ஏ. ஞானசேகரம்.

செயற் குழு உறுப்பினர்கள்: திருவாளர்கள்: என். சபாரத்தினம், கே. குமரகுரு, எஸ். கதிர்காமத்தம்பி, கே. செல்வநாதன், வி. கே. சுப்பிரமணியம், ஆ. இராசரத்தினம், எஸ். சிவபாலன், சி. புண்ணியமூர்த்தி, என். பொன்னையா, எஸ். பொன்னுத்துரை.

செயலாளரின் நன்றியுரையுடன் கூட்டம் இனிது முடிவெய்தியது.

## பல்கலைக்கழகத்தில் த.அ.வா.மு. தலைவர் உரையாற்றுவார்

கொழும்பு, ஆகஸ்ட், 8

எதிர்வரும் 12ம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் நாலு மணியளவில் தமிழரசு வாலிப முன்னணித் தலைவரும் நியாயவாதியுமான திரு. சி. கதிரவேற்பிள்ளை பி. ஏ. அவர்கள் கொழும்பு சர்வகலாசாலை பொறியியல் மாணவர் மன்றத்தில் உரை நிகழ்த்துவார் என்று தெரிகிறது.

'இலங்கையின் அரசியல் எதிர்காலம்' என்ற தலைப்பில் அவரது உரை அமையும் என்றும் அறியப்படுகிறது.

## மொழியுரிமையும்....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்று சிங்களம் படிக்கச் சொல்பவர்கள் நாளை பௌத்தர்களாக மாறுங்கள் என்று சொல்ல மாட்டார்கள் என்பதை எப்படி நம்புவது?

எனவே இந்தச் சுயநலப் பேய்கள் விஷயத்தில் எப்போதும் எச்சரிக்கையாக இருங்கள், தமிழ் வாலிபர்களே! தமிழுரிமை பெறுவது தமிழர்கள் கையிற்றான் தங்கியுள்ளது. நம் மொழி வீழ்வதும் வாழ்வதும் நம்மால் ஆகக் கூடிய காரியந்தான். எனவே நாம் தமிழ் இனமாக, தனி இனமாக இந்த நாட்டில் வாழ வேண்டுமேயானால் குடியுரிமையும் வேண்டும், மொழியுரிமையும் வேண்டும். இவற்றிற்காக நாம் எப்போதும் போராடியே தீர வேண்டும்.

### மாவட்ட சபையும் மலைநாட்டு மக்களும்

மாவட்ட சபைகள் ஏற்பட்டால் மலைநாட்டுத் தமிழ் மக்கள் பாதிக்கப்படுவார்களேயென்று, நாம் சற்றுப் பயப்படுவதும் உண்மை தான். இருந்தாலும் அந்தந்த மாவட்ட சபைகளிலே எந்த எந்த மொழியில் காரியமாற்ற விரும்பினாலும் அதற்கு வேண்டிய வசதிகளை மாவட்ட சபைகள் மூலமாக அரசாங்கம் அளிக்க வேண்டும் என்று நமது தமிழரசுக் கட்சி வற்புறுத்தி வருகின்றது. அதுவே ஜனநாயக தர்மமாகும்.

தமிழில் காரியங்களையாற்றும் மாவட்ட சபைகள் தமிழ்ப் பிரதேசங்களில் இருந்தால், தமிழ்த் தெரியாத இதர மொழி பேசுவோர்களுக்கு அவர்கள் விரும்பும் மொழிகளிலே காரியமாற்றுவதற்கு மாவட்ட சபைகள் வசதியளிக்க வேண்டும். அதே போல, பிற மாவட்ட சபைகளும் பிற மொழிகளில் காரியங்களை ஆற்றுவதற்கு வசதிகள் செய்து கொடுக்க வேண்டும்.

இப்படியானதொரு முறையில்லாவிட்டால் இலங்கையின் இதர பகுதிகளில் பெரும்பான்மையினராக வாழும் தமிழர் நிலைதான் என்னவது? எனவே ஜனநாயகத்திற்கு முரணான எந்தக் காரியத்தையும் எதிர்த்து, தமிழரசுக் கட்சி போராடியே தீரும். எனவே, நாம் செய்ய வேண்டியதெல்லாம், நாமெல்லாம் ஒன்றுசேர்ந்து ஒரு கொடியின் கீழ் திரண்டு, தமிழரசுக் கட்சியின் கரங்களை வலுப்படுத்துவதேயாகும்.

## தமிழில் முகவரி

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

டியதின் அவசியத்தையும், எனது இலட்சியத்தையும் குறிப்பிட்டு எமக்குத் தமிழிலேயே முகவரி எழுத வேண்டுமெனத் தெளிவாக, தாழ்மையோடு எழுதிக் கொண்டேன்.

அதன் பின்னர் அவர் எனக்குத் தமிழிலேயே முகவரி எழுதுவது என்ற தீர்மானத்தை ஏற்படுத்திக் கொண்டு, அவ்வாறே வாரந்தோறும் தனித் தமிழிலேயே கடிதமும், அதன் முகவரியும் எழுதி வருகிறார்.

அத்தோடு தமிழ் தெரிந்த மேலை நாட்டவர்களை பேட்டி கண்டு அவர்கள் தமிழ் மொழி பால் கொண்டுள்ள பற்றுதல் பற்றியும் மேலை நாடுகளில் தமிழ் நூல் ஆராய்ச்சியாளர்களின் பேட்டி நிகழ்ச்சிகளையும் தந்து அவர்களை எமக்கு அறிமுகப்படுத்துவதோடு எம் தமிழ் மொழிக்கும் சிறந்த தொண்டாற்றி வருகிறார்.

—வெள்ளாளன்விளை விக்டர்

(இதயசூரியன்)

இறக்குவானை.


## இந்த எழுத்துக்கள்

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் 12 பொயிண்ட் ரோமன், 12 பொயிண்ட் போல்ட், 10 பொயிண்ட் ரோமன், 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும் சுதந்திரன் ரைப் பவுண்டரியில் உற்பத்தி செய்யப்பட்டவை.

6, 10, 12, 14, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களையும், அலங்கார எழுத்துக்களையும் வார்க்க முடியும்.

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்படும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. வேண்டியவர்கள் விவரத்துக்கும், விலைப்பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக் கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக் கொள்ளலாம்.

சுதந்திரன் ரைப் பவுண்டரி,

194 ஏ. பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு—12.




# செல்வத்துட் செல்வம் கல்விச் செல்வம்

## அழகுக் குறளில் வள்ளுவன் தரும் அமுதம்

— ஈஸ்வரி —

ஓர் ஆறு மலையில் உற்பத்தியாகிச் செல்லும்பொழுது தான் செல்லுமிடமெல்லாம் செழுஞ் சோலைகளையும், செந் நெற் கழனிகளையும் உருவாக்கி அளவிடற்கரிய பயனைத் தருகின்றது. அவ்வண்ணமே திருக்குறள் என்னும் தேனூறு திருவள்ளுவர் என்னும் மலையில் உற்பத்தியாகியது. இவ்வற்ருத ஜீவநதி தன்னை அணுகுவோர்க்கெல்லாம் அளவிடற்கரிய பயனை அளித்தது. அளித்துவருகின்றது. அளிக்கப் போகின்றது.

"கடுகைத் துளைத்து ஏழ் கடலைப் புகுத்தினுற் போன்று" சிறந்த அரும் பெரும் கருத்துக்களை ஈரடிக் குறள்களுள் புகுத்தி எக்காலத்தினருக்கும், எந்நாட்டினருக்கும், எச்சமயத்தினருக்கும் சம்மதமாய் நின்றிலங்கும் மதித்தற்கரிய மாணிக்கமான திருக்குறளை இயற்றிய திருவள்ளுவரின் ஜெயந்தி தினம் ஆனித் திங்கள் ஆரும் தினமாகும். ஒப்புயர்வற்ற கருத்துக்களை வைரங்களாகவும் வைடூரியங்களாகவும் கொண்டிலங்கும் திருக்குறட் பாமாலையை அணிந்த தமிழணங்கு தாங்கா உவகை கொள்கின்ருள்.

யாவர்க்கும் அறிவுரை அளித்த திருவள்ளுவர் மாணவராகிய எம்மை நோக்கி ஏதும் கூறவில்லையா? கூறியிருக்கின்ருர். கன்னித் தமிழில் கல்வியைப் பற்றி கற்கண்டும் கனிரசமும் நாணிக் கவிழும் வண்ணம் காந்தம்போற் கருத்தைக் கவர்ந்திழுக்கும் கவின் மிகு கருத்துகளை அளித்துள்ளார். அவற்றை அறிய வேண்டியது மாணவராகிய எம் கடமையாகும்.

### உயர்ந்த செல்வம் எது?

உலகில் உயர்ந்த செல்வமெது? பணமா? அறிவா? "பணம்" என்பர் சிலர். "அறிவு" என்பர் சிலர்.

கேடில் விழுச்செல்வங் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை

என நாயனுர் நவில்கின்ருர். கல்வியே அழிவற்ற செல்வம், மற்றவையெல்லாம் செல்வம் அல்லவென்று கூறுகின்ருர், அது உண்மையா? ஆம், உண்மைதான். உண்மையிற் சிறந்த கல்வி கற்றவனுக்கு மற்றச் செல்வங்களை அடைதல் எளிது. பணத்தைப் பெற அவன் தன் அறிவைக்கொண்டு நல்வழியில் முயலலாம். அறிவற்றவன் பணமிருப்பினும் தீய வழியில் செலவு செய்துவிடுவான். ஆகவே கற்ருேனுக்கு மற்றச் செல்வங்கள் செல்வமல்ல. கல்வியே உண்மையான செல்வம்.

"கேடில் விழுச் செல்வம் கல்வி" என்று செந்நாப் போதர் செப்புகின்ருர். கல்வி அழிவற்ற செல்வமென்கின்ருர். கல்வியை நாம் கற்றுவிடின் அதனை எதனுலும் அழிக்க இயலாது. எம்மிடமிருக்கும் பொருட் செல்வத்தைத் திருடன் திருடலாம். வெள்ளம் கொண்டு செல்லலாம். ஆனால் ஒருவன் கற்ற கல்வியை எதுவும் ஏதும் செய்திட முடியாது. கற்றவனுக்குக் கல்வி உற்ற துணையாய் நின்றுதவும். ஆகவே கல்விச் செல்வம் அழிவற்றது. எமக்குப் புறக் கண்களிலும் பார்க்க அகக் கண்களே கூடிய பயன் விளைவிக்கின்றன. புறக் கண்களால் நாம் காட்சிகளைக் காணலாம். ஆனால் அகக் கண்களுக்குத் தான் நல்லவை தீயவற்றைப் பகுத்துணர்ந்து எமக்கு நல்வழி காட்டும் சக்தி உண்டு.

### அகக்கண்

ஒருவன் தீய காரியங்களைச் செய்யின் 'கண் கெட்டவன்' என்று அவனைக் கூறுகின்ருர்கள். ஏன் பாரதியாரே நல்லவை தீயவை என்று பகுத்துணராது எல்லாவற்றையும் அழிக்கும் கூற்றுவனைக் 'கண் கெட்ட காலன்' என்று குறிப்பிடுகின்ருர். பாரதியார் பகர்ந்ததோ பூவுலசோர் புகழ்வதோ புறக்கண் கெட்டு விட்டதென்றல்ல; அகக் கண் அற்று விட்டதென்றே.

எனவே, இதினின்றும் அகக் கண்களே பயன் பயக்கும் கண்கள் என்றறிய முடிகிறது. இவ்வகக் கண்களை அளிப்பது கல்வி, எனவே கல்வி அற்றவர் கண் அற்றவர்கள். இதனை—

கண்ணுடையோர் என்போர் கற்ருேர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதார்

என்று பொய்யில் புலவர் புகழ்கின்ருர். எனவே, கல்வி கண்ணைப் போன்று மிக அத்தியாவசியமானது.

## நீவிர் அறிவீர்!

**கேள்வி**

[1] தமிழ் மூவேந்தரின் கொடிகள் எவை?
[2] 1910ம் ஆண்டில் தோன்றிய வால் வெள்ளியின் பெயரென்ன?
[3] புகையிலையை முதல் முதல், ஐரோப்பாவுக்குக் கொண்டு சென்றவர் யார்?
[4] தஞ்சாவூர் பெரிய கோயில் யாரால் கட்டப்பட்டது? அதன் சிறப்பு யாது?
[5] மின்சார அதிர்ச்சியைப் பரப்பக் கூடிய மீன் எது?

**விடை**

[1] பாண்டியனுக்கு மீன், சோழனுக்குப் புலி, சேரனுக்கு வில்.
[2] ஹலிஸ் வால் வெள்ளி.
[3] சேர் வால்டர் ரலி.
[4] இராச இராசன் எனும் சோழனுல். உச்சியில் 80 டன் எடையுள்ள தனிக் கல் வைக்கப்பட்டுள்ளது.
[5] விலாங்கு.

அனுப்பியவர்:
எம். பி. துரைராஜ்
தெனியாய.

## விவேகானந்தரின் போதனைகள்

தன்னம்பிக்கையை வளர்த்து வாருங்கள், வீர இளைஞர்களே! நீங்கள் ஏன் பிறந்தீர்கள் தெரியுமா? அரும் பெரும் காரியங்களைச் சாதிக்கவே. அந்த நம்பிக்கையை நழுவ விடாதீர்கள்.

வாலிப நண்பர்காள்! நீங்கள் பலம் உள்ளவர்களாகுங்கள். உங்களுக்கு என் புத்திமதி அதுவே யாகும். கீதையை விட விளையாட்டு உங்களுக்குச் சுருக்கு வழி.

நீங்கள் பிறருக்கு அளிக்கக் கூடிய விலைமதிக்க முடியாத பெருஞ் செல்வம் உங்களிடம் உள்ளது. அந்தப் பெருஞ் செல்வத்தை உலகிற்கு வாரி வழங்குங்கள்,

எப்போதும் பிறரைக் குறை கூற வேண்டாம். ஆக்க முறையைக் கடைப்பிடி. நீ சொல்ல வேண்டியதைப் போதி. அத்துடன் நின்றுவிடு.

தொடக்கத்திலேயே பெரிய பெரிய திட்டங்களைப் போட்டுக் கொண்டு கிளம்ப வேண்டாம். நிதானமாக ஆரம்பியுங்கள். மேலும் மேலும் நிதானமாக முன்னேறுங்கள்.

நீ ஏன் வீண் விவாதங்களில் தலையிட்டுக் கொள்ள வேண்டும்? பலர் பல அபிப்பிராயங்களைக் கூறலாம். அதற்காக வருந்தாதே. பொறுமையுடன் கேட்டுக் கொள். ஏன் தெரியுமா? பொறுமை, தூய்மை, விடா முயற்சி இவைகள் தான் நிச்சயம் வெற்றி பெறும்.

உங்களுடைய பலங் கொண்டு நில்லுங்கள். ஆனுல் இயன்றவரை வெளியிலிருந்து வலிமை பெற்று அதை உங்களுடையதாக்கிக் கொள்ளுங்கள். வெளிநாட்டார் ஒவ்வொருவருடமிருந்தும் உங்களுக்கு உபயோகமான விஷயங்களைக் கற்றுக் கொள்ளுங்கள்.

தொகுத்தவர்:
செல்வி மும்தாஜ்
மாத்தளை.

## தெரியுமா?

இவற்றின் பெயர்கள் உங்களுக்குத் தெரியுமா? (i) ஆண் யானை (ii) ஆண் குதிரை (iii) ஆண் ஆடு (iv) ஆண் நாய் (v) ஆண் குரங்கு (vi) பெண் மான் (vii) பெண் யானை (viii) பெண் சிங்கம் (ix) பெண் கோழி (x) பெண் புரு. (விடை: 5-ம் பத்தியில் பார்க்கவும்)

## என்ன பூ தெரியுமா?

— ஜெயராணி சபாபதிப்பிள்ளை —

சின்னச் சின்ன பூவாம்
சிறிய நல்ல பூவாம்
வட்ட மான பூவாம்
சுட்டுத் தின்னும் பூவாம்!

தட்டை யான பூவாம்
தகதகக் கும் பூவாம்
தின்ன நல்ல பூவாம்
தலையிற் சூடா(ப்) பூவாம்!

சின்னச் சின்ன பூவாம்
தின்ன நல்ல பூவாம்
என்ன பூ தெரியுமா?
சொன்ன பின் புரியுமா?

[illegible]

## பெருமை கொண்டு வாழுவீர்

—நீலவண்ணன்—

சின்னச் சின்ன பாலர்காள்
செய்தி ஒன்று சொல்லுவேன்
சின்னச் செய்தி யானுலும்
செவி மடுத்துக் கேளுங்காள்

அன்னை தந்தை காட்டி விட்ட
அறிவுக் கூடம் தன்னிலே
உன்னைச் சிடனுக்கிக் கொண்ட
ஆசானும் ஒரு தெய்வமாம்

கல்விக் கூடம் செல்லுவீர்
கலைகள் கற்று வெல்லுவீர்
சொல்லும் ஆசான் மணிமொழியை
சிரமேற் கொண்டு செல்லுவீர்

கற்ற கல்வி வழி நின்று
களங்க மற்ற நெறிகொண்டு
பெற்ற தாயின் உள மகிழ
பெருமை கொண்டு வாழுவீர்.

## சத்தியாக்கிரகம் பற்றி அண்ணல் காந்தி

தைரியமும் ஆண்மையும் இல்லாதவன் ஒருகாலும் சத்தியாக்கிரகி ஆக முடியாது.

சத்தியாக்கிரகியானவன் எப்போதும் போருக்குத் தயாராயிருக்க வேண்டும். அதே போலச் சமரசத்திலும் ஆர்வமுடையவனு யிருக்க வேண்டும். கௌரவமான முறையில் சமாதானத்திற்குக் கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் அவன் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

நாம் ஒப்பந்தத்தை நிறைவேற்ருத போது அரசாங்கத்திற்கு நடவடிக்கை எடுக்க உரிமை இருப்பது போல அவர்கள் நிறைவேற்ருத போது சத்தியாக்கிரகத்தைக் கடைப்பிடிக்க நமக்கும் உரிமை யுண்டு.

பூரண சுயராஜ்யம் அடைவதற்கு அகிம்சை ஒன்றே வழி என முழு நம்பிக்கை கொண்டவர்களாலேயே சட்ட மறுப்புப்போராட்டம் நடத்தப் பட வேண்டும்.

சத்தியாக்கிரகம் என்பது ஒரு குழுக்குறியன்று, அது வாழ்விற்குரிய ஒழுங்கு முறை. சத்தியமில்லாத ஒவ்வொன்றும் உயிரில்லாப் பிணம் போலத்தோன்றுகிறது.

சத்தியாக்கிரகம் என்னும் இக்கூரிய பட்டாக்கத்தி துருப்பிடிப்பதில்லை.

தொகுத்தவர்:
"சிந்தனைச் செல்வி"
ஏழாலை மேற்கு.

## வாழ்...வாழாதே!

அடக்கமாய் வாழ்—
ஆனுல் ......அடிமையாய் வாழாதே!

ஆண்மையுடன் வாழ்—
ஆனுல் ......ஆணவத்துடன் வாழாதே!

இனியவனுக வாழ்—
ஆனுல்......இளித்த வாயனுய் வாழாதே!

ஈகையுடன் வாழ்—
ஆனுல்......*ஈகமுடன் வாழாதே!

உணர்ச்சியுடன் வாழ்—
ஆனுல் ......உன்மத்தனுய் வாழாதே!

*ஈகம்—இச்சை

18—8—63ல்
ஆரம்பமாகிறது!
மாஸ்டர் சிவலிங்கம்
அளிக்கும்
மர்மத் தொடர் கதை
புதுமைத் திருடன்

## புதிய மருமக்கள்

3739 மு. மகாதேவன், ஆத்தியடி, பருத்தித்துறை.
3740 பொ. ஜீவநாதன், ஞான பூரண வாசா, கரவெட்டி.
3741 செ. சிவானந்தன், 2ம் குறிச்சி, மாளிகாவத்தை வீதி, காரைதீவு.
3742 ஜெகநாதன் திருநாவுக்கரசு, ரொக்ஹில் தோட்டம், பதுளை.
3743 சி. சண்முகலிங்கம், 70, பிரதான வீதி, திருமலை.
3744 த. மாரிமுத்து, 338, பிரதான வீதி, மாத்தளை.
3745 வி. கமலன், 'லேடி மக்கல்லம் டிரைவ்', நுவரெலியா.
3746 க. மனோகரன், ஊரிக்காடு, வல்வெட்டித்துறை.
3747 ச. சிவச்செல்வம், சைவப்பிரகாச வித்தியாசாலை, வவுனியா.
3748 சேவியர் ஜெனி, 53/8, கன்னுத் தெரு, கொழும்பு-13.

## உங்கள் சிந்தனைக்கு

ஒரு மாதகாலம் அழுது புலம்புவதை விட, அரை மணி நேரம் உழைப்பிலே ஈடுபட்டால் போதும். அதிக மனமகிழ்ச்சி ஏற்படும்; துர் எண்ணங்கள் ஒழியும்; தொல்லைகள் தீரும்.

## தெரியுமா?

(விடை)

(i) களிறு (ii) பரி (iii) கடா (iv) சுணங்கன் (v) கடுவன் (vi) பிணை (vii) பிடி (viii) சிம்மம் (ix) பெட்டை (x) மாடப்புரு.

தொகுத்தவர்:
'தமிழழகன்',
பசறை.

# கழகச் செய்திகள்

### திருவள்ளுவர் நினைவு விழா

அல்லைப்பிட்டி வாகீசர் சனசமூக நிலையத்தின் ஆதரவில் சென்ற திங்கட்கிழமை நடைபெற்ற திருவள்ளுவர் நினைவு விழாவிற்கு மண்டைதீவு முன்னைநாள் கிராமாதிகாரி திரு. மு. நவரெத்தினராஜா அவர்கள் தலைமை தாங்கினுர்.

சைவப் புலவர், வித்துவான் க. வேந்தனுர், தமிழ் விரிவுரையாளர், பரமேஸ்வராக் கல்லூரி, யாழ்ப்பாணம் அவர்கள் பேசும் பொழுது வள்ளுவரையும், இளங்கோவையும் ஒப்பிட்டு "வள்ளுவர் ஒரு மனிதனின் குறைகளில், குண சுபாவங்களில் இருந்து இந்த திருக்குறளாம் தெய்வ நூலைப் படைத்தார். இளங்கோ கண்ணகியின் கால்களில் உள்ள சிலம்பில் இருந்து தெறித்த ஒரு மணியில் இருந்து சிலப்பதிகாரமாம் காப்பியத்தைத் தந்தார்" என்ருர்.

திரு. கி பி. ஹரன், ஆசிரியர், "ஈழநாடு" அவர்கள் பேசும் பொழுது வாகீசர் பின்னையவர், வள்ளுவர் முன்னையவர், எனவேதான் வாகீசரின் தேவார திருமுறைகளில் வள்ளுவன் கருத்தை நாம் காண முடிகிறது என்ருர்.

அடுத்துப் பேசிய திரு. க. பே. முத்தையா, ஆசிரியர் "சமூகத் தொண்டன்" அவர்கள் "வள்ளுவரும் குடியியலும்" என்னும் விடயம் பற்றி வெகு சிறப்பாக எடுத்துக் கூறினுர்.

இதையடுத்துத் திருவாளர்கள்: ஆசிரியர் தி. தில்லைச்சிவன், வை, கா. தளையசிங்கம் — கிராம சேவையாளர் அல்லைப்பிட்டி, இவர்கள் உட்பட பல மாணவர்களும் உரை நிகழ்த்தினர்.

அல்லைப்பிட்டி, பராசக்தி வித்தியாசாலை மாணவ, மாணவிகளின் "வள்ளுவர்" கீதங்களுடன், நிலையத் தலைவர் திரு. ந. சோதிவேல் அவர்களின் நன்றியுரையுடன் விழா நிறைவுற்றது.

---

### நுவரெலியாவில் முத்தமிழ் விழா

நுவரெலியா புனித சவேரியார் கல்லூரி தமிழ் மாணவ மன்றத்தின் சார்பில் இம்மாதம் 5ந் திகதி கல்லூரி மண்டபத்தில் விமரிசையாக முத்தமிழ் விழா கொண்டாடப்பட்டது. விழாவுக்கு வித்தியாதரிசகர், திரு. குணரத்தினம் தலைமை தாங்கினுர்.

விழாவில் முக்கியஸ்தராகக் கலந்து கொண்ட கலாநிதி சு. வித்தியானந்தன் பேசும் பொழுது, 'தமிழுக்கு இன்று நேர்ந்திருக்கும் நிலைமையை மாற்றுவதற்கு மாணவர்களாகிய நீங்கள் தாய் மொழிக்காக தயங்காமல் தியாகம் செய்ய முன்வர வேண்டு' மென்று கேட்டுக் கொண்டார். மற்றும் விழாவில் மாணவர்களின் பரிசு பெற்ற உரைகளும், பாடல்களும் நிகழ்ந்தன. மாணவர்களின் இன்னிசை விருந்தொன்றும் நடனங்களும் நாடகமொன்றும் நடைபெற்றன.

பரிசு பெற்றவர்கள்:-

பேச்சுப் போட்டி: 1. எஸ். ராஜாராம், 2. பாலகிருஷ்ணன், 3. இரா. பூபன்.

இன்னிசைப் போட்டி; 1. மரியதாஸ், 2. பேனுட், 3. ஜேசுதாசன்.

நாடகம்:- 1. செல்வன். சோமசுந்தரம். (முதலாவது மட்டும்)

---

### சிலப்பதிகார விழா

21-7-63-ல் கம்பன் கலைக் கழகத்தினரால் வீமன்காமம் ஆங்கில பாடசாலை மண்டபத்தில் திரு. ஏ. எஸ். சுந்தரராஜ ஐயங்கார் பீ. ஏ. அவர்கள் தலைமையில் மிக விமரிசையாகச் சிலப்பதிகார விழா நடைபெற்றது.

மாவைக் கந்தன், இராசகோபுர வாயிலில் இருந்து இனிய நாதசுர இசையுடன், அறிஞர்களும், பிரமுகர்களும் புடை சூழ ஏட்டுச் சுவடி ஊர்வலம் ஆரம்பமாகி, சிறப்பாக, விழா மண்டபத்தை வந்தடைந்தது.

திருவாளர்கள் பண்டிதர் எஸ். இராமச்சந்திரன், தங்கம்மா அப்பாக்குட்டி, வித்துவான் க. வேந்தனுர் ஆகியோர் உரை நிகழ்த்தினுர்கள்.

இலக்கிய விருந்தைத் தொடர்ந்து இசைக் கலை நிகழ்ச்சியில், இந்திய நாதசுர வித்துவான் அபிராமி கணேசன், சின்னராசா குழுவினர், ஈழத்து நாதசுர மன்னன் என். கே. பத்மநாதன், ஆகியோரின் நாதசுர, ?வில் கச்சேரி இடம் பெற்றுச் சிறப்பித்தன.

கலையரசு சொர்ணலிங்கம் குழுவினரின் 'சோக்கிரடீஸ்' என்னும் நாடகம் உணர்ச்சி மிக்க நடிப்புடன் நடைபெற்றது.

திரு. ஆ. கு. சிவபாலசுந்தரம்பிள்ளை அவர்கள் வரவேற்புரையும், பண்டிதர் சு. சச்சிதானந்தன் அவர்கள் வாழ்த்துரையும், பண்டிதர் திரு. சங்கரப்பிள்ளை அவர்கள் பாராட்டுரையும், திரு சோ. இ. ஞானசுந்தரம் அவர்கள் நன்றியுரையும் நல்கினர்.

இசை மணி எம். ஆனந்தசிவம் இறைவணக்கம் பாடினுர்.

---

### இலங்கை அருந்ததிய வாலிபர் முன்னேற்றச் சங்கம்

சென்ற 4-8-63 ஞாயிறு மாலை 6 மணிக்குத் தலைமைச் சங்கப் பணிமனையில் நடைபெற்ற இலங்கை அருந்ததிய வாலிப முன்னேற்றச் சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் நடைபெற்ற பொழுது பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்:- தலைவர்: திரு. கடக்கரை, உப தலைவர்: திரு. வி. குருசாமி, செயலாளர்: திரு. ஏ. ஈ. மூர்த்தி, உப செயலாளர்: திரு. இரா. சுப்பிரமணியம், பொருளாளர்: திரு. கி. பொன்னம்பலம், உபபொருளாளர்; திரு. எஸ். முத்தையா, சங்க ஆலோசகர்: திரு. எஸ். கே. மாடசாமி, சங்கப் பரிசோதகர்: திரு. க. மனேகரன். மேலும், நிர்வாகத்தர்கள் உட்பட, திரு. எம். மணிமுத்து, திரு. வி. சந்தணராஜா, திரு. வி. வேதமாணிக்கம் ஆகியோரைக் கொண்ட 11 பேர்களடங்கிய செயற்குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

---

### சங்கானை இளைஞர் கழகம்

சங்கானை இளைஞர் கழகத், தின் செயற்குழுக் கூட்டம் சங்கானை இலுப்பத்தான் முருக மூர்த்தி கோவில் மண்டபத்தில் 30-7-63 ஞாயிறு கழகத் தலைவர் திரு. இ. நா. இராசசேகரம் தலைமையில் கூடியது. பின் வரும் தீர்மானங்களும் சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

சங்கானை இலுப்பத்தான் முருக மூர்த்தி கோவிலுக்கு எதிரே உள்ள காணியில் சங்கானை இளைஞர் கழகத்தின் சன சமூக நிலையக் கட்டிடம் அமைப்பதற்கு அத்திவாரக் கல் நாட்டுவதற்காக, வட்டுக் கோட்டைப் பிரதிநிதி திருவாளர் அ. அமிர்தலிங்கம் அவர்கள் சுகவீனம் காரணமாக ஆஸ்பத்திரியில் இருப்பதனுல்,—உடுவில் பாராளுமன்றப் பிரதிநிதி திருவாளர் வி. தருமலிங்கம் அவர்களை அழைப்பதென்று தீர்மானிக்கப்பட்டது.

கட்டிடத்திற்குச் சங்கானை வாழ் தமிழ் பேசும் மக்களிடையே நிதி திரட்டப்பட்டு இருந்தாலும் அந்நிதி கட்டிடத்திற்குப் போதாமையால் கட்டிட நிதிக்காக ஒரு திரைப்படம் எடுத்து நடாத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

பின் வருவோர் புது வருடப் பதவியாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர் திரு. இ. நா. இராசசேகரம், துணைத் தலைவர்: க. பத்மராஜன், செயலாளர், கு. பஞ்சரத்தினம், துணைச் செயலாளர் அ. அ. றெுபேட், பொருளாளர் நா. துரைரத்தினம், பரிசோதகர்கள் பொ. செல்வநாதன், ப. கந்தையா.

திருவாளர்கள் க. ப. நீலகண்டர், நா. நடராசா, இ. பரராசசிங்கம், இ. கந்தசாமி, செ. நவநீதநாதன், ப. கந்தையா, வே. சேதுபதி, பொ. செல்வநாதன், கு. திருநாவுக்கரசு, இவர்கள் ஆட்சிக் குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

---

### கட்டைக் காடு கிராம முன்னேற்றச் சங்கம்

கட்டைக்காடு கிராம முன்னேற்றச் சங்கக் கூட்டம் ஜுலை 21-ம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணியளவில் கட்டைக்காடு றோ. க. பாடசாலை மண்டபத்தில் செ. எலியாஸ் தலைமையில் ஆரம்பமாகியது. இவ்வருட புதிய உத்தியோகத்தராய் தெரிவு செய்யப்பட்டோர் விபரம்:—

தலைவர்: செ. எலியாஸ், துணைத் தலைவர்: க. செபஸ்தியாம்பிள்ளை, செயலாளர்: ம. பிலிப்பு, துணைச் செயலாளர்: க. மரியாம்பிள்ளை, பொருளாளர்: அ. சவரிமுத்து.

பன்னிரண்டு பேர் கொண்ட நிர்வாகசபை ஏகமனதாய் தெரிவுசெய்யப்பட்டது. தா. அருளானந்தம், கொ. அ. ஸ்ரனிஸ்லாஸ் ஆகியோர் சங்க வளர்ச்சி, நன்மை என்பன பற்றிப் பேசினர். தலைவரின் நன்றியுரையுடன் கூட்டம் 11-30 மணிக்கு முடிவுற்றது.

---

### கிராம அதிகாரிக்கு பிரியாவிடை

குருக்கள் மடம், செட்டிபாளையம் ஆகிய கிராமங்களுக்கு கடந்த பதினைந்து ஆண்டுகள் கிராம அதிகாரிமாகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற திரு. சா. இளையதம்பி அவர்கட்கு செட்டிபாளையம் பொது மக்களால் பிரியாவிடை அளிக்கப்பட்டது.

பிரியாவிடை வைபவம் செட்டிபாளையம் கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் திரு. பி. பொன்னையா, அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு. சா, இளையதம்பியின் சேவையைப் பாராட்டி, செட்டிபாளையம், அரசினர் சிரேஷ்ட பாடசாலை அதிபர் திரு. எஸ். கார்த்திகேசு, திரு. வெ, லிங்கநாதன் ஆகியோர் பேசினர். திரு. இளையதம்பி அவர்கட்கு பிரிவு உபசாரப் பத்திரம் வாசித்து அளிக்கப்பட்டு, அன்பளிப்பும் வழங்கப்பட்டது.

---

### மாணவ முத்தமிழ் மன்ற பேச்சுப் போட்டி முடிவுகள்

எட்டியாந்தோட்டை புனித கபிரியேல் கல்லூரி மண்டபத்தில் கடந்த 27-7-63 திகதி சனிக்கிழமை மாணவர் முத்தமிழ் மன்றத்தால் நடாத்தப்பட்ட பேச்சுப் போட்டி முடிவின் விபரங்கள்:

**மேற்பிரிவு ஆண்கள்**

1-வது: செல்வன் டி. தேவராஜ் (தங்க இல்லம்) 2-வது: செல்வன் சி. கே. முருகேசு, (பச்சை இல்லம்)

**மேற்பிரிவு பெண்கள்**

1-வது: செல்வி சி. மேரி லில்லி (சிவப்பு இல்லம்) 2-வது: செல்வி எம். மனேகரி (பச்சை இல்லம்)

**கீழ்ப்பிரிவு ஆண்கள்**

1-வது: செல்வன் வி. மதிமோகன கிருஷ்ணன் (தங்க இல்லம்) 2-வது: செல்வன் எஸ். சுப்பிரமணியம் (சிவப்பு இல்லம்)

**கீழ்ப்பிரிவு பெண்கள்**

1-வது: செல்வி எஸ். சாவித்திரி (பச்சை இல்லம்) 2-வது: செல்வி பி. செபமாலை மேரி (சிவப்பு இல்லம்)

---

### உதய சூரியன் கலாமன்றம் நிர்வாகிகள் தெரிவு

இரத்தினபுரி-இரம்புக்கந்தை தோட்டத்தில் உதய சூரியன் கலாமன்ற தேர்தல் கூட்டம் தோட்டக் கமிட்டித் தலைவர் திரு. இ. சுப்ரமணியம் தலைமையில் 28-7-63ல் நடைபெற்றது.

தலைவர் திரு. மா. இரங்கசாமி செயலாளர் திரு. பெ. கதிர்வேல், துணைச் செயலாளர்கள், திரு. இ. சுப்ரமணியம், திரு. பெ. ஆறுமுகம், திரு. த. சுப்பிரமணியம், பொருளாளர் திரு. ஐ. ஐயன்பெருமாள், நிர்வாக உறுப்பினர்கள்: திருவாளர்கள் சு. கு. வேலு, வை. வையாபுரி, கா. பழனியாண்டி, எஸ். பெரியசாமி, ஆ. மு. கேசவன், மு. நாகப்பன், சி. வீரப்பன், நா. கேசவன், ச. கதிர்வேல் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

---

### சுந்தர மூர்த்தி நாயனுர் குரு பூசை

கொம்பனித் தெரு சைவ முன்னேற்றச் சங்கத்தின் ஆதரவில் 28-7-63 மாலை 6-30 மணிக்கு கொம்பனித் தெரு சிவசுப்பிரமணிய கோவில் மண்டபத்தில் உயர் திரு. கு. பாலசிங்கம் அவர்களின் தலைமையில் சுந்தரமூர்த்தி நாயனுர் குரு பூசை கொண்டாடப்பட்டது.

பூசையுடன் ஆரம்பமான கூட்டத்தில் சங்க மாணவிகள் பக்திப் பாடல்கள் பாடினர். திருவாளர்கள் கோவை மணி, க. ரவீந்திரன், சு. இளங்கேஸ்வரன், தட்சணுமூர்த்தி, ஆகியோர் உரை நிகழ்த்தினுர்கள்.

---

இலங்கையர் கோன்

## இரண்டாவது நினைவு விழா

## சிறுகதைப் போட்டி

இலங்கையர்கோன் இரண்டாவது நினைவு விழாவையொட்டி நடைபெறவிருக்கும் சிறுகதைப் போட்டி விபரங்கள், விதிகள் பின்வருமாறு:

பத்து வருடங்களுக்கு முன்பு வாழ்ந்த ஒரு தமிழ் எழுத்தாளனுடைய வாழ்க்கையைப் பின்னணியாக வைத்து கதை புனையப்பட வேண்டும்.

ஒருவர் எத்தனை கதை வேண்டுமானுலும் அனுப்பலாம்.

பெயரையும் விலாசத்தையும் கதையின் மேல் பகுதியில் எழுதாது புறம்பாக ஒரு துண்டில் எழுத வேண்டும்.

யார் வேண்டுமானுலும், எந்நாட்டவராயினும் கதைகளை அனுப்பி வைக்கலாம். சொந்தக் கற்பனையாக இருக்க வேண்டும். தழுவலாகவோ முன்பு வெளி வந்தவைகளாகவோ இருக்கக் கூடாது. புள்ஸ்காப் தாளில் நான்கு பக்கங்களுக்கு குறையாமலும், ஆறு பக்கங்களுக்கு மேற்படாமலும் கதைகள் இருக்க வேண்டும்.

பரிசு பெறும் கதைகளுக்கு முறையே ரூ. 100/- 60/- 40/- ரொக்கமாக வழங்கப்படும்.

பிரபல்யமான இலங்கைச் சிறு கதை எழுத்தாளர்கள் மூவர் பரிசுக்குரிய கதைகளைத் தெரிந்தெடுப்பார்கள்.

பரிசுகள் ஏழாலை மேற்கில் நடக்கவிருக்கும் இலங்கையர் கோனின் 2வது நினைவு விழாவில் வைத்து வழங்கப்படும்.

கதைகள் செப்டம்பர் 30ம் திகதிக்கு முன்பு காரியதரிசி, "இலங்கையர் கோன்" விழாக் குழு, தமிழ் குடி கொண்டபுரம், ஏழாலை மேற்கு, சுன்னுகம் என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

---

## 'சுதந்திரன்' புதிய சந்தா விபரம்

தபால் கட்டணம் அதிகரித்திருப்பதன் காரணமாக, பின்வருமாறு சந்தா உயர்த்தப்பட்டிருக்கிறது.

| | |
|---|---|
| ஒரு வருடம் | ரூபா 14-00 |
| ஆறு மாதம் | ரூபா 7-50 |

நிர்வாகி
'சுதந்திரன்'

செல்லமஹால் [கொட்டாஞ்சேனை]
கெயிட்டி [கொட்டாஞ்சேனை]
வின்ஸர் (யாழ்ப்பாணம்) நெல்சன் (திருகோணமலை) இம்பீரியல் (மட்டக்களப்பு)
இம்பீரியல் (இரத்தினபுரி) ரீகல் (கம்பளை) தாஜ்மஹால் (மாத்தளை)
ஆகிய திரைகளில்

**இப்பொழுது நடைபெறுகிறது!**

**பத்மினி பிக்சர்சாரின்**

# பலே பாண்டியா



புரட்சிகரமான புதுப் புது
வேடங்களில்
நடிகர் திலகம்
**சிவாஜி கணேசன்**
தோன்றும்
புதுமைச் சித்திரம்!

பாடல்கள்:
கவிஞர் கண்ணதாசன்

இசை:
விஸ்வநாதன்-ராமமூர்த்தி



**சிலோன் தியேட்டர்ஸ் திரைகளுக்கு வரும்**
**தீஞ்சுவை ஓவியங்கள்!**

கமலா லட்சுமணன்,
சாவித்திரி, ஜெமினி கணேசன்
தோன்றும்
**கொஞ்சும் சலங்கை**
(பலவர்ணம்)

எம். ஜி. ராமச்சந்திரன், தேவிகா
நடித்த
**ஆனந்த ஜோதி**

ஆனந்தன், குமாரி சச்சு,
இ. வி. சரோஜா அசோகன்
நடிக்கும்
**வீரத் திருமகன்**

## 2வது வெற்றி வாரமாக காண்பிக்கப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) மொடர்ன் (பதுளை)
மொடர்ன் (பண்டாரவளை) ஸ்ரீகிருஷ்ணா (திருகோணமலை) விஜிதா (ஹட்டன்) ஜெமினி (ராகலை)

உள்ளத்தைத் தொடும் உருக்கமான குடும்பப் படம்! உணர்ச்சியின் விளிம்பைத் தொடும் சம்பவங்கள்! பானுமதியின் சீரிய நடிப்பைக்காட்டும் சித்திரம்!

**சென்னையில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய,**
**ஜனாதிபதியின் பரிசு பெற்ற படம்.**

பானுமதி அன்னையில் நடித்ததற்காக 1962ம் ஆண்டு சிறந்தநடிகை எனப் பாராட்டுப் பெற்றவர்.



**பானுமதி, எஸ். வி. ரங்காராவ்,**
**சௌகார் ஜானகி, சந்திரபாபு**
மற்றும் பலர் நடித்த

# அன்னை



டைரக்ஷன்:
**கிருஷ்ணன் பஞ்சு**

## தியாக ஒலி எழுப்பும் 2வது வாரம்!

**சென்ட்ரல்** (மருதானை) **ராணி** (யாழ்ப்பாணம்) **ராஜேஸ்வரா** (மட்டக்களப்பு) **ஜோதி** (திருகோணமலை) **லிபர்ட்டி** (பதுளை)



அழகு அழகு என்று அழகைத் தேடி அலைகின்ற உலகம் நல்ல குணத்தைப் புரிந்து கொள்வதே இல்லை. அழகற்ற அருணகிரியின் தியாகத்தின் ஒலிதான்

ஏ. எல். எஸ். தயாரித்த

# மணி ஓசை



கல்யாண்குமார்-எம். ஆர். ராதா-விஜயகுமாரி-புஷ்பலதா முதலியோர் நடித்தது.

பாடல்கள் : கண்ணதாசன்
இசை : விஸ்வநாதன்-ராமமூர்த்தி



இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு, பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1963-ம் வருடம் ஒகஸ்ட் மாதம் 11ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.